2017 மே 30
செவ்வாய்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ரமழான் பிறை 04 · பக்கங்கள் 12 · மணி 03 · ஒளி 081

NAVAMANI DAILY · නවමණි දිනපතා
QD / 154 / NEWS / 2017

# நவமணி

தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

ஹிஜ்ரி 1438 ரமழான் பிறை 04 - மே 30, செவ்வாய்

## ரமழான் தொழுகை நேரங்கள்

| ஸ.முடிவு | சுபஹ் | சூ.உதயம் | ளுஹர் | அஸர் | மஃரிப் | இஷா |
|---|---|---|---|---|---|---|
| 04:16 | 04:32 | 05:54 | 12:09 | 03:35 | 06:23 | 07:39 |



## பொதுபலசேனாவின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த தலையிடுங்கள்

04



## சம்பியன் கிண்ண பயிற்சி போட்டி: நியூசிலாந்தை வென்றது இந்தியா

12

### புத்தர் சிலை உடைப்பு:

## சந்தேக நபர் பொலிஸிடம் ஒப்படைப்பு

கொட்டாஞ்சேனை புளூமெண்டல் வீதியிலுள்ள புத்த பெருமானின் சிலை ஒன்று நேற்று அதிகாலை தாக்கப்பட்டுள்ளது. வாகனம் ஒன்றில் வந்த ஒருவரால் அழைத்து வரப்பட்ட ஒருவர் புத்தரின் சிலையை தாக்கி உடைத்து அதற்குள் இருந்த பௌத்த கொடிகளையும் கிழித்தெறிந்துள்ளார்.

அருகிலுள்ள பள்ளிவாசல் காலை சுபஹுத் தொழுகையை நிறைவேற்றி வந்தவர்களுக்கும்

11 »»»»



# இலங்கையை கடந்தது 'மோரா' பங்களாதேஷை நோக்கி நகர்வு

■ அ.அருண் பிரசாந்த்

வங்காளவிரிகுடாவில் ஏற்பட்டுள்ள மோரா எனும் சூறாவளியினால் இலங்கைக்கு எவ்வித பாதிப்பும் கிடையாது என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மத்திய வங்காள விரிகுடாவின் கிழக்குப் பகுதியில் ஏற்பட்டிருந்த தாழமுக்கம், சூறாவளியாக மாற்றமடைந்தமையால் இலங்கைக்கும் தாக்கம் ஏற்படும் என்று எச்சரிக்கப்பட்டிருந்த நிலையிலேயே மேற்படித் திணைக்களம் இவ்வாறு குறிப்பிட்டது.

மோரா என்று தாய்லாந்து நாட்டினால் பெயரிடப்பட்டுள்ள இந்த சூறாவளியானது வங்காளவிரிகுடாவிலிருந்து பங்களாதேஸ் நாட்டை நோக்கி பயணித்தமையால் நாட்டின் கரையோரப் பகுதிகளில் நேற்றைய தினம் சற்று காற்றுடன் கூடிய மழை பெய்தது.

எனினும், சூறாவளியானது தற்போது நாட்டை விட்டு வெகுதொலைவில் இருக்கின்றமையால் பாதிப்புக்கள் ஏற்படக் குறைவு என்றும் கரையோரப் பகுதிகளில் மட்டும் 60-70 கிலோமீற்றருக்கு காற்றின் வேகம் அதிகரிக்கும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது.

அத்தோடு, இன்று மேல், சப்ரகமுவ, தெற்கு, மத்திய, வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல், மாகாணங்களில் நாளைய தினமும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என தெரிவித்துள்ள இத்திணைக்களமானது மலையகத்தின் மேற்குச் சாய்வுப் பகுதிகள் உள்ளிட்ட

11 »»»»

### அகவை 73 இல்

## மல்வத்தை மகாநாயக்க தேரர்



மல்வத்தை மகாநாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரின் பிறந்த தினம் இன்று இடம்பெறுகின்றது. இதனையிட்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

11 »»»»

### வெள்ள நிவாரண பணியில்

## கொழும்பு நகர பள்ளிவாசல்கள்

■ ஆதில் அலி சப்ரி

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமாவின் கிளைகளுடன் இணைந்து தேவையான உதவி நடவடிக்கைகளை

11 »»»»

### முஸ்லிம் திணைக்களத்தின்

## இப்தார் நாளை இடம்பெறாது

■ எம்.எஸ்.எம். ஸாகிர்

புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நாளை (31) புதன்கிழமை இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்ட 'இப்தார் நிகழ்வு' நாளை இடம்பெறாது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள மழை, வெள்ளம், மண்சரிவு, போன்ற அசாதாரண காலநிலை தொடர்பான நிலைமையினைக் கருத்தில் கொண்டு 'இப்தார் நிகழ்வு' நடைபெறவிருந்த திகதியில் நடைபெறாது என முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப்

11 »»»»



## அனர்த்தத்தின் பாதிப்புகளை கண்டறிய இரத்தினபுரியில் ஜனாதிபதி

■ பா.மலரம்பிகை

சீரற்ற வானிலை காரணமாக அனர்த்தத்திற்குள்ளான இரத்தினபுரி மாவட்ட மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக கண்டறிவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று இரத்தினபுரி மாவட்ட செயலகத்திற்கு விஜயம் செய்தார்.

அனர்த்தத்திற்குள்ளான மக்களுக்கு வழங்கப்படும் நிவாரண நடவடிக்கைகளின் ஒவ்வொரு துறை தொடர்பாகவும் விடயங்களைக் கண்டறிந்த ஜனாதிபதி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உயர்ந்தபட்ச நிவாரணங்களை வழங்குவதற்கு தேவையான

11 »»»»



## விழுந்தது ஹெலி

பத்தேகமைக்கு வெள்ள நிவாரண உதவிகளை சுமந்துவந்த இலங்கை விமானப்படையின் எம் ஐ17 விமானம் நேற்று காலை 7.50 மணிக்கு இனிமங்கட தேகந்த பிரதேசத்தில் விபத்துக்குள்ளாகியது. விமான விபத்தில் உயிராபத்துகளேதும் ஏற்படவில்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீட்புப் பணியில் ஈடுபட்ட விமானி ஷானுக தெல்கஹகொடையின் வீரதீரச் செயலை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பாராட்டினார்.

## சௌபாக்கிய, சுவசக்தி கடன்களுக்கு நிவாரணம்

### பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு சலுகை

■ அ.அருண் பிரசாந்த்

நாட்டில் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்கள் பெற்றுக்கொண்டுள்ள கடன்களுக்கான நிவாரணம் வழங்க அரசு தற்போது தீர்மானித்துள்ளது.

அலரிமாளிகையில் நேற்று காலை அரச அதிகாரிகளுடன் இடம்பெற்ற விசேட கூட்டத்தின் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இத்திட்டத்துக்கான ஆலோசனையை வழங்கியுள்ளார்.

மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு வர்த்தக நடவடிக்கைகளுக்காகவோ அல்லது ஏனையத் தேவைகளுக்காகவே

11 »»»»

## வெள்ளம், மண்சரிவினை வேடிக்கை பார்க்க வேண்டாம்

### பொலிஸார் எச்சரிக்கை

■ அ.அருண் பிரசாந்த்

வெள்ளம் மற்றும் மண்சரிவினை அல்லது இவை ஏற்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளை பொதுமக்கள் வேடிக்கையாக பார்வையிடுவதை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்று பொலிஸ் பேச்சாளரான பிரியந்த ஜயகொடி எச்சரிக்கை விடுத்தார்.

அதாவது, நாட்டில் நிலவியுள்ள அசாதாரண சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப்பணிகள் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள 5 ஆயிரம் பொலிஸார் தற்போது கடமைக்காக அமர்த்தப்பட்டுள்ளனர்.

11 »»»»

## ஹெலியில் பிறந்த சிசு வைத்தியசாலையில் பலி

சீரற்ற காலநிலையை அடுத்து ஹெலிகெப்டரில் கர்ப்பிணி தாயொருவர் குழந்தை பிரசவித்த நிலையில் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்த சோக சம்பவம் இரத்தினபுரி கலவானை பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

11 »»»»

### பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு

## புத்தகங்கள், கொப்பிகள், சப்பாத்துகள் வழங்க அரசு துரித நடவடிக்கை

■ அ.அருண் பிரசாந்த்

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு புத்தகங்கள், சப்பாத்து ஜோடி, அப்பியாசக் கொப்பிகள் போன்றவற்றை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார். மேலும், கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி உள்ளிட்ட சீரற்ற காலநிலையால்



11 »»»»

## பலியானோர் எண்ணிக்கை 180 ஆக அதிகரிப்பு

### தொகை கூடலாம் என்றும் எச்சரிக்கை

■ அ.அருண் பிரசாந்த்

நாட்டில் தொடர்ந்து கொண்டிருக்கும் சீரற்ற காலநிலையினால் பலியானோரது எண்ணிக்கை 180 ஆக அதிகரித்துள்ளது என தெரிவித்துள்ள இடர்முகாமைத்துவ மத்திய நிலையம், 5,88,082 பேர் பாதிக்கப்பட்டும் 109 பேர் காணாமல்போயுமுள்ளனர் என்றும் நேற்று தகவல் வெளியிட்டது. அதேநேரம், உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படலாம் என்று உள்நாட்டலுவல்கள் அமைச்சரான வஜிர அபேகுணவர்தன நேற்று கவலை தெரிவித்தார். நாட்டில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து

11 »»»»

# அறபுக் கல்லூரிகள் பற்றிய தப்பபிப்பிராயத்தைப் போக்க பொதுவான பாடத்திட்டம் தேவை

## அஷ்ஷெய்க் அகார் முஹம்மத்

(பேருவளை பீ.எம். முக்தார்)

இலங்கையில் உள்ள அரபுக் கல்லூரிகளுக்கென ஒரு பொதுவான பாடத்திட்டத்தை ஏற்படுத்துவதன் மூலம் அரபுக் கல்லூரிகளைப் பற்றிய பிற மதத்தவர்களின் வீணான சந்தேகங்களை மாற்றியமைக்க முடியும். இன்று முஸ்லிம் சமூகம் பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுதது வருகின்றது. அரபுக் கல்லூரிகளில் பயங்கரவாதம் போதிக்கப்படுவதாக ஒரு குற்றச்சாட்டை வீணாக முன்வைத்துள்ளனர். இந்த தப்பான அபிப்பிராயத்தை மாற்றியமைக்க வேண்டும் என ஜாமியா நளீமியா கலாபீட பிரதிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் கூறினார்.

பேருவளை சீனன்கோட்டை ஜாமியா நளீமிய்யா கலாபீட மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இலங்கையில் உள்ள அரபுக் கல்லூரிகளின் பாடத் திட்டத்தை ஒருமுகப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் தொடர்பான ஆரம்பச் செயலமர்வில் விசேட பேச்சாளராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களம் ஏற்பாடு செய்த இச்செயலமர்வில் சுமார் 50 பேர் வரையிலான உலமாக்கள் பங்குபற்றினர். அங்கு அவர் மேலும் கூறியதாவது,

ஆறு தசாப்த கால வரலாற்றில் இன்றைய செயலமர்வு மிகவும் வரலாற்று முக்கியத்துவமிக்கதாகும். நீண்ட கால முயற்சியை அறுவடை செய்யும் சந்தர்ப்பத்தை நாம் அடைந்திருக்கின்றோம். கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகளின் விளைவாக நாம் அனைவரும் ஒன்றுகூடி சிறந்த ஒரு முடிவை எடுக்க வேண்டும். வஹ்ஹதா, முதவக்கிதாவுக்கான ஒரு பாடத் திட்டத்தை தயாரித்து அந்தப் பாடத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு இப்போது அமுலுக்கு வந்து பரீட்சைத் திணைக்களம் தொடர்ந்தும் பரீட்சைகளை நடாத்தி வருகின்றது.

அதனைத் தொடர்ந்து, தானவியாவுக்கான பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டு அந்தப் பாடத்திட்டமும் அரச அங்கீகாரத்தைப் பெற்று பரீட்சை திணைக்களத்தினால் இப்போது அது அமுல் நடத்தப்பட்டு பொது பரீட்சை வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றது. இப்போது நாங்களே தயாரித்த மர்ஹலா ஜாமியாவுக்கான பாடத்திட்டம் இருக்கிறது. அந்த பாடத் திட்டத்தை தயாரிக்கின்ற குழுவைச் சேர்ந்த பலரும் இங்குள்ளனர். அந்தப் பாடத்திட்டத்தை மூன்றாம் கட்டமாக நாங்கள் தயாரித்தோம். அது பல்கலைக்கழக தரத்தினை கொண்ட ஒரு பாடத்திட்டமாகும். என்றாலும் அது தொடர்பான நடைமுறைப் பிரச்சி னைகள் காணப்படுகின்றன. பரீட்சைத் திணைக்களம் ஒரு நாளும் ஒரு பட்டயச் சான்றிதழை வழங்காது அப்படியாக இருந்தால் இந்தப் பாடத்திட்டத்திற்கு நாங்கள் உயர் கல்வி அமைச்சு ஊடாக பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் அரச அங்கீகாரத்தை பெறப்பட வேண்டும். மர்ஹலா ஜாமியா என்று வைக்கப்பட்டுள்ள பெயரை வேண்டுமானால் மாற்றிக் கொள்ளலாம். இது பிரச்சினையல்ல, இப்போது நமக்கு முன்னாலுள்ள தேவை என்னவென்றால் அரச அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளத் தக்க ஒரு பொதுப் பாடத்திட்டமேயாகும்.

இது இறுதியாண்டு மாணவர்களுக்கான பாடத்திட்டமாகும். இவர்கள் உலமாக்களாக, மௌலவிமார்களாக, சேஹ்மார்களாக அரபுக் கலாசாலைக ளிலிருந்து பட்டம் பெற்று வெளியேறுகின்ற போது மத்ரஸாவுடைய சான்றிதழை அவர்கள் எடுத்துச் செல்லும் அதே நேரத்தில் அரச அங்கீகாரம் பெற்ற ஒரு தரம்மிக்க சான்றிதழையும் பெற்றுச் செல்வார்கள்.

இலங்கையில் உள்ள உலமாக்கள் இன்று முழு உலகிற்குமே முன்மாதிரிமிக்கவர்களாக திகழ்கின்றனர். உலமாக்கள் ஒரு ஜமாத் அமைப்பிலோ தரீக்கா அமைப்பிலோ அல்லது இயக்க அமைப்பில் இருந்தாலும் இவர்கள் அனைவரினதும் கண்களும் உம்மத்தின் பக்கமே உள்ளது. உம்மதுல் வாஹிதா என்பதே எம் அனைவரினதும் கோட்பாடாகும். அதன் காரணமாகவே அனைவரும் பாடத்திட்டத்தை ஒருமுகப்படுத்தும் பணியில் எல்லா கருத்து முரண்பாடுகளை விட்டு வந்துள்ளீர்கள். இந்த நிலையை பாகிஸ்தானில், இந்தியாவில், பங்களாதேஷில் காண முடியாது. இந்த வகையில் இலங்கை உலமாக்கள் முழு உலகிற்கும் ஒரு முன்மாதிரியானவர்களாக உள்ளனர். பல்வேறு இயக்கங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் அடுத்த தலைமுறைக்கு இந்த தீனை பாது காப்பாக, இல்மை பாதுகாப்பாக கொடுக்க வேண்டும் என்ற கவலையுடன் அனைத்து உலமாக்களும் இங்கு ஒன்றுகூடியுள்ளமையானது வரலாற்று முக்கியத்துவமிக்கதாகும். ஷியாக்கள், காதியானிகள் உட்பட எத்தகைய வழிகெட்ட பிழையான அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாத் துடைய அக்கீதாவுக்கு முரணான அம்ச



ங்கள் இருக்கின்றவோ அவற்றைப் பற்றி விழிப்பாக இருப்பது பாடத் திட்டத்தில் சேர்க்க வேண்டிய விடயம். சேர்க்கக்கூடாத விடயங்கள் பற்றி ஆழமாக ஆராய்ந்து ஒரு நல்ல முடிவை எடுப்போம். முரண்பாடுள்ள விடயங்களை தவிர்த்து உடன்பாடுள்ள விடயங்களை சேர்த்து இந்த பணியை காலம் தாழ்த்தாது நிறைவேற்றுவோம். அரை நூற்றாண்டை இதற்காக கடத்தி விட்டோம். இன்னொரு நூற்றாண்டு இருக்கும் என யாரும் நினைக்கக் கூடாது.

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் அஷ்ஷெய்க் வை.எல். எம். நவவி (நளீமி) பேசும்போது, 1820 ஆம் ஆண்டு மக்கியா அரபுக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பல அரபுக் கல்லூரிகள் நாட்டின் நாலா பகுதிகளிலும் ஸ்தாபிக்கப்பட்டன. இன்று 260 வரையிலான அரபுக் கல்லூரிகள் உலமாக்களை உருவாக்கும் சீரிய பணியைச் செய்கின்றன.

சிறந்ததொரு பாடத்திட்டத்தை பொதுப் பரீட்சையொன்றை வைத்து சான்றிதழை வழங்கக்கூடிய பாடத்திட்டத்தை தயார்படுத்தி தந்தால் சிறப்பாக இருக்கும் என்றார்.

## ஆசிரியர் அப்துல் கபூர் செய்னுலாப்தீன் ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு

(ஜெஸ்மி எம்.மூஸா)



சம்மாந்துறை அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி ஆசிரியரான அப்துல் கபூர் செய்னுலாப்தீன் 38 வருட ஆசிரியப் பணியிலிருந்து (26) ஓய்வு பெற்றுள்ளார்

கல்லூரி அதிபர் திருமதி அபீரா சலீம் தலைமையில் நடைபெற்ற விருந்துபசாரத்துடன் தனது ஓய்வூதிய கடிதத்தைக் கையளித்தார்

1957.06.09 இல் ஆரம்பக் கல்விக்கான ஆசிரியராக நியமனம் பெற்ற செய்னுலாப்தீன் ஓலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலயம்-நிந்தவூர் மல்ஹர் மகளிர் கல்லூரி-மாவடிப்பள்ளி அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை-சாய்ந்தமருது றியாளுல் ஜன்னா வித்தியாலயம்-மாளிகைக்காடு சபீனா வித்தியாலயம்-சாய்ந்தமருது மல்ஹறுஸ் சம்ஸ் வித்தியாலயம்-குருணாகல் தெல்லியாக் கொன்னை மகா வித்தியாலயம்-சம்மாந்துறை மதீனா வித்தியாலயம்-சம்மாந்துறை அறபா வித்தியாலயம்-சம்மாந்துறை அல்-மர்ஜான் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் 38 வருடங்கள் பணியாற்றிய பின்னரே ஓய்வு பெற்றுள்ளார்

சாய்ந்தமருதைப் பிறப்பிடமாகக் கொண்ட செய்னுலாப்தீன் சம்மாந்துறையைச் சேர்ந்த சம்மாந்துறை மத்திய மகா வித்தியாலயத்தில் அதிபராக இருந்து ஓய்வு பெற்ற மகராசியின் கணவராவார்

இறுதியாகக் கற்பித்து ஓய்வு பெற்ற சம்மாந்துறை அல்-மர்ஜான் மகளிர் கல்லூரியில் தொடராக ஐந்து வருடங்கள் சேவையாற்றிய ஆசிரியர் செய்னுலாப்தீன் காலை 7 மணிக்கு முதல் பாடசாலைக்கு சமூகம் தரும் ஆசிரியராகவும் பாடசாலை மாணவிகளின் ஒழுக்கம் உள்ளிட்ட புறக்கிருத்திய விடயங்களில் அதிக அக்கறை கொண்டவராகவும் பாடசாலைக் குழுமத்தினரால் நேசிக்கப்படுகின்றவராகத் தொடர்ந்தும் பணியாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்தார் அமீர் அலி

(வாழைச்சேனை நிருபர்)

அனர்த்திளால் பாதிக்கப்பட்ட அக்குறஸ்ஸ கொடப்பிட்டிய பகுதிக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தேசிய தலைவர் றிஸாட் பதியுதீனின் பணிப்புரைக்கமைய அக் கட்சியின் தவிச ாளரும் பிரதி அமைச்சருமான எம்.எஸ். எஸ்.அமீர் அலி கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் அப்பகுதிக்கு விஜயம் செய்து பார்வையிட்டார்.

கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் இப்பகுதிக்கு விஜயம் செய்து அப்பகுதி மக்களுக்கு அவசர தேவைகள் தொடர்பாக கொடப்பிட்டிய பள்ளிவாசல் நிருவாகம் மற்றும் பிரதேச முக்கியஸ்தர்களிடம் கலந்தாலோசித்ததோடு அவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அப்பகுதி மக்களிடம் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவரும் அமைச்சருமான றிஸாட் பதியுதீன் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து இன மக்களுக்கும் உதவிகள் சென்றடையும் வண்ணம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் என்றும் தெரிவித்தார். கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் கொடப்பிட்டிய பள்ளிவாசலிலே அப்பகுதி மக்களுடன் சேர்ந்து நோன்பு திறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## வெலிகமவில் வெள்ளப்பெருக்கால் 7750 பேர் பாதிப்பு

(வெலிகம நிருபர்)

வெலிகம வெலிபிடிய பிரதேச செயலகத்தக்குட்பட்ட 38 கிராம சேவகர் பிரிவுகளும் வெள்ளப் பெருக்கால் பெரிதும் பாதிக்கப்பட் டுள்ளதா க வெலிபிடிய பிரதேச செயலாளர் பி. சூரியாராச்சி தெரிவித்தார். 2155 குடும்பங்களைச் சேர்ந்த 7750 பேர் பாதிக்கப்பட்டுள்ள தோடு, இவர்களுள் இருவர் மரணத்தைத் தழுவியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் வெள்ள அனர்த்தத்தால் 3 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதுடன் 62 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் பிரதேச செயலாளர் தெரிவித்தார்

பாதிக்கப்பட்டோருக்கு அத்தியவசியமாகத் தேவைப்படும் உணவுப் பொருட்கள் சேகரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் ஒரு வருட கால கட்டுறு பயிற்சியினை மேற்கொண்டு நிறைவு செய்த அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரி பயிற்சி ஆசிரியர்கள் பாடசாலைக்கென நினைவுச் சின்னமொன்றை வழங்கி வைத்தனர். பயிற்சி ஆசிரியர்கள் கல்லூரியின் அதிபர் ஏ.எல்.கமறுதீனிடம் நினைவுச் சின்னத்தினை வழங்கி வைப்பதையும் அருகில் பிரதி அதிபர்களான எஸ்.எல். எம்.நசீர், எம்.ஐ.நூர்டீன் மற்றும் சிரேஷ்ட ஆசிரியர் சி.மதியழகன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: எம்.ஏ.றமீஸ்)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருட்கள்

(வெலிகம நிருபர்)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்க வென உணவுப் பொருட்களான அரிசி, சீனி, பிஸ்கட் வகைகள், குடிநீர் போத்தல்கள் போன்ற பல பொருட்கள் பள்ளிவாசல்கள் மூலமாக சேரிக்கப்பட்டுவருகின்றன.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் மாத்தறை மாவட்ட வெலிகம பிரதேச கிளை மற்றும் சமூக அமைப்புக்கள் இணைந்து இப்பணியில் ஈடுபட்டுள்ளன.

குறிப்பாக பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு நோன்பு பிடிப்பதற்காக ஸஹர் உணவுகளும் சமைத்து விநியோகிப்படுகின்றன.

தற்போது வெள்ளம் வழிந்தோடி விருக்கும் நிலையில், வீடு வாசல்கள் பள்ளிவாசல்கள் துப்புரவு பணிகள் இடம்பெற்றுவருகின்றன. இப்பணிகளில் ஈடுபட போருவை, வெலிபிடிய ஆகிய பகுதிகளுக்கு வெலிகமவிலிருந்து வாலிபர்கள் குழுக்கள் சென்றுள்ளனர்.


### பெயர் மாற்றம்

டயகம 1ஆம் பிரிவு, டயகம பதுளை எனும் விலாசத்தில் வசித்துவந்த ராஜேந்திரன் கீர்த்தனா ஆகிய நான் 2017.02.24 ஆம் திகதி முதல் புனித இஸ்லாம் மதத்தை ஏற்றுக்கொண்டு எனது பெயரை ராஜேந்திரன் பாத்திமா என மாற்றிக் கொண்டு இனிவரும் காலங் களில் சகல ஆவணங்களிலும் புதிய பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் இலங்கை சனநாயக சோசலி சக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

- ஆர். பாத்திமா

### பெயர் மாற்றம்

திருகோணமலைஇல.25/12பேராலய வீதி, தே.அ.அ.இ. (902182349 V) உடைய மதிவதனன் ரதுரஷன் ஆகிய நான் எனது சுய விருப்பத்தின் பேரில் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக் கொண்டதால் எனது பெயரை அப்துல் ரஹ்மான் என மாற்றிக் கொண்டு இனிவரும் காலங்களில் சகல ஆவணங் களிலும் புதிய பெயரையே பயன்படுத்து வேன் என இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

- மதிவதனன் அப்துல் ரஹ்மான்

### பெயர் மாற்றம்

கீதாவாச, பொத்துவில் பஜைச் சேர்ந்த குடாவிதானக உப்புல் சந்திரசிறி ஆகிய நான் உப்புல் சந்திரசிறி எனும் பெயரை குடாவிதானக உப்புல் சந்திரசிறி என இன்று முதல் மாற்றிக் கொண்டு இனிவரும் காலங்களில் சகல ஆவணங்க ளிலும் புதிய பெயரையே பயன்படுத்து வேன் என இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

குடாவிதானக உப்புல் சந்திரசிறி


# வாக்குகளைப் பதிவு செய்வதில் அசமந்தப் போக்கு வேண்டாம்

## தேர்தல் ஆணையாளர் முஹம்மத்



(எம்.ஏ.றமீஸ்)

இலங்கையில் உள்ள பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் தேர்தல்கள் இடாப்பில் தமது பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும். இத்தேர்தல்கள் இடாப்பில் பெயர்களைப் பதிவு செய்யாமல் வாக்களிப்பிலிருந்து விலகி நிற்பதால் நாம் பல்வேறான பிரச்சினைகளுக்கும் சவால் களுக்கும் முகம் கொடுக்க நேரிடும் என மேலதி தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.முஹம்மட் தெரிவித்தார்.

தேர்தல்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேர்தல் பற்றிய விஷேட விழிப்புணர்ச்சி செயலமர்வு அட்டாளைச் சேனை தேசிய கல்வியற் கல்லூரியில் இடம்பெற்றது.

கல்விக் கல்லூரி பீடாதிபதி எம்.ஐ.எம். நவாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், தற்கால அரசியல் கலாசாரத்தினை பார்த்து விட்டு இன்றைய இளைஞர்களில் பெருந்தொகையானோர் எமக்கு தேர்தல்கள் தேவையில்லை வாக்குரிமை தேவையில்லை அரசாங்கம் தேவையில்லை என்ற கருத்து வலுவடைந்து வருவதுடன் இவ்விடயங்களிலிருந்தும் அவர்கள் விலகி நிற்கின்றனர்.

இந்நடைமுறையானது ஆரோக்கியமற்ற விடயமாகவுள்ளது. நாளைய தலைவர்களாக வரவேண்டியவர்களும், எதிர்கால ஜனநாயகத்தினை கைவிலெடுக்க வேண்டிய வர்கள் இவ்வாறான மனப் பான்மையுடன் இருப்பது பெரும் ஆபத்தான நிலையினைத் தோற்றுவிக்கக் கூடியதாய் அமைந்து விடும்.



அரசியல் என்பது எமக்கு நிகழ்காலத்திலும் தேவையற்ற விடயம் எதிர்காலத்திலும் வேண்டாத விடயம் என இன்றைய மாணவர்களும் இளைஞர்களும் ஒதுங்கி விருக்கும் நடைமுறையினை மாற்றியமைக்க வேண்டும். தேவையற்ற விடயம் என்று பலர் தேவையான விடயங்களிலிருந்து ஒதுங்கி விடுவதனால்தான் இன்றைய சூழ்நிலையில் பல்வேறான பிரச்சினைகள் எழக் காரணமாக அமைந்து விடுகின்றது.

இலங்கையில் உள்ள சனத்தொகை யில் சுமார் 25 சதவீதத்திற்கும் அதிகமான வர்கள் இளைஞர்களாகவுள்ளனர். இளைஞர்கள் நினைத்தால் அரசாங்கத்தி னைக்கூட மாற்றியமைக்க முடியும்.

அரசாங்கம் தேவையில்லை என நாம் தனித்தே இயங்க முடியும் என தனியாராக நின்று செயற் படுபவர்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும் எமது பிறப்பு முதல் இறப்பு வரை முக்கியமான பல விடயங்களை அரசாங்கம் செய்யாமல் போனால் நாம் வாழ்வதுஅர்த்தமற்றதாகி போய்விடும். எமது பிறப்பு, இறப்பு, விவாகம் போன்றன அரசாங்க தரப்பில் பதிவிடாமல் போனால் இந்த நாட்டுக்கு நாம் சொந்தமற்ற வர்களாக மாறிவிடக் கூடும். பொது விடயங்களில் இருந்து ஓரமாகுபவர்கள் நன்கு சிந்திக்க வேண்டும் எமது இறப்பின் பின்னர் எமது உடல்களை பொது மயானத்தில் அடக்கம் செய்யாமல் தனியான இடங்களில் அடக்கம் செய்ய முடியுமா என உணர்ந்து கொள்ள வேண்டும்.

மோசமான தலைவர்களும், மோசமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரசியல் கட்சிகளும் தேவையில்லாமல் போகலாம் ஆனால் உண்மையான தலைவர்களையும் ஜனநாயகத்தினை நிலைநாட்டக்கூடியவர்களையும் தெரிவு செய்வதற்காக இளைஞர்கள் முன்வர வேண்டும். அதற்காக அவர்கள் தமக்கான வாக்குரிமையினை சிறப்புறப் பயன்படுத்த வேண்டும் என்றார்.

இதன்போது அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திலின விக்ரமரத்ன, அட்டாளைச்சேனை உதவிப் பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ், அம்பாறை மாவட்ட உதவித் திட்டமிடற் பணிப்பாளர் ஐ.எல்.தௌபீக் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# நீர்வழங்கல் பணிகளை இடையூறின்றி மேற்கொள்ள நடவடிக்கை எடுங்கள்

## அமைச்சர் ஹக்கீம் பணிப்புரை



(பேருவளை பீ.எம்.முக்தார்)

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலை காரணமாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் விநியோகிக்கப்படும் குழாய் நீர் வழங்கும் பணிக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு பற்றியும் அவ்வாறு பாதிப்புக்குள்ளான பகுதிகளில் சீரான நீர்விநியோக நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக ஆராயும் அவசரக்கூட்டமொன்று தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் அமைச்சின் செயலாளர் சரத் விதான உட்பட சபையின் உயரதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

சபையின் பொது முகாமையாளர் தீப்தி சுமனசேகர நாட்டில் தற்போது மேற்கொள்ளப்படும் நீர்வழங்கல் நடவடிக்கை குறித்து விளக்கமளித்தார். அவரது விளக்கத்தின் மூலம் நீர் வழங்கல் பணிகளுக்கு பிரச்சினைகள் இல்லை என தெரியவந்தது.

நீர்வழங்கல் பணிகளுக்கு ஏற்பட்டுள்ள இடையூறுகளுக்கு தீர்வு கண்டு வழமைபோல் நீர் பகிர்ந்தளிக்க ஊழியர்கள் தியாகத்துடன் பணியாற்றுவது குறித்தும்இதன்போது தெரிவிக்கப்பட்டது.

நீர்வழங்கல் பணிகளை வழமைபோல் மேற்கொள்ளவும் ஏற்படும் இடையூறுகளை தவிர்த்துகொள்ள முன் கூட்டியே நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் இங்கு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சபையின் ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அனர்த்த நடவடிக்கைகளுக்காக சபையின் மூலம் தனியான படையணியொன்றை நியமிக்குமாறும் அமைச்சர் கேட்டுக்கொண்டார். அதற்கு தேவையான நிதியை பெறுவதற்கும் அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

குடிப்பதற்கு பாவிக்கப்படும் கிணறுகளை சுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

சபையின் தலைவர் கே.ஏ.அன்ஸார், உப தலைவர் சபீக் ரஜாப்தீன், நிறைவேற்றுப் பணிப்பாளர் மஹிலால் சில்வா உட்பட மேலதிக பொது முகாமையாளர்கள், பிரதி பொது முகாமையாளர்கள் உட்பட பலரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## சாதாரணப்பரீட்சை விண்ணப்பங்கள் கால எல்லை நீடிப்பு




தற்பொழுது பல மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்த நிலையை கவனத்தில் கொண்டு 2017 கல்வி பொதுதராதர சாதாரண தரப்பரீட்சைக்கான விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த கால எல்லையை நீடிக்குமாறு கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் பரீட்சைகள் திணைக்களத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்த பரீட்சைக்கான விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் பணி இம் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடைய இருந்தது.

இதனை ஜூன் மாதம் 15ஆம் திகதி வரையில் நீடிப்பதற்காக கல்வி அமைச்சர் பரீட்சைகள் திணைக்களத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இயற்கை அனர்த்தத்தின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள குடும்ப உறுப்பினர்களுக்கு சகலவிதமான பரீட்சை சான்றிதழ்களையும் இலவசமாக மீள வழங்குவதற்கு கல்வி அமைச்சர் பரீட்சைகள் திணைக்களத்திற்கு ஆலோசனை கூறியுள்ளார்.

## கொதித்தாறிய நீரை அருந்தவும் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை



வெள்ளம் மற்றும் அதிக மழையினால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேச மக்களுக்கு நீரினை பாவிக்கும் போது, கொதித்தாறிய நீர் மற்றும் போத்தலில் அடைக்கப்பட்ட நீரினை மாத்திரம் பாவிக்கும்படி இலங்கை மக்கள் சுகாதார பரிசோதகர்களின் சங்கம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும், நீரினால் மூழ்கியிருந்த வீடுகளில் வெள்ளம் வற்றிய பின் தங்குவதென்றால் முதலில் சுத்தமான நீரினால் கழுவி விட்டு உபயோகிக்க வேண்டும் என்றும், இது தொடர்பிலான தொழில்நுட்ப உதவிகளை குறித்த பிரதேசங்களிலுள்ள பொதுமக்கள் பரிசோதகர்களிடம் பெற்றுகொள்ள முடியும் என்றும் அச்சங்கம் தெரிவித்தது.



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை ஹெலிகொப்டரில் மீட்டெடுத்து காப்பாற்றும் போது ஹெலிகொப்டர் வயர் அறுந்து உயிரிழந்த இலங்கை விமானப்படை அதிகாரி வை.எம்.எஸ்.யாபாரத்னவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றையதினம் அஞ்சலி செலுத்தினார்.

## விடுமுறையில் உள்ள வைத்தியர்கள் சேவைக்கு சமூமளிக்கவும்

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அனர்த்த நிலையை கருத்திற்கொண்டு விடுமுறையில் இருக்கும் வைத்திய அதிகாரிகளை சேவைக்க சமுகமளிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் தமது உறுப்பினர்களிடம் குறித்த கோரிக்கையினை முன்வைத்துள்ளனர்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் விசேட மருத்துவ முகாம்களை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது. இதற்காக நூற்றுக்கும் அதிகமான அரச மருத்து அதிகாரிகளை, சேவையில் ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளதாகவும் அச்சங்கம் குறிப்பிட்டது.

அத்துடன், ஏற்கனவே களுத்துறை மாவட்டத்தில் சில மருத்துவ குழுக்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் காலி மாவட்டங்களுக்கு குழுக்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அச்சங்கம் குறிப்பிட்டது.

## வெள்ளத்தால் பாதிப்புற்றோருக்கு ச.தொ.ச.வினால் அத்தியாவசிய பொருட்கள் வழங்கல்



நாட்டின் பலபாகங்களிலும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சதொச கிளைகள் மூலமும், சதொச களஞ்சியச்சாலைகள் மூலமும் அத்தியாவசியப் பொருட்களையும், ஏனைய உலர் உணவுப்பொருட்களையும் விநியோகிப்பதற்கு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிஷாத்பதியுதீன் அவசர நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தொடர்பில் அந்தந்த பிரதேசங்களிலுள்ள அரசாங்க அதிபர்களுக்கும், பிரதேசசெயலாளர்களுக்கும் அமைச்சர் றிஷாத் ஆலோசனைகளையும், அறிவுறுத்தல்களையும் வழங்கியுள்ளார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்கவென அவர்களுக்கு தேவையான பொருட்களை அரசாங்க அதிபர்களும், பிரதேசசெயலாளர்களும் சதொசவில் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சதொச தலைமையகத்திலும், ச.தொ.ச கிளைகளிலும் அரச உயர் அதிகாரிகள் தேவையான பொருட்களை பெற்றுக் கொள்ள முடியும்என்றும் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகள் கருதி அதனை விநியோகிக்குமாறும் அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

பாதிப்புக்குள்ளானவர்கள் தமக்கு தேவையானஅத்தியாவசிய உணவுப் பொருட்களைஅரச அதிபர் மற்றும் பிரதேச செயலாளரிடம் தெரிவிக்கமுடியும். அரசஉயர் அதிகாரிகளால் பாதிப்புற்றோருக்கு தேவையான பொருட்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## பரீட்சைகள் ஒத்திவைப்பு

இலங்கை சட்டக் கல்லூரியின் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையினால் நாளை ஆரம்பிக்கப்படவிருந்த இலங்கை சட்டக் கல்லூரின் முதலாம் மற்றும் இரண்டாம் வருட மாணவர்களுக்கான பரீட்சையினை பிற்போடுவதற்கு சட்டக் கல்லூரி நிர்வாகம் தீர்மானித்துள்ளன.

இதேவேளை, திறந்த பல்கலைக்கழகத்தில் நேற்றும் இன்றும் நடைபெறவிருந்த சகல பரீட்சைகளும் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளன.

தற்பொழுது நிலவும் சீரற்ற காலநிலையை கருத்தில் கொண்டு பரீட்சைகளை ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டதாக பல்கலைக்கழகத்தின் உதவி பதிவாளர் நாயகம் ஹகம் தேவப்பிரிய தெரிவித்தார்.

## வீதிகள் பாதிப்பா? அழைக்கவும்

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட அனைத்து வீதிகளையும் விரைவில் வழமை நிலைமைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கவுள்ளதாக, உயர்கல்வி மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சு தெரிவித்தது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக, அந்த அமைச்சு சுட்டிக்காட்டியது.

களுத்துறை, காலி, மாத்தறை, இரத்தினபுரி மற்றும் ஹம்பாந் தோட்டை ஆகிய மாவட்டங்களில் பல வீதிகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளதோடு, சில மண்சரிவினாலும் பாதிக்கப்பட்டுள்ளன.

இது குறித்து மாகாண பணிப்பாளர்கள் ஊடாக தகவல்களைப் பெற்றுவருவதாக உயர்கல்வி மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இவ்வாறு பாதிக்கப்பட்ட வீதிகள் குறித்த தகவல்கள் இருப்பின், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 1968 மற்றும் 1969 என்ற இலக்கத்திற்கு அழைத்து தெரிவிக்க முடியும் எனவும் கூறப்பட்டுள்ளது.

## தமிழ்ச் சங்கத்தில் சிவராம், நடேசன் நினைவுக்கூட்டம்

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான தர்மரட்னம் சிவராம் ஐயாத்துரை நடேசன் ஆகியோரின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு கொழும்புத் தமிழ்ச்சங்க வினோதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு ஒன்றியத்தின் செயலாளர் ஆர். பாரதி தலைமை தாங்குவார். ஒன்றியத்தின் தலைவர் அ.நிக்ஸன் அறிமுகவுரையாற்றுவார்.

மூத்த ஊடகவியலாளரும் சன்டே ஒப்சேவர் ஆங்கில வார இதழின் முன்னாள் ஆசிரியருமான லக்ஸ்மன் குணசேகர நினைவுப் பேருரையாற்றுவார். நல்லாட்சி அரசாங்கத்தில் இனமுரண்பாடுகளுக்கான தீர்வு முயற்சிகளின் தற்போதைய நிலை என்ற தலைப்பில் அவர் உரையாற்றுவார்.

நவமணி நாளேட்டின் பிரதம ஆசிரியர் எம்.என்.அமீன் சிறப்புரையாற்றுவார். ஒன்றியத்தின் பொருளாளர் ஜீவா சதாசிவம் நன்றியுரை நிகழ்த்துவார். நிகழ்வில் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

# சாமிலாவின் கொலைக்கு நீதி வேண்டி அமைதிப் பேரணி





(புத்தளம் நிருபர்)

புத்தளம் மாவட்ட நல்லாந்தளுவ பிரதேசத்தைச் சேர்ந்த எழு மாத குழந்தையின் தாயான சாமிலா என்ற பெண் கடந்த 5 ஆம் திகதி அவரின் கணவரால் எரியூட்டிக் கொல்லப்பட்டதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இவரின் கணவர் 24 நாட்களாகியும் தலைமறைவாகியுள்ளார்.

இந்த விடயங்களை முன்வைத்து நேற்று புத்தளம் நகரில் அமைதிப் பேரணியொன்று இடம்பெற்றது. சாமிலாவின் படுகொலையின் சந்தேகநபரான அவரது கணவரை உடனடியாக கைது செய்வதற்கு ஒத்துழைப்பை வழங்கி வழக்கைத் துரிதப்படுத்துமாறும் மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்தும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கு மகஜர் ஒன்று வழங்கப்பட உள்ளது.

புத்தளம் நகரில் இடம்பெற்ற இந்த அமைதி பேரணியின் போது பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கு வழங்கப்படவுள்ள மகஜரின் பிரதிகள் புத்தளம் பெரிய பள்ளி நிர்வாக சபை தலைவர் பீ.எம்.ஏ. ஜனாப், புத்தளம் மாவட்ட மேலதிக செயலாளர் டப்ளியு. எம்.சீ.கே. வன்னிநாயக ஆகியோருக்கு வழங்கி வைக்கப்பட்டன.

## உதவி கோரல்

(இக்பால் அலி)

பொலன்னறுவை கதுருவெல இலக்கம் 30 முஸ்லிம் கொலனி பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான 36 வயதுடை ஏ.ஆர்.ரிஸ்வானா சிறு நீரக நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார்.

நீண்ட காலமாக தலைவலி மற்றும் வயிற்று வலி உள்ளிட்ட பல நோய்களுக்கு உட்பட்ட நிலையில் இறுதியாக பொலன்னறுவை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற பின்னரே சிறுநீரக நோய் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இரத்தப்பரிசோதனையின் பின் குறித்த பெண்ணின் இரு சிறு நீரகங்களும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் இவர் உயிர் பிழைப்பதாக இருந்தால் ஒரு மாத கால குறுகிய காலத்திற்குள் சிறுநீரக மாற்றுச் சிகிச்சை செய்ய வேண்டும் என வைத்திய நிபுணர் தெரிவித்துள்ளார்.

குறித்த பெண்ணின் கணவர் வெளிநாட்டில் தொழில் புரிந்து வருவதோடு, 12, 10 மற்றும் 6 வயதுகளையுடைய பிள்ளைகள் மூவர் உள்ளனர். இவருக்கு தினசரி 500 மில்லீட்டர் இரத்தம் பாய்ச்சப்படுகிறது.

மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள இந்த தாய்க்கு பொருத்தமான குருதி வகையைச் சார்ந்தவர்கள் சிறு நீரகத்தை தானம் செய்து இந்த தாயின் உயிரை மீட்டெடுப்பதற்கு உதவி செய்யுமாறு இவரின் குடும்பத்தார் வேண்டுகின்றனர்.

சிறு நீரகத்தை தானம் செய்பவர்கள் 0776199745, 0776562497 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றனர்.

NAVAMANI DAILY
நவமணி
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
30TH MAY 2017 - TUESDAY

# நிவாரண பணிகளில் முஸ்லிம்கள் முன்மாதிரியாக செயற்பட வேண்டும்

நாட்டில் ஏற்பட்டுள்ள காலநிலை சீற்றத்தின் காரணமாக 5 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் நிர்க்கதி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதுதவிர ஏழு மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டு மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு நகரும்படி தேசிய கட்டட ஆராச்சி மையத்தால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டிருக்கும் பல இலட்சம் மக்களுக்கு நிவாரணம், புனர்வாழ்வளிப்பதுவே முக்கிய பணியாக அமைந்துள்ளது. அரசாங்கமும் தனியார் அமைப்புகளும் இந்த பணியில் ஈடுபட்டிருந்தாலும், மேலும் எத்தனையோ பகுதிகளுக்கு நிவாரண உதவிகள் சென்றடையாத நிலையில் காணப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த அனர்த்தத்தினால் முஸ்லிம்களும் கணிசமானளவு பாதிக்கப்பட்டுள்ளனர். கேகாலை, களுத்துறை, இரத்தினபுரி மாவட்டங்களில் கணிசமான முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

முஸ்லிம்கள் இக்காலப்பகுதியில் புனித நோன்பை எதிர்கொண்டுள்ளனர். இஸ்லாத்தின் நான்காவது கடமையாக விளங்கும் நோன்பினை நோற்பது முஸ்லிம்களுக்கு கட்டாயமாகும். பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு நோன்பினை நோற்பதற்கும், திறப்பதற்கும் உரிய வசதிகளை செய்து கொடுப்பது அவசியமாகும். சமூக அமைப்புகளுக்கு இந்த விடயத்தில் பாரிய பொறுப்புள்ளது.

வெள்ளம் இன்னும் சில தினங்களில் வடிந்தோடினாலும் இந்த மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவதற்கு பல மாதங்கள் எடுக்கலாம். இந்த மக்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கு விசேட திட்டங்கள் வகுக்கப்படுவது அவசியமாகும். அரசாங்கத்துக்கு மட்டுமன்றி சமூகத்துக்கும் அது தொடர்பாக ஒரு பொறுப்புள்ளது.

இதேநேரம், இந்த புனித மாதத்தில் முஸ்லிம்கள் இப்தார் நிகழ்வுகளுக்காக பெரும் பணத்தை செலவு செய்கிறார்கள். நாட்டிலுள்ள முஸ்லிம் நாடுகளின் தூதுவராலயங்களின் இப்தார் நிகழ்வுகள் 5 நட்சத்திர ஹோட்டல்களில் நடைபெறுகின்றன. நெருக்கடி மிகு இந்த காலப்பகுதியில் பிரமாண்டமான இப்தார்களை நடத்துவது குறித்து மீள்பரிசீலனை செய்வது சிறந்தது.

முஸ்லிம் காலாசார சமய திணைக்களம் இன்று நடத்த ஏற்பாடு செய்துள்ள இப்தாரினை இரத்து செய்வதற்கு தீர்மானித்திருப்பது வரவேற்புக்குரியது. இதே போன்று, பொலிஸ் திணைக்கள இப்தாரும் ரத்து செய்யப்பட்டுள்ளது. இந்த இப்தாருக்கு ஒதுக்கப்பட்ட பணம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களது நலனுக்காக, குறிப்பாக பாதிக்கப்பட்டுள்ள முஸ்லிம்களுக்கு நோன்பினை நோற்பதற்கும் பெருநாளை கொண்டாடுவதற்கும் வழங்கப்படுவதன் மூலம் இப்தாரை நடத்துவதால் ஏற்படும் நன்மைகள் கிடைக்கும். சில குறிப்பிட்ட இலக்குகளை வைத்து நடத்தும் இப்தார்களை விட பொதுவாக நடத்தப்படும் இப்தார்களுக்கு பணம் செலவு செய்வது சிறந்தது. வெள்ளத்தால் பாதிக்கப்படாத முஸ்லிம்கள் நிவாரணங்களை வழங்கும் போது பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் நிவாரணங்களை பாரபட்சமின்றி வழங்குவதனை உறுதி செய்யவேண்டும். இதற்கு முன்பு நடந்த அனர்த்தங்களின் போது முஸ்லிம்கள் முன்மாதிரியாக செயற்பட்டுள்ளனர். பல தரப்பிலும் இதற்காக முஸ்லிம் சமூகத்திற்கு பாராட்டுக்கள் கிடைத்துள்ளது. கொலன்னாவை பிரதேச அனர்த்தங்களின்போது முஸ்லிம்கள் காட்டிய முன்மாதிரிகள் நாட்டில் சிங்கள ஊடகங்களில் பாராட்டுக்குரியதாக மாறியது.

நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு கிடைத்துள்ள மற்றொரு சந்தர்ப்பமாக பயன்படுத்துவதற்கு முஸ்லிம்கள் முன்வரவேண்டும்.

# பொதுபலசேனாவின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த தலையிடுங்கள்





## நீதி புத்தசாசன அமைச்சருக்கு அக்கரைப்பற்று ஹனீபா மௌலவி வேண்டுகோள்

**திகாமடுல்ல நிருபர்**

பொதுபல சேனா அமைப்பு முஸ்லிம்களுக்கெதிராக கட்டவிழ்த்து விட்டுள்ள நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு தலையிடுமாறு அக்கரைப்பற்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் மௌலவி ஹனீபா நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

2011ஆம் ஆண்டு றமழான் நோன்பு ஆரம்பித்துள்ள நிலையில் சிறுபான்மை மக்கள் வசிக்கும் பிரதேசங்களில் குறிப்பாக முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் 'கிறீஸ் பூதம்' எனும் ஒரு புரளி ஏற்படுத்தப்பட்டது. இதனால் சிறுபான்மை மக்கள் சீவிக்கும் கிராமங்கள் தோறும் இரவு நேரங்களில் அச்சமும் பீதியும் நிறைந்து காணப்பட்டது. நோன்பு காலத்தில் விசேஷ இரவு வணக்க வழிபாடுகளில் ஈடுபடும் முஸ்லிம்கள் அதனைச் செய்ய முடியாதவாறு நிலைமைகள் சிக்கலாகின. கிறீஸ் பூதங்களினால் சிலருக்கு இரத்தக் காயங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இன்னும் சிலருடைய வீடுகள் எரித்து நாசமாக்கப்பட்டன. இப்பூதங்களின் அட்டகாசங்கள் பொறுக்க முடியாமல் நீதி தேடி பதில் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்குள்ளாக்கப்பட்டனர். கிண்ணியா, புத்தளம், பொத்துவில், இறக்காமம் போன்ற கிராமங்களில் இது மிகக் கொடூரமாக அமைந்திருந்தது. பல உயிர் இழப்புக்களே ஏற்பட்டுவிட்டன. இப்பூதங்களின் அட்டகாசங்கள் முடிவுக்குவர பல காலங்கள் கடந்துவிட்டன. சட்டமும், நீதியும் இதனைக் கண்டுகொள்ள மறுத்தன. கிறீஸ் பூதங்களின் திரு விளையாடல்கள் வடக்கு கிழக்கு, மலையகங்களில் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை தென்பகுதியில் வெறுப்பூட்டும் பல நடவடிக்கைகள் சரளமாக ஏற்படுத்தப்பட்டன. சட்டத்தின் ஆட்சி நடைபெறும் ஒரு ஜனநாயக நாட்டில் சட்டத்தை பகிரங்கமாக கையில் எடுத்து கெடுபிடிகள் நடாத்திக் கொண்டிருந்த பொதுபல சேனாவின் பின்னணியில் அப்போதைய பாதுகாப்பு செயலாளர் இருப்பதாக மிக பரவலாகவே ஊடகங்களில் பேசப்பட்டது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஒத்தாசை வழங்குவதாக கூறப்பட்டது. இவ்வாறு மக்கள் பேசுவதற்கு ஒரு முக்கிய காரணமும் இருந்தது. அதாவது பொதுபல சேனாவின் பயிற்சிக் கலாசார நிலையத்தை காலி மாவட்டத்தின் பிளன வஞ்சவல எனும் இடத்தில் 2013 மார்ச் 9ஆந் திகதி திறந்து வைப்பதற்கு பிரதம அதிதியாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய அங்கு சென்று இருந்தமையே யாகும்.

2017ஆம் ஆண்டுக்குரிய புனித நோன்புமாதம் வர சில வாரங்கள் இருக்கும் நிலையில் கலபொட அத்த ஞானதேரர் அவரது நடவடிக்கைகளை தற்போது மீண்டும் வெளிப்படையாக பொலன்னறுவை ஒனகம பகுதியில் ஆரம்பித்துள்ளார்.

முஸ்லிம்களின் குடியிருப்புகளை பொலிஸ் அதிகாரிகளின் முன்னிலையிலேயே உடைத்து எறிந்துள்ளார். இவருடைய இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து கொஹிலவத்தை, பாணந்துறை, மல்வவபிட்டிய பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிவாசல்கள் இரவு நேரங்களில் குண்டெறிந்து தாக்கப்பட்டுள்ளன. அத்தோடு பாணந்துறையிலும் எஹுலியவிலும், வென்னப்புவையிலும் பின் அம்பாறை மஹறகம, கஹவத்தை ஆகிய இடங்களில் தமிழ் முஸ்லிம்களுக்கு சொந்தமான வியாபார ஸ்தலங்கள் தீவிட்டு எரித்து நாசமாக்கப்பட்ட பொதுபல சேனாவின் நோன்பு மாதத்திற்கு முன்னரான இந்நிகழ்ச்சிகள் 2011ஆம் ஆண்டில் நோன்பு மாதத்திற்கு முன்பு நடைபெற்றதை ஒத்ததாகவிருப்பதை நாம் உணரக் கூடியதாக இருக்கின்றது. இருந்தபோதும் அப்போது பாதுகாப்புச் செயலாளர் பக்கம் நீட்டப்பட்ட விரல்கள் இப்போது இதுவரை யார் பக்கமும் தெளிவாக நீட்டப்படவில்லை.

வடகிழக்கில் ஆயுதப் போராட்டம் நடைபெற்றபோதும் இவ்வாறே முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள், வியாபார ஸ்தலங்கள் ஆயுததாரிகளால் தீக்கிரையாக்கப்பட்டன. நிராயுத பாணிகளான முஸ்லிம்கள் தம்மையும் தமது உயிர் உடைமைகளையும் தற்பாதுகாத்து கொள்ளும் வகையில் அவர்களுக்கு துவக்குகள் வழங்கப்பட்டு ஊர்காவல் படைகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

ஞானசார தேரரும் அவரின் குழுவினரும் யுத்தகாலத்தில் பயங்கரவாதிகள் முஸ்லிம்களின் பள்ளிகளையும் வியாபார ஸ்தலங்களையும் இரவு வேளைகளில் குண்டு வைத்து தகர்த்தது போன்றதொரு நடவடிக்கையில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர். வடகிழக்கில் யுத்தம் நடைபெற்ற போது ஆயுதம் ஏந்திப்போராடியவர்களை சட்டத்தின் முன் நிறுத்த முடியாதது போன்ற ஓர் துர்ப்பாக்கிய நிலையே ஞானசார தொடர்பாகவும் எங்களுக்கு தற்போது ஏற்பட்டிருப்பதை சமகால நிகழ்வுகள் நமக்கு உணர்த்துகின்றன.

ஞானசாரர் நீதிமன்ற கட்டளைகளை கிழித்து எறிகின்றார். அமைச்சுகளுக்குள் நுழைந்து அமைச்சர்களை அச்சுறுத்தி அவமானப்படுத்துகின்றார். இவ்வாறே 2014இல் முஸ்லிம்களுக்கு எதிராக அளுத்கம கலவரத்தை ஏற்படுத்தி உயிர்களுக்கும், உடைமைகளுக்கும், நாட்டின் சொத்துகளுக்கும் அழிவை ஏற்படுத்தியிருக்கிறார். தற்போது நாட்டில் பிரதமரையும் ஜனாதிபதியையும் தூசண வார்த்தைகளால் ஏசித்தள்ளுகிறார்.

இந்த நாட்டின் பெரும்பான்மை பௌத்த மக்கள் போற்றி புகழ்கின்ற மகாவம்சத்தைக் கூட பிழையானது என்று பகிரங்கமாக பிரஸ்தாபிக்கின்றார். இது எல்லாவற்றையும் விட மேலாக உலகின் 250 கோடி முஸ்லிம்கள் தமது உயிரிலும் மேலாக மதிக்கின்ற அல்லாஹ்வையும் அவனது இறுதித்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களையும் முஸ்லிம்களின் மனம் புண்படும் வகையில் தூசிக்கின்றார். இவை யாவற்றையும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய பொலிஸாரும் சில வேளை இராணுவத்தினரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

யுத்த காலத்தில் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் இருந்தமையினால் தமது உயிர் உடைமைகள், பள்ளிவாசல்கள் ஆகியவற்றைப் பாதுகாத்துக் கொள்ள துப்பாக்கிகள் வழங்கப்பட்டு ஊர்காவல் படைகள் கிராமங்கள் தோறும் நிறுவப்பட்டது போல் தற்போதும் முஸ்லிம் கிராமங்கள் தோறும் ஊர்காவல்படையை ஏற்படுத்தி துப்பாக்கிகளையும் வழங்கி வைக்க முடியுமா என யோசியுங்கள். இதன் மூலம் இந்த ஞானசாரரின் நாசகார வேலைகளை இலகுவில் கட்டுப்படுத்தி விடுவதுடன் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற கையறு நிலையையும் தீர்த்துக் கொள்ளலாம்.

புத்த பெருமானின் போதனைகள் பொதுவாக அன்பு, கருணை, பணிவு என்பவற்றைக் கடைப்பிடிக்கவும் குரோதம், வைராக்கியம், பெருமை, பொறாமை என்பவற்றை தவிர்த்து நடக்கவும் கட்டளையிடுகின்றன.

இவை இந்த ஞானசாரரிடம் காணப்படுகின்றனவா என்பதையும், புத்த பெருமான் பௌத்த துறவிகளுக்கு வழங்கிய விஷேச அறிவுரைகளாகிய தியானம், தவம், நிர்வாணம் போன்ற குணங்களும் இவரிடம் காணப்படுகின்றதா என்பதையும் மகா நாயக்க தேரர்களும், புத்தசாசன அமைச்சும் கூர்ந்து கவனிக்க வேண்டிய தருணத்தில் நம்நாடு இருக்கின்றது. ஞானசார தேரருடன் கூடி வாழ்ந்து அவருடன் பிரயாணம் செய்து அவரின் இயக்கத்தில் பங்கு கொண்டவர்கள் இவரிடம் கெட்ட பழக்கங்கள் உள்ளதாகவும் இவர் உலக இன்பங்களை அனுபவிக்கும் ஆசை மிக்கவராக காணப்படுகின்றார் என்று பிரஸ்தாபிக்கின்றனர். பொதுபல சேனாவின் தலைவராகவிருந்த கிரம விமலஜோதி தேரர் அவர்கள் 2015 மே மாதமளவில் தனது பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது. அவர் அவ்வாறு இராஜினாமாச் செய்வதற்கு அவர் தெரிவித்த காரணமாவது பொதுபல சேனாவின் நடவடிக்கைகள் புத்த பெருமானின் போதனைகளுக்கு முற்றிலும் எதிராக அமைந்துள்ளதுடன் பெரும் அழிவை ஏற்படுத்திய அளுத்கம கலவரத்தை ஏற்படுத்துவதில் அது சம்பந்தப்பட்டிருக்கின்றது என்பதுமாகும். ஞானசார தேரரோடு இயக்கம் நடாத்திய கிரம விமல ஜோதி தேரர் அவர்களின் கருத்தை நாம் கருத்திற் கொள்ளவேண்டும் என எண்ணுகின்றேன்.

இதே போன்று இவர் மது போதையில் வாகனம் ஓட்டிய நேரத்தில் இவருக்கு எதிராக பொலிஸ் நடவடிக்கை நடைபெற்ற விடயமும் பத்திரிகைகளில் மிகப் பிரபல்யமாக பேசப்பட்டு வந்தது.

ஞாணசார தேரருக்கு சில காலம் தொண்டராகப் பணியாற்றிய ஜாஎல பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் இவர் பற்றி ஊடகங்களில் பின்வருமாறு தெரிவித்திருக்கின்றார். இவர் சோம ராம தேரர் போன்று பௌத்த இராச்சியம் அமைப்பதாகச் சொல்லிக் கொண்டு வந்தார். ஆனால் தமது சொந்த சொகுசான வாழ்க்கைக்காகவே இந்த பொதுபல சேனாவை அவர் நடாத்திக் கொண்டிருக்கின்றார்.

இவருக்கு மனோஜா என்ற பெயரையுடைய ஒரு பெண்ணும், இரு பெண் குழந்தைகளும் பிரான்சில் இருக்கின்றனர். இவர்கள் இலங்கை வருகின்ற வேளைகளில் கூடிய விலையில் சொகுசான ஹோட்டல்களை பதிவு செய்து கொண்டு மிக உல்லாசமாக அங்கு படுத்துறங்குவார்கள்.

இவர்களின் போக்குவரத்துக்கு எனது பி.எம்.டபிள்யூ ரக வாகனத்தை இவர்கள் பாவிப்பார்கள். ஒரு பிரபலமான தேரராகத் தன்னைக் காட்டிக் கொள்ளும் இவர் ஒரு சுற்றுலாப் பயணி போன்று பெண்களுடன் சேர்ந்து நீர் வீழ்ச்சிகளில் குளித்து மகிழ்வார். இவ்வாறு இவர் நடந்து கொள்வதைக் காண்பதற்கு எனக்கு மிகவும் அருவருப்பாகவிருந்தது.

ஞான சாரருடன் தொண்டனாகப் பணியாற்றிய ஜாஎல பிரதேச சபை முன்னாள் உறுப்பினரின் இக்கருத்தையும் நீங்கள் மிக்க ஆழமாகக் கருத்திற் கொள்ள வேண்டியிருக்கிறது.

மிக அண்மையில் தீகவாபிய பரிவார சைத்திய ரஜ மஹா விகாரையின் பிரதம பௌத்த குருவான, போத்திவல சந்தானந்த தேரர் இந்த ஞான சார தேரர் இறக்காமத்தின் மாயக்கல்லி மலையில் பன்சல அமைக்க வந்த போது பின்வருமாறு தெரிவித்தார். 'மாயக்கல்லி மிக நீண்ட காலமாக முஸ்லிம்களின் பூமியாக இருந்து வருகின்றது. அவர்களின் பூர்வீகக் காணியில் இருந்து அவர்களைப் பலாத் காரமாக வெளியேற்றி விட்டு விஹாரை அமைக்க வேண்டிய எந்தத் தேவையும் இங்கு இல்லை. மாணிக்க மடுவுக்கு மிக அண்மையிலேயே தீகவாபியும் அதன் மிகப் பெரிய பன்சலையும் இருக்கின்றது'. 'மாணிக்கமடு மாயக்கல்லி விடயத்தில் அம்பாறை மாவட்டத்தின் அதிகமான சிங்கள மக்கள் கவலையடைந்துள்ளனர். இங்குள்ள பௌத்த மக்கள் தமிழ் முஸ்லிம் மக்களுடன் மிக நல்லுறவைப் பேணி வருகின்றனர். மேலும் இங்குள்ள பிரச்சினைகள் பற்றிப் பேசி தீர்த்துக் கொள்ள இங்கு நாம் இருக்கின்றோம். ஞான சார இங்கு வரவேண்டிய எந்தத் தேவையும் கிடையாது. அவர் இனங்களுக்கிடையில் குழப்பம் ஏற்படுத்துபவர். இவர் விடயத்தில் முஸ்லிம்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும்'! என்றும் அவர் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

தீகவாபி பிரதம குருவின் இந்தச் செய்தியும், வேண்டுகோளும் புத்தசாசன அமைச்சு, சட்டம் ஒழுங்கு அமைச்சு மற்றும் அரசாங்கம் ஆகியவற்றின் தீவிர கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயங்களாகும்.

எனவே இவர் ஒரு பௌத்த துறவியா? இல்லையா? என்பதையும் இவர் ஏதும் நோய்களால் பாதிக்கப்பட்டிருக்கின்றாரா? என்பதையும் தீர்மானிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க ஆவன செய்யுங்கள்.

பின் அதுபற்றி இந்த நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்துங்கள் அதுவரையில் இவரும் இவருடன் தொடர்புடையவர்களும் மேற்கொள்ளும் இராத் தாக்குதல்களில் இருந்து தற்பாதுகாப்பு பெறும் வகையில் முஸ்லிம் கிராமங்களில் ஊர்காவல் படைகளை உருவாக்கி அவர்களுக்கு துப்பாக்கிகளையும் வழங்கி வைக்க முடியுமா என்று யோசியுங்கள். தவறும் பட்சத்தில் இதனால் அவமானப்படப்போவது இந்த நாட்டின் ஜனாதிபதியும், பிரதமரும் நல்லாட்சி அரசாங்கமும் குறிப்பாக புத்தசாசன, மற்றும் சட்டம் ஒழுங்கு ஆகியவற்றிற்குப் பொறுப்பான அமைச்சர்களுமாகும். 92சத வீதம் அறிவு மட்டத்தை கொண்ட மிக அழகிய இந்த சிறிய நாட்டில், சமாதானத்தையும் சக வாழ்வையும் விரும்புகின்ற பௌத்த தர்மத்தை நேசிக்கின்ற பெரும்பான்மை மக்கள் சீவிக்கின்ற இந்த பூமி இன்னுமொரு யுத்தத்தால் சீரழியக்கூடாது என்பதை நினைத்து தங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தயவாய் வேண்டுகின்றேன்.

இராஜ வாழ்க்கையில் திளைத்திருந்த புத்த பெருமானின் வாழ்க்கையில் திருப்பத்தையும், மனதில் மாற்றத்தையும் ஏற்படுத்திய அந்த வயோதிபரும், நோயாளியும், முற்றும் துறந்த முனிவரும், அழுகிக் கிடந்த பிணமும் ஏற்படுத்திய தாக்கங்கள் ஏன் ஞானசார தேரரில் ஆதிக்கம் செலுத்த மறுக்கின்றன என்பது பற்றி இந்த நாடே வினா விடுத்து இன்று ஏங்கித் தவிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம் மடலின் பிரதி சட்டம், ஒழுங்கு மற்றும் தென்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்னாயக்கவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நவமணி

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் மனக் குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன்மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல : 96, கிருல வீதி, கொழும்பு – 05
தொலைபேசி : 011-5353635 பெக்ஸ் - 011-5335500
ஈமெயில் : pccsl@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# முகாம்களிலுள்ளோருக்கு உலருணவு பொருட்களே வழங்கப்பட வேண்டும்

## சுகாதார கல்விப் பணியகத் தலைவர்

(செ.தர்ஷிகா)

வெள்ள அனர்த்தங்கள் காரணமாக இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு, சமைக்கப்பட்ட உணவுகளை வழங்குவதால் பிரச்சினைகள் எழக்கூடும். அதனால், உலருணவுப் பொருட்களை மாத்திரம் அம்மக்களுக்கு வழங்குமாறும் சமைத்த உணவை வழங்க வேண்டும் என சுகாதார கல்வி பணியத்தின் தலைவர் பீ.டிஸ்.பி. திசாயநாயக்க தெரிவித்தார்.

நேற்று கொழும்பு சுகாதார கல்விப்பணிமனையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலே அவர் இதனைத்தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

இந்நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளைச் செய்வதாயின், இடம்பெயர்ந்து மக்களுக்காக, குடிநீர்ப் போத்தல்கள், உலருணவுகள், சிறுவர் மற்றும் பெண்களுக்கான உள்ளாடைகள் மற்றும் நெப்கின்ஸ்கள் போன்றவைவை வழங்கமுடியும்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் துரித நடவடிக்கைககளை மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. காலரா, குஷ்டம், வயிற்றுப்போக்கு போன்ற தொற்று நோய்கள்,வெள்ளத்தினால் அடிப்பட்டு வருகின்ற மிருகங்களுக்கு இலக்காதல், எலி காய்ச்சல், அதாவாது எலியின் சிறுநீரினால் ஏற்படும் நோய்கள்,நுளம்புகள் , ஈக்களால் ஏற்படும் வியாதிகள் குறித்து மக்கள் இது தொடர்பில் விழிப்பாக இருக்கவேண்டும்.

வெள்ளப் பாதிப்பு ஏற்பட்ட பிரதேசங்களில் எதிர்வரும் நாட்களில் பெருமளவில் பரவக் கூடும் என்று சுகாதார சேவை வட்டாரங்கள் எச்சரித்துள்ளன.இந்நிலையில் இவற்றைக் கட்டுப்படுத்த போதுமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்குத் தேவையான மருந்து மாத்திரைகள் அனைத்துப் பகுதிகளுக்கும் போதுமான அளவில் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர்க் கிணறுகளில் கழிவுநீர் கலந்துள்ளதாகவும், இதன் காரணமாக பாரிய தொற்று நோய்கள் ஏற்படா வண்ணம் கிணறுகளை உடனடியாக சுத்திகரிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர். அத்தோடு பொதுமக்கள் அனைவரும் சுட்டாறிய நீரைப்பருகுமாறும் , உணவு உட்கொள்வதற்கு முன் கைகளை நன்றாக சவர்க்காரம் இட்டு கழுவுதல் வேண்டும். முக்கியமாக பழங்களை நன்றாக கழுவ வேண்டும். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிணறுகளை மீண்டும் பாவிப்பதாயின் சுத்தமான முறையில் சுகதார பரிசோதகர்களின் அறிவுறுத்தலுக்கமைய பாவிக்கவேண்டும்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுகாதார மற்றும் மருத்துவ வசதிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தேவைப்படும் பட்சத்தில் வெளிநாட்டு மருத்துவர்களின் உதவிகளைப்பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வெள்ளப் பெருக்கு சீற்றத்தால்

## கொலன்னாவையில் 4 பள்ளிவாசல்களுக்கு சேதம்

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை மற்றும் வெள்ளம் காரணமாக கொலன்னாவை பகுதியில் 4 பள்ளிவாசல்கள் வெள்ளதால் பாதிக்கப்பட்டுள்ளனதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் அபூபக்கர் ஜும்மாஆப் பள்ளிவாசல், பளுலுள்ளாஹ் பள்ளிவாசல், நூராணிய்யா ஜும்ஆப் பள்ளிவாசல் மற்றும் ரஹ்மா பள்ளிவாசல் ஆகியன இவ்வாறு வெள்ளத்தால் மூழ்கியுள்ளதாகவும், இவேளைத் தொழுகை உள்ளிட்ட புனித ரமழான் மாத கடமைகளை நிறைவேற்றுவதில் அப்பகுதியைச் சேர்ந்த முஸ்லிம்கள் மிகப் பெரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், ரஹ்மா பள்ளிவாசல் தவிர மற்ற எல்லா பள்ளிவாசல்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றன.

இந்நிலையில், கொலன்னாவை பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக நிர்க்கதியாகியிருந்த அப்பகுதி முஸ்லிம்கள் கொழும்பு அல்- ஹிஜ்ரா படசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ள நிலையில்,நேற்று நிலவிய சீரான கால நிலையால் தற்போது தண்ணீர் வடிந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.இதேவேளை, கே.ஆர்.சி அமைப்பு அப்பகுதியில் வெள்ளத்தால் பாதிகப்பட்ட மக்களுக்கு தொடர்ந்து நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றனர்.

# அனர்த்தகாலங்களில் அனைத்து பாகங்களிலும் பணியாற்றும் வாய்ப்பை அல்லாஹ் வழங்கியுள்ளான்

## முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் தலைவர்

தேசிய சமாதானத்துக்குப் பாதகமான மற்றும் அவசரகால நிலைமைகளில் இன வேற்றுமைகளை மறந்து தூரநோக்குடன் ஒருமித்துச் செயற்படுவோம். இந்த மே மாதம் எமது தாய்நாடு பல்வேறுபட்ட அனர்த்தங்களை எதிர்கொண்டுவருகின்றது. வெள்ளத்தினால் நூற்றுக்கும் அதிகமான உயிர்களும், பல கோடி ரூபா மதிக்கத்தக்க உடைமைகளும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். இந்த விடயத்தில் இனவேறுபாடுகள் இன்றி குறித்த பிரதேச செயலகம் ஊடாக நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் பணியாற்றும் வாய்ப்பை வல்ல அல்லாஹ் இந்தப் புனித றமழானில் எமக்கு வழங்கியுள்ளான். எனவே நாம் இந்த சந்தர்ப்பத்தில் அதிக அமல்களை செய்ய தாமதமின்றி களமிறங்க வேண்டும் என அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தின் தலைவர் பீ.எம். பாறுக்தெரிவித்தார்.

அதேபோல தேசிய சமாதானத்தை சீர்குலைப்பதை நோக்காகக் கொண்டு நாட்டின் பல பாகங்களிலும், குறிப்பாக முஸ்லிம்களின் வியாபார நிலையங்கள் மற்றும் மஸ்ஜித்களை இலக்குவைத்த மனிதர்களால் உருவாக்கப்படும் அனர்த்தங்களை எதிர்கொள்வதில் நாம் மிகவும் நிதானமாகவும் தூரநோக்குடனும் தேசிய உணர்வுடனும் செயற்பட வேண்டும். குறிப்பாக இந்தப் பிரச்சினையை முஸ்லிம்களின் தனிப்பட்ட ஒரு பிரச்சினையாகக் கருதி மாவட்ட ரீதியாக முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை நியமித்து அவர்கள் ஊடாக மாத்திரம் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் உபாயங்களை நாம் வன்மையாகக் கண்டிருக்கின்றோம். இது பாரிய எதிர்வினைகளை ஏற்படுத்தி முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் சில மாவட்டங்களில் அவர்களின் இருப்புக்கே ஒரு சவாலாக அமையலாம்.

அனைத்து இன மக்களினதும் பெருமதிப்பையும், கௌரவத்தையும் பெற்ற தேசமான்ய மர்ஹூம் அல் ஹாஜ் பாக்கிர் மாக்காரால் தூரநோக்குடன் சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம் இந்த சந்தர்ப்பத்தில் இலங்கை வாழ் அனைத்து முஸ்லிம்களுக்கும் இந்த தேசிய அரசியல் பிரச்சினையில் வழிகாட்டக் கடமைப்பட்டுள்ளது.

அந்த வகையில் நீங்கள் வாழும் பிரதேசங்களில் ஏதும் அசம்பாவிதங்கள் ஏற்படின் அதனை உடனடியான முஸ்லிம்களுக்குரிய ஒரு பிரச்சினையாக நோக்காது மாறாக நாட்டின் தேசிய ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் எதிரான ஒரு நாசகாரச் செயலாகவே நோக்க வேண்டும். அதன்படி மற்றொரு மாவட்டத்தில் அல்லது மாகாணத்தில் இருக்கும் ஒரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினரை நாடுவதற்கு முன்னர் தமது மாவட்ட பாராளுமன்ற, மாகாண மற்றும் உள்ளூராட்சி சார்ந்த மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து மதத் தலைமைகள் ஊடாக இதற்கான தீர்வை அடைவதில் முன்னின்று பணியாற்ற வேண்டும்.

அளுத்கம தர்காநகர் மற்றும் பேருவளை இன வன்முறைகளின் போது பாராளுமன்ற உறுப்பினர் பாலித தேவரப்பெரும போன்றவர்கள் செய்த உதவிகளையும், அதேபோல அனைத்து மாவட்டங்களிலும் இனவாத நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அப்பால் நின்று செயப்படக் கூடிய சிங்கள அரசியல் வாதிகள் இன்றும் எமது தாய் நாட்டில் உள்ளனர் என்பதையும் மீண்டும் நினைவுகூர நாம் கடமைப்பட்டுள்ளோம்.



ஸ்ரீ லங்கா முஸ்லிம் கவுன்ஸில் உட்பட முஸ்லிம் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் நேற்று ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா, தென்னாபிரிக்க நாடுகளின் தூதுவர்களை சந்தித்து இலங்கை முஸ்லிம் சமூகம் எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகள் பற்றி விளக்கினர்.

# பேருவளை பரீத் ஜௌஸகி காலமானார்



பிரபல பிரசுர கர்த்தாவும் கவிஞருமான பேருவளையைச் சேர்ந்த பரீத் ஜௌஸகி நேற்று அதிகாலை காலமானார். ஜனாஸா நேற்று நண்பகல் எலந்தகொட ஷெய்ஹு முஸ்தபா ஜும்ஆப் பள்ளி மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஜனாஸா நல்லடக்கத்தில் பெருந்திரளான ஊர்ப்பிரமுகர்களுடன் எழுத்தாளர்கள் கலைஞர்கள் கலந்து கொண்டனர். தனது அகவை ஐம்பத்தைந்தில் காலமான பரீத்ஜௌசகி அன்புத்துணைவியார் பாத்திமா ஷாமிலா மற்றும் நான்கு பெண்பிள்ளைகளை விட்டும் பிரிந்து செல்கிறார்.

நவீன முறையில் நூல்களை வடிவமைத்து வெளியிடுவதில் வல்லவரான இவர் பிரபல எழுத்தாளர்களின் நூல்கள் உட்படப் பல நூல்களை பிரசுரம் செய்திருக்கிறார். சில நூல்கள் பரிசும் பெற்றுள்ளன. இவர் வானொலிக்கவியரங்குகளிலும் பங்கு பற்றியுள்ளார்.

சீரற்ற காலநிலை:

# சப்ரகமுவ மாகாணத்தில் 16 மாணவர்கள் பலி

(பி.எப்.எம். றிஷாட்)

சப்ரகமுவ மாகாணத்தில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக இதுவரை 16 பாடசாலை மாணவர்கள் உயிரிழந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 14 மாணவர்கள் இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், இரு மாணவர்கள் கேகாலையைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.மேலும், சீரற்ற காலநிலையில் அப்பகுதியில் உள்ள 48 பாடசாலைகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இதில் இரத்தினபுரியில் 40 பாடசாலைகளும், கேகாலையில் 8 பாடசாலைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில்,வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்கள் 21 பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.எனினும், சீரற்ற காலநிலையால் சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மற்றும் நிவித்திகல கல்வி வலயங்களில் உள்ள அனைத்து பாடசாலைகளை எதிர்வரும் 2ஆம் திகதி வரை மூடுவதற்கு அறிவித்தல் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி குறித்த கல்வி வலயங்களில் உள்ள அனைத்து பாடசாலைகளையும் மூடுவதற்கு உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக சப்ரகமுவ மாகாண கல்வி பணிப்பாளர் சேபால குறுப்பாரச்சி தெரிவித்தார்.

எனினும் இரத்தினபுரி மாவட்டத்தின் எம்பிலிபிட்டிய மற்றும் பலாங்கொட கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகள் வழமை போல் இயங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.எனினும் தேவையேற்பட்டால் இடம்பெயர்தோரை தங்கவைப்பதற்கு குறித்த வலய பாடசாலைகளை பயன்படுத்தி கொள்ள முடியும் என அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# வசதி குறைந்த 400 குடும்பங்களுக்கு நோன்பு உணவுப்பொருட்கள்





(திகாமடுல்ல நிருபர்)

அக்கரைப்பற்று முத்தர் பௌண்டேஷனின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவில் வசிக்கும் வருமானம் குறைந்த சுமார் 400 குடும்பங்களுக்கு வர்த்தகப் பிரமுகர் எம்.ஐ.பௌமி ஹாஜி வழிகாட்டலில் கொழும்பு ஸம் ஸம் பௌண்டேஷனினால் நோன்புகாலத்திற்கான உலருணவுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் அக்கரைப்பற்று ஜூம்ஆ பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது.

இதன்போது அக்கரைப்பற்று ஜம்மியத்துல் உலமாசபைத் தலைவர் மௌலவி லெத்தீப், ஸம் ஸம் பௌண்டேஷனின் பிரதிநிதிகளான அஷ்ஷெய்க் றியாஸ் முப்தி, அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் பாயில் மற்றும் முத்தர் பௌண்டேஷனின் அங்கத்தவர் கே.எல்.மர்சூக் ஆகியோரால் வருமானம் குறைந்த அங்கத்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.



திருகோணமலை தக்கியா வீதியில் அமைந்துள்ள ஆயிஷா சித்திக்கா முன்பள்ளியினர் கடந்த சனிக்கிழமை நடாத்திய சிறுவர் சந்தையின் போது பிடிக்கப்பட்ட படம்.

(திருமலை நிருபர் காசிம் அஸ்வர்)


## விலைமனு அறிவித்தல்
**Lanka Mineral Sands Limited**

(கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு)

### பெறுமதிமிக்க கனரக கனிம மணல்களை விற்பனை செய்தல்

**கேள்வி இல: LMS/MKT/TDR/17/08**

இலங்கை கனிம மணல்கள் நிறுவனத்தின் சார்பாக, அமைச்சின் கேள்விமனு சபை தலைவர், பின்வரும் கனரக கனிம மணல் பொருட்களை வாங்குவதற்கு ஆர்வமுள்ள, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தரப்புக்களிடமிருந்து கேள்விமனுக்களைக் கோருகிறார். வாங்குவதற்கு சாத்தியமுள்ளோர், அனைத்து கொள்ளளவுக்கும் கேள்விமனு வழங்க வேண்டும்.

| | பொருள் | விற்கப்படும் அளவு | மனு பத்திரம் | கேள்வி மனு மூடப்படும், திறக்கப்படும் திகதி, நேரம் |
|---|---|---|---|---|
| 1 | **DRY ILMENITE** (PRODUCT IS CERTIFIED TO THE SPECIFICATION PROVIDED) | **3500 MT** (பொதிகளில் வழங்கப்படுகிறது) | **10,500,000.00** இலங்கை ரூபா அல்லது **70,000.00** அமெ. டொலர் | **28.06.2017** பிற்பகல் 02 மணி |

மனுதாரருக்கான அழைப்பிதழ், விற்பனை நோக்கம், மனுதாரருக்கான அறிவுறுத்தல்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், பரிந்துரைக்கப்படும் கேள்விமனு படிவம் மற்றும் பொருளின் விபரங்கள், இலக்கம் 341/21, சரணமாவத்தை, இராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை கனிம மணல்கள் நிறுவனத்தின் விளம்பரப் பலகையில் இடப்பட்டுள்ளன. அத்தோடு,ஆர்வமுள்ள தரப்புக்கள் இலகுவாக அணுகுவதற்காக www.lankamineralsands.com என்ற இணையத்தளத்திலும் இடப்பட்டுள்ளன. ஆர்வமுள்ள தரப்புக்கள் கேள்விமனுவின் விபரங்களை அறிந்து கொள்வதற்கு, இணையத்தளத்தை தரிசிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு சந்தைப்படுத்தல் முகாமையாளரை பின்வரும் இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொள்ளவும், +94112883951-2,+ 9411 2883965 அல்லது சந்தைப்படுத்தல் பிரிவை தொடர்பு கொள்ளுங்கள் +94 11 2883954, தொலைநகல் +94 112882668, மின்னஞ்சல்: ilmenite@slt.lk

**தவிசாளர்**
**அமைச்சின் கேள்விமனு சபை**
**இலங்கை கனிம மணல்கள் நிறுவனம்**
**341/21, சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை**

# நோன்பும் போதைகளும்

ரமழான் என்பதன் பொருள் கரித்தல், எரித்தல் என்பதாகும். கடந்த கால வாழ்வில் ஏற்பட்ட மனிதர்களின் பாவங்கள் கரிந்து போகின்ற மாதம் இது. நோன்பு குறித்து இறைவேதமாம் திருக்குர்ஆன் இப்படி வர்ணிக்கிறது.

இறைநம்பிக்கை கொண்டோரே உங்கள் மீது நோன்பு கடமையாக்கப்பட்டிருக்கிறது, உங்கள் முன்பிருந்த கூட்டத்தார் மீது விதியாக்கப்பட்டது போன்றே. ஏனெனில் நீங்கள் இறையச்சம் கொள்வதற்காக.

இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டபடி மனிதன் இறையச்சம் பெறுகின்ற விடயத்தில் நோன்பு மிக முக்கியமானதாகும். இந்த நோன்பின் வழியாக மனிதன் தன் உணர்வுகளின் மீது ஆளுமை பெறுகிறான். இந்த ஆளுமைதான் தக்வா என்று சொல்கிற இறையச்சத்தின் ஆணிவேறாகும்.

தன் புற உறுப்புகளை மிகச்சரியாக கையாளுகிற மனிதன் தன் உணர்வு மற்றும் இச்சைகளில் ஆளுமை செலுத்த இயலாமல் ஆகிவிடுகிறான் அல்லது அதை மறந்து இருக்கிறான். அந்த ஆளுமையை நோன்பு நமக்கு கற்றுதருகிறது. வெறும் பசித்திருப்பது மட்டும் நோன்பின் நோக்கமன்று. அதனூடாக மனிதனின் முழு குணமும் மாற்றி அமைக்கப்படுவதைத்தான் இஸ்லாம் விரும்புகிறது. ஏனெனில், பெருமானார் (ஸல்) அவர்களின் ஒரு கூற்று நம் அக கண்களைத் திறக்கிறது.

எவன் ஒருவன் பொய் பேசுவதையும், அதையே செயலாக செய்வதையும் விடவில்லையோ அவன் பகல் முழுவதும் பசித்திருப்பதும், குடிக்காமல் இருப்பதும் இறைவனுக்கு எந்த தேவையும் இல்லை

பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒரு செய்தியை நபிகள் நாயகம் அவர்கள் கூறுகிறார்கள்.இந்த ஹதீஸின் மூலமாக நாம் உணர்கின்ற ஒரு பாடம், பொய் பேசுவதை வாழ்வின் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் செய்கின்ற மனிதன், பின் அது வழக்கமாகி அதுவே பழக்கமாகவும் ஆகிவிடுகிறது. அந்த பழக்கம் குறித்தான உணர்வு கூட இல்லாமல் அதை தொடர்ந்து செய்துகொண்டிருக்கின்றான். அது போன்ற நம் வாழ்வில் உள்ள செயல்களை திரும்பி பார்ப்பதற்கான ஒரு சந்தர்பம்தான் நோன்பாகும்.

ரமழானுடைய காலங்களில் நம்முடைய பழக்கத்தில் உள்ள சில விடயங்களை நாம் விட்டுவிடுகின்றோம். உதாரணமாக புகைத்தல். இதை விடுவது மட்டும் போதும் என்றும் நினைத்துக்கொள்கிறோம்.



ஆனால், ஹராமான சொல், செயல், பார்வைகளை விட்டு தவிர்ந்திருப்பதற்கு அழகிய ஒரு வழியை அல்லாஹ் நமக்கு காண்பிக்கின்றான். உங்களுக்கு ஹலாலாக உள்ள ஆகுமாக்கப்பட்ட பொருளை தவிர்ந்திருங்கள் என்று இறைவன் கூறுகிறான். உலகில் எவ்வளவு விலை உயர்ந்த பொருளாக இருந்தாலும், அழகிய பொருளாக இருந்தாலும் அது நமக்குரியது என்று ஆகிவிட்டால் அதன் அருமைகளை நாம் மறந்து போகிறோம். மற்றதை தேட ஆரம்பிக்கிறோம்.

இன்றைக்கு உணவுகளும் ஒரு போதையாக ஆகிவிட்டது. வகை வகையான உணவை உண்பதற்கு உயர்தர ஹோட்டல்களுக்கு, வெகு தூரம் பிரயாணிக்கிறோம். அந்த போதையை உணரத்தான். நமக்கு முன்னால் உள்ள ஹராமான உணவை நீ உண்ணக்கூடாது என்று இஸ்லாம் நமக்கு கற்றுத் தருகிறது. அப்போது தான் ஹலால் உணவை குறித்து மனிதன் சிந்திக்கிறான். உணவின் மீதுள்ள போதை தெளிகிறது.

ஹலாலான அழகிய மனைவி உடன் இருக்க அதைவிடுத்து மற்ற அன்னியப் பெண்களை அவன் கண்கள் தேடுகிறது. அனுமதிப்பட்ட மனைவியை தொடுவதற்கும், இச்சை பேச்சுகள் பேசுவதற்கும் நோன்பு தடையை ஏற்படுத்தும்போது மனிதனின் அன்னியப் பெண்கள் மீதான போதை தெளிகிறது.

கெட்ட பேச்சுகளில் பழக்கமான நாவு அந்த போதையிலே திளைத்திருக்கிறது. நல்ல விஷயங்களையே ரமழானில் குறைத்து பேசவும். யாராவது சண்டையிட வந்தால் நான் நோன்பாளி என்று சொல்லவும் எனபதைக்கொண்டு பேச்சில் உள்ள போதையை இஸ்லாம் உணரவைக்கிறது.

இதையெல்லாம் விட, இன்றைக்கு இளையவர், பெரியவர் என்ற வித்தியாசம் இல்லாமல், எல்லோருடைய நேரத்தையும் மொத்தாக தின்றுகொண்டிருப்பது சமூகவலைத்தளங்களாகும். டுவிட்டர், பேஸ்புக், வாட்ஸ்அப் போன்றவை நம்முடைய மொத்த நேரத்தையும் எடுத்துக்கொள்கிறது. எவ்வளவு நேரம் அதில் செலவிடுகிறோம் என்று கூட தெரியாமல் தன்னை மறந்து வேறு ஓர் உலகிற்கு நாம் சென்றுவிடுகிறோம். இன்றைக்கு இருக்கும் எல்லா போதைகளையும் விட மோசமான போதை அது தான். அல்லாஹ் எம்மை பாதுகாப்பானாக.

ரமழான் என்பது அமல்களின் மாதம். அது அமல்களைப் படிக்கிற மாதம் என்பதைவிட, படித்த விடயங்களை செயற்படுத்தும் மாதமாகும். அதில் அதிகமாக குர்ஆன் ஓதுவது, ஸலவாத் சொல்வது, என்ற நல்லறங்களால் நம் மறுமை ஏடு நிரப்பப்படவேண்டும்.

அதில் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பொறுமையின் மாதம் என்று வர்ணித்ததுபோன்று பொறுமையாகவும், அமைதியாகவும் இருந்து நம் உள்ரங்க குணநலன் மாறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இந்த ரமழானை முழுமையாக பயன்படுத்தி நம்மை நாம் பண்படுத்துவதற்கு அல்லாஹ் உதவி செய்வானாக.

# யாழ். கோட்டை பள்ளிவாசல் மூடப்பட்டதன் மர்மம் என்ன?



(பாறுக் ஷிஹான்)

யாழ் மாவட்டத்தில் நகரை அண்டிய பகுதியில் உள்ள கோட்டை பள்ளிவாசல் தினமும் மூடிக்கிடப்பதை காண முடிகின்றது.

வரலாற்று முக்கியத்துவமுள்ள ஒல்லாந்தர் கோட்டைக்கு அருகில் அமைந்துள்ள இப்பள்ளிவாசல் தொடர்பாக இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

கடந்த காலங்களில் இப்பள்ளிவாசல் யாழ் முஸ்லிம்கள் சிலரினால் பராமரிக்கப்பட்ட நிலையில் திடீரென கைவிடப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

இப்பள்ளிவாசலுக்கு நிரந்திர மௌலவி ஒருவரோ நிர்வாகமோ இயங்குவதாக தெரியவில்லை.

இப்பள்ளிவாசல் கடந்த கால யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் அங்குள்ள தனவந்தரினால் புனரமைக்கப்பட்டு சிறிது காலம் இயங்கி வந்தது.எனினும் தற்போது சில நபர்களின் சுயநலத்தினால் தினமும் மூடப்பட்டு காணப்படுகிறது.

தினமும் பள்ளிவாசல் அருகே உள்ள கோட்டையை பார்வையிடவரும் வெளிமாவட்ட பிரயாணிகள் வருகை தருகின்றனர். இவர்கள் தொழுவதற்கு சிரமங்களை எதிர்கொள்வதை காண முடிகின்றது.

வரட்டு கௌரவத்திற்காக சில நபர்கள் குறித்த பள்ளிவாசலின் சொத்துக்களை தம்வசம் வைத்துவிட்டு தடுமாறி திரிவதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

சில அடையாளம் தெரியாத நபர்களின் நடமாட்டமும் குறித்த பள்ளிவாசலில் காணப்படுகின்றது. எனவே இப்பள்ளிவாசல் மீளவும் இயங்க ஆவண செய்ய நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## ஷஹ்ரு ரமழான்

ஆதில் அலி சப்ரி

## மனிதராய் வாழ்வோம்

★ கந்த பேரின்பம்- காவலூரான்

ஆண்டினில் ஒரு மாதம்
வருவது ரமழான்
அனைவரும் முறையாய்
நிறைவேற்றும் பெருநாள்
நான்காம் கடமையாம்
ரமழான் நோன்பு
நன்றாய்ப் பற்றுதல்
இஸ்லாமிய மாண்பு

இஸ்லாமியர்களுக்கு
இறையருள் வேண்டி
இனிதே வருவது
புனித ரமழான் நோன்பு
அல்லாஹ் சொன்ன
கடமைகளை நிறைவேற்றி
ஆன்ம ஈடேற்றத்தை
தந்திடும் நோன்பு

மூன்றாய் வகுத்திடுவோம்
முத்தான மாதத்தை
முதற்பத்து இறையருள்
வேண்டித் துதிப்பது
இரண்டாம் பத்து
செய்த பாவங்களுக்கு மன்னிப்பு
மூன்றாம் பத்து
நரகிலிருந்து விடுதலை

துன்பமென்பதை
அனுகவிடாமல்
இன்ப ஒளிவீசிட
வருவதே நோன்பு
அல்லாஹ்வின்
அருள்பெற வந்தது நோன்பு
அனைவர்க்கும் நன்மை
தந்தது நோன்பு

நல்லதே நினைப்போம்
தீயதை வெறுப்போம்
இல்லார்க்கு இல்லையென்று
சொல்லாது வாழ்வோம்
நபிகளின் வழியை
பின்பற்றி வாழ்வோம்
நாமிந்த பூமியில்
மனிதராய் வாழ்வோம்

சங்கைமிக்க இம்மாதம் முழுவதும் ஷஹ்ரு ரமழான் பகுதி பிரசுரமாகவுள்ளது. வாசகர்களும் ரமழான் தொடர்பான கட்டுரைகள், கவிதைகள், ஆக்கங்களை இப்பகுதிக்கு அனுப்பிவைக்கலாம். தட்டச்சு செய்யப்பட்ட ஆக்கங்களை aadhil992a@gmail.com என்ற மின்னஞ்சலுக்கும், ஏனையவைகளை "ஷஹ்ரு ரமழான்" இல.156, வைத்தியசாலை வீதி, களுபோவில, தெஹிவலை என்ற முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.

★ பௌஸானா பின்த் இஸ்ஸதீன்

"நேற்று நோன்பு திறக்க பெட்டீஸ் செய்தோம். இன்றைக்கு பேஸ்ட்ரி செய்யவேண்டும். பேஸ்ட்ரிக்கு மீனும், ஸஹருக்கு இறாலும் வாங்கிட்டு வாங்க. மகளுக்கு இன்றைக்கும் கோழி சாப்பிட முடியாதாம்".

"சின்ன மகனுக்கு கறியோட ஸஹர் சாப்பிட முடியாதாம். தயிரும் கோழி குட்டு வாழைப்பழமும் வாங்குங்க"



# நாம் இதுபற்றி சிந்தித்தோமா?

இது போன்ற உரையாடல்களை, கட்டளைகளை நமது வீடுகளிலும் கேட்டிருப்போம். தொடர்ந்தும் கேட்கலாம். பெயர்கள், பொருள்கள் மாறலாம். உரையாடல்கள் தொடரலாம்.

"இப்தாருக்கு என்ன கிடைக்கும்? தண்ணீர் மட்டும் தானா? பேரீச்சம் பழமும் கிடைக்குமா? யாராவது கஞ்சி, சமோசா கொடுப்பாங்களா?

ஸஹர் முடிவுக்கு முன்னர் சாப்பாட்டுப் பார்சல் கிடைக்குமா? நேற்று போன்றே, இன்றும் வாழைப்பழமும் தண்ணீரும்தானா?"

இதுபோன்ற எண்ணங்களும் கண்ணீரூற்றி புதைக்கப்பட்டுக்கொண்டிருக்கலாம். எமது உறவுகள், நட்புகள், சகோதரர்கள் எத்தனை பேரின் நிலைமை இதுவென தெரியவில்லை. அல்லாஹ் தான் காப்பாற்ற வேண்டும்.

மற்ற நாட்களில் முகாம்களில் இருப்பதே பெரும் அவஸ்தை. அதனை வர்ணிக்க முடியாது. அதுவும் ரமழானில்...

ஒரு பார்சல் சோற்றுக்கும், ஒரு கட்டி சவர்க்காரத்திற்கும், ஒரு பக்கட் பால் மாவிற்கும் வரிசையில் முண்டியடித்துக் கொண்டிருப்பதன் வலி எப்படியிருக்கும்? அதுவும் இதுவரை செழிப்பாய் வாழ்ந்தவரென்றால்?

அதோ! கஷ்டப்படும் எம் உறவுகளின் நிலையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். நம்மை படைத்தவன், அந்த றஹ்மான் எம்மை எப்படிப் பாதுகாத்திருக்கிறான் என்பது புரியும்.

அவர்களை கஷ்டப் படுத்தி சோதிக்கிறான். எங்களை பாதுகாத்து சோதிக்கிறான்.

எம்மை பாதுகாத்து, நிலைமைகளை சீராக்கி, வீடுகளில் வைத்திருக்கிறானே! நாம் அல்லாஹ்வுக்கு நன்றிசெலுத்தி ஒரு முறையாவது சுஜூது செய்தோமா?

இப்போதிலிருந்தே பெருநாளைக்கு ஆடை தேடும் சிந்தனையில் இருக்கிறோமே! அவனது கலாமை புரிய நேரம் ஒதுக்கினோமா?

ஸஹர் நேரத்தில் வரிசையில் நிறுத்தாமல் விட்டிருக்கிறானே! எத்தனை ரக்அத் கியாமுல்லைல் தொழுதோம்?

இப்தாருக்கு மேசைகளை அலங்கரிக்கும் நிலையில் வைத்திருக்கிறானே! அவனை துதிக்க, அவனிடம் பாவ மன்னிப்புக் கோர எவ்வளவு நேரம் ஒதுக்கினோம்?

இது பற்றி சிந்தித்தோமா? இல்லை, இன்னும் நோன்பு நோற்கும், துறக்கும் சாப்பாடுகளை சுற்றியே மனம் சுழல்கின்றதா? அப்படியென்றால் எங்களைப் போன்ற அபாக்கியசாலிகள் எவரும் இருக்கமுடியாது.




அவுஸ்திரேலியாவின் கொஸ்போர்ட் ஏன்க்லிகன் கிறிஸ்தவ ஆலயம் ரமழான் நோன்பை ஆரம்பித்துள்ள அவுஸ்திரேலிய முஸ்லிம்களுக்கு "ரமழான் முபாரக்" வாழ்த்துத் தெரிவித்து பதாகையொன்றை காட்சிப்படுத்தியுள்ளது. மேற்படி கிறிஸ்தவ ஆலயத்தின் தலைமை பிதா ரோட் போவர் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது. "ரமழானை எதிர்கொண்டுள்ள முஸ்லிம் சமூகத்துக்கு எங்கள் பிரார்த்தனை மற்றும் நல்ல எண்ணங்களை நாம் விரிவுபடுத்துகிறோம்" என்றும் தெரிவித்துள்ளார்.

## ரமழான் 2017
## உலக நாடுகளில் நோன்பு நோற்கும் மணித்தியாலங்கள்




## பூரண பாக்கியம் பெற்றிடுவோம்

எம்.எச்.எம். ஹஸ்பான், சம்மாந்துறை

சங்கையான ரமழானிது
சாந்தமான மாதமிது...
தான தர்மங்கள்
வாரி - வழங்கிடவே!
வழி சமைத்திடனும்
இறைவன் - நமக்கு....

வீண் பேச்சுக்கள்
வேடிக்கை - விளையாட்டு
பொழுது போக்கிட
பல வகை வினோதங்கள்
அத்தனையும் - துறந்து
சைத்தானின் - வழியை
நசுக்கி!
இறை - சொன்ன வழியே
எம் - வழி
அதுவே நல் - வழி
அதுவே நம் - வழி

பெற்ற பாக்கியம்
தவறிவிடாமல்
நல்லமல்கள் -
நாம் புரிந்து....
புனித ரமழானில்
பூரண பாக்கியம்
பெற்றிடுவோம் - நாம்!

# கலைதரங்கம்
கலை - இலக்கியம் - விமர்சனம்

கலைவாதி கலீல்

## டாக்டர் ஸக்காப் முபாரக் சிறப்பு மலரிலிருந்து...

# இலங்கையின் தேசிய அருங்காட்சியகமும், வாப்பிச்சி மரிக்காரும்

1872ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கையின் 14ஆவது ஆளுநர் சேர். வில்லியம் கிரகெரி (Sir William Henry Gregory) யிடமிருந்து அவசர அழைப்புக் கிடைத்தது. இலங்கையின் புகழ்பெற்ற கட்டட நிர்மாணத்துறை நிபுணர் **வாப்பிச்சி மரிக்கார்** உடனடியாக ஆளுநரை சந்திக்கச் செல்கிறார்.

''மரிக்கார், இலங்கையில் உங்களைப் போன்ற சிறந்த கட்டடக்கலை நிபுணரை இதுவரை எங்களால் காணமுடியவில்லை. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பணியை ஒப்படைக்கலாம் என்றுதான் உங்களை அழைத்துவரச் சொன்னேன்'' என்றார் ஆளுநர். ''இலங்கையின் தேசிய அருங்காட்சியத்தை நிர்மாணிக்கும் பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு என்னாலான சகல ஒத்துழைப்புக்களும் உங்களுக்கு கிடைக்கும்'' என்றார் அவர்.

வாப்பிச்சி மரிக்கார் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அருங்காட்சியகத்தின் நிர்மாணப்பணிகள் வேகமாக இடம்பெற்றன. நிர்மாணப்பணிகள் அனைத்தும் நேர்த்தியான முறையில் பூர்த்தியடைந்தன. **1877ஆம்** ஆண்டு ஜனவரி முதலாம் திகதி அருங்காட்சியகத்தை திறந்து வைக்கும் விழா விமரிசையாக இடம்பெற்றது. ஆளுநர் வில்லியம் கிரகரிக்கு மட்டில்லா மகிழ்ச்சி. நிர்மாணத்திற்கு பொறுப்பாக இருந்த வாப்பிச்சி மரிக்காரையும் தச்சுத்துறைக்குப் பொறுப்பாக இருந்த பெரேராவையும் அழைத்து ''உங்களுக்கு விருப்பமானதைக் கேளுங்கள். நான் தரத்தயாராக இருக்கிறேன்'' என்றார். உடனே. எஸ்.எம். பெரேரா தனக்கு ஒரு கௌரவ நாமத்தை வழங்குமாறு கேட்டிருந்தார். ஆளுநர் அவருக்கான கௌரவ விருதை வழங்கினார். ஆனால் வாப்பிச்சி மரிக்காருக்கு பிரித்தானி மகாராணியரால் வழங்கப்படும் உயரிய சிவில் விருதான "Knighthood" ஐ வழங்க வேண்டுமென்ற எண்ணம் ஆளுநர் கிரகரிக்கு இருந்தது. ஆனால், வாப்பிச்சி மரிக்காரோ ஆளுநரைப் பார்த்து, ''நான் கேட்டால் எதனையும் தருவீர்களா?'' என்று கேட்டார்.

''கண்டிப்பாக'' என்றார் ஆளுநர்.

''நான் உங்களிடம் கேட்கும் சன்மானம் ஒன்றுதான். இந்த அருங்காட்சியத்தை நீங்கள் வெள்ளிக்கிழமை நாட்களில் மூடி விட வேண்டும்''

''இவர் கௌரவ விருதை கேட்பார் என்றல்லவா? நினைத்திருந்தேன்'' என்று எண்ணியவாறு

''ஏன்? சன்மானமாக வெள்ளிக்கிழமை நாட்களில் அருங்காட்சியத்தை மூடிவிட வேண்டும் என்கிறீர்கள்'' என்று கேட்டு விட்டார்.

''ஆளுநரே இந்த அருங்காட்சியத்தை நான் கட்டி முடித்துவிட்டேன். இதனைப் பார்வையிட ஆயிரக்கணக்கான மக்கள் வருவார்கள். வெள்ளிக்கிழமை என்பது முஸ்லிம்களுக்குப் புனிதமான தினம். அவர்கள் அனைவரும் கூட்டுத்தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு சென்றுவிடுவார்கள். ஆனால் ஒரு முஸ்லிமாவது வெள்ளிக்கிழமை நாட்களில் பள்ளிவாசலுக்குச் செல்லாமல் இந்த அருங்காட்சியத்தைப் பார்வையிட வந்தால் இதனைக் கட்டியவன் என்ற ரீதியில் நானும் இறைவனிடம் பாவியாக மாறிவிடுவேன்'' என்றார் வாப்பிச்சி மரிக்கார். இதைக் கேட்ட ஆளுநர் சேர். வில்லிஜயம் கிரகெரிக்கு அதிர்ச்சியாக இருந்தது. வாப்பிச்சி மரிக்காரின் கோரிக்கையை உடனே ஏற்றுக்கொண்டார். 2010ஆம் ஆண்டின் பிற்பகுதிவரை இலங்கையின் தேசிய அருங்காட்சியகம் வெள்ளிக்கிழமை மூடப்பட்டிருந்தது. எமது கடந்த கால அரசியல் தலைவர்கள் சமூக உரிமைகளை வென்றெடுத்தார்கள். இவர்களே எங்கள் தேசிய தலைவர்கள். இவரது பேரன்தான் சேர். ராஸிக் பரீத்.

- பஸ்ஹான் நவாஸ்
செய்தி ஆசிரியர்,
இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

**முக்கிய குறிப்பு**

2010 ஆம் ஆண்டின் பிற்பகுதிவரை என்றால் என்ன பொருள்? அதன் பின்னர் முஸ்லிம்களுக்கு ஆங்கிலேய ஆளுநரால் வழங்கப்பட்ட உரிமை பறிபோனது. மஹிந்த ஆட்சியே அதனைப் பறித்தது. மியூஸியத்தை வெள்ளிக்கிழமை திறக்கும் தீர்மானத்தை மஹிந்த அரசு கொண்டுவந்த போது, இவ்வரசில் அங்கம் வகித்த முஸ்லிம் அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சித்தலைவர்களும் மௌனம் காத்தனர்.

ஒரு துரும்பைத் தூக்கிப் போடும் சிரமம் கூட இல்லாமல், வெள்ளிக்கிழமைகளில் மியூஸியம் திறக்கும் தீர்மானத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொண்டது மஹிந்த அரசு!

- கலை

''வெள்ளிக்கிழமை என்பது முஸ்லிம்களுக்குப் புனிதமான தினம் அவர்கள் அனைவரும் கூட்டுத்தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு சென்றுவிடுவார்கள். ஆனால் ஒரு முஸ்லிமாவது வெள்ளிக்கிழமை நாட்களில் பள்ளிவாசலுக்குச் செல்லாமல் இந்த அருங்காட்சியத்தைப் பார்வையிட வந்தால் இதனை கட்டியவன் என்ற ரீதியில் நானும். இறைவனிடம் பாவியாக மாறிவிடுவேன்'' என்றார் வாப்பிச்சி மரிக்கார்.



# ஒரு வாசகர் கடிதம் கவி வடிவில்

இந்த வாரத் தூரிப்பு எங்கேதான்
தரித்து விட்டதோ. ஒரு வேளை
'இது ஒரு நிலக்காலம்' என்று எழுதிவிட்டு
அந்த நிலவுக்கே சென்று விட்டதோ!
இது எங்களுக்கும் 'நிலாக்காலம்' தானே
இரவில் தரிசனம் கிடைக்காவிட்டாலும்
அதிகாலை பயணத்தின் போது கொஞ்ச
தூரத்திற்குக் காவலாக வருகின்றதே - பின்னர்
சொல்லிக் கொள்ளாமலே நின்று விடுகின்றதே
'தரிப்பை'ப் போல

- திருமதி ரபேக்கா மன்ஸுர்
உப அதிபர்,
முஸ்லிம் மகளிர் கல்லூரி
பம்பலப்பிட்டி

மேமன் கவிக்கு மணி விழாவாம் இந்தக் கவிக்கு
அதுதான் 'கலை'க்கு விழாக்காண்பது எப்போது?
எழுதியதையெல்லாம் சேர்த்துக் குவித்தால்
மீத்தொட்டமுல்லை குப்பைமேடும் தோற்றுப்போய்விடுமே
அதற்குள்ளே 'ஹெரோயின்' போதைப் பொருளைக்
கொண்டு போய் ஒளித்து விடுவார்கள் என்ற பயமோ
எது எப்படியிருப்பினும் 'குப்பை' மேட்டுக்கவிதை
சிகரத்தை தொடுகிறது.
ஒரு கலாநிதிக்கு விலாசம் கொடுக்கப் போய்
எனக்கொரு விலாசம் தர விழைந்தீர் - இன்னும்
இன்னும் எத்தனை பேருக்குத்தான் வாராவாரம்
அதனைக் கொடுத்து வருகின்றீர் (அந்த வகையில்
நீங்களும் ஒரு கொடை வள்ளல்தானே)
எத்தனை நூலுக்கு நயவுரை வழங்கியிருப்பீர்
உங்கள் நூலுக்கு அதனை வழங்குவது யார்?
அணிதிரண்டு வர ஆயிரம் பேர் காத்திருப்பரே -
ஏன் இன்னும் தாமதம் தொகுத்து வழங்குவதற்கு...

எத்தனை பேரைச் சந்திக்கு இழுத்திருப்பீர்
சண்டைக்கும் (இழுத்து) அழைத்திருப்பீர்
உள்ளதைச் சொல்லவும் - உண்மையைப்
பேசவும் தயங்காத நீங்கள் - ஒரு
பேனாமுனை வீரர்தானே... எதிரிகளை வீழ்த்துவதிலும்
வல்லவர்தானே - ஆனால்
எவரிடமும் சரணடைய மாட்டீரே - எரித்து விடுவீர்
ஆனால் எரிந்து விட மாட்டீர்.

மரிச்சுக்கட்டிப் பள்ளிவாசலின் வரைபடத்தையும்
வரைந்து - வரலாற்றினைக் கட்டுரைகளாகப் புனைந்து
மண்மீட்புப் போராட்டத்திலும்
பங்கு கொண்ட உங்கள் சேவை மகத்தானது.
பலாலியின் பஞ்சபாண்டவர்களில் ஒருவராகத் தன்னை
இனம் காட்டிக் கொண்டாலும் கல்விப்புலத்திலிருந்து
விலகியிருப்பதும் ஏனோ - கல்வி அதிகாரியாக (முன்னாள்)
காட்டிக் கொள்ளாததும் ஏனோ
கலைத்துறையோடும் ஊடகத்துறையோடும்
சங்கமித்தால் போதுமென்றாகி விடுமோ
கல்வியையும் - விசேடமாக முஸ்லிம் கல்வியையும்
எட்டிப் பார்க்க வேண்டாமோ - தட்டிக் கொடுக்க மாட்டீரோ
அங்கே மறைந்திருக்கும் மறைக்கப்பட்டிருக்கும்
பெண்களையும் - மறுக்கப்பட்டிருக்கும்
அவர்தம் உரிமைகளையும் பெற்றுக் கொடுப்பதற்கு
குரல் கொடுக்க மாட்டீரா?
நிலாக் காலங்களிலாவது... காட்டிற்கு அல்ல
நாட்டிற்கு... ஒளி கிடைக்குமா?

இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகி வரும் 'பாரம்பரியம்' வரவேற்கத்தக்க தொரு நிகழ்ச்சி.

அதில் சுவைபடக் கேட்கும் வினாக்களுக்கு தங்கள் அநுபவங்களுடனான பதில்கள் நிகழ்ச்சியை மெச்சச் செய்வதோடு, மெய்மறக்கவும் செய்கின்றன.

நிகழ்ச்சியை சுவைபடத் தொகுத்து வழங்கும் எம்.எஸ்.எம். ஜின்னாவின் கேள்விக் கணைகள் விருந்தினரின் பசுமையான நினைவுகளை மீட்டி, இளமைக் கால அநுபவங்களை நேயர்களோடு பகிர்ந்து கொள்வதற்கு உறுதுணையாக இருக்கின்றன.

'பாரம்பரியம்' என்ற நிகழ்ச்சியை ஆரம்பித்து அதனை சிறப்பாக நடத்துவதற்கு உறுதுணையாக இருந்த அதன் பணிப்பாளர், ஹாபிஸ் எஸ்.எம். ஹனீபாவுக்கும் தொகுத்து வழங்கும் ஜின்னாவுக்கும் எனது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

தொடர்ந்தும் 'பாரம்பரியம்' இலை மறை காயாக இருக்கின்ற பல சாதனையாளர்களை உலகிக்கு வெளிகொணரட்டும்!

சாய்ந்தமருது - எம்.எஸ்.எம்.ஸாகிர்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் நிகழ்ச்சிப் பகுதியில் சமீபத்தில் ஆரம்பமான 'பாரம்பரியம்' நிகழ்ச்சியானது பாராட்டப்பட வேண்டியது. முன்னைய இஸ்லாமிய நிகழ்ச்சிகளில் நாம் அறியாத, தெரியாத, கேட்க முடியாத பல அரிய விடயங்களை அறிய முடிகிறது. விசேடமாக இந்த நிகழ்ச்சியை நடாத்தும் கலாபூஷணம் எம்.எஸ்.எம்.ஜின்னா, தான் அதிகமாகப் பேசாமல் நேர்முகம் காணப்படுபவரையே பேச வைப்பது பாராட்டப்பட வேண்டியது. முஸ்லிம் நிகழ்ச்சிக்கும் ஜின்னாவுக்கும் எனது பாராட்டுக்கள்.

பாணந்துறை, எம்.பி.எம். நிஸ்வான்

# சென்றிடு வெள்ளமே!

வெள்ளமோ வெள்ளம்
வெள்ளமோ வெள்ளம்!
பள்ளம் நோக்கியே
பாயும் வெள்ளம்!

பணக்காரர்
ஏழையெனப்
பார்க்காத வெள்ளம்
கந்தல் ஆடையையும்
கழுவிச் செல்லும்
கருணையற்ற வெள்ளம்!

வெள்ளம் தந்த
பாதிப்போ பல
இடம்பெயர்வு ஓரிலட்சம்
மரணங்கள் பலநூறு
மனித நேயம் பாராட்ட
நிறுவனங்கள் பல
உணவு, நீர், ஆடை
மருந்து, மறைப்பு என
பொது நலன் தேடி
பிறர் நலன் காக்கும்
மனிதப் புனிதங்கள்!
தன்னுயிர் மதியாது
பிறர் உயிர் காக்க
முயன்று போராடும்
முப்படை வீரர்கள்

காரண கர்த்தா
யாரெனப் பார்த்தால்
இயற்கையின் சமநிலை
சிதைத்த மனிதருக்குப்
பதிலடி கொடுக்கும்
பகுத்தறிவில்லா
பாரிய வெள்ளம்!

இயற்கையின் அனர்த்தமது
இறைவனின் தண்டனையது!
இத்தகு வெள்ளமே
என்றும் வந்திடாதே!
சென்றிடு வெள்ளமே!

- பஸ்யால, எஸ்.ஏ. இஸ்மத் பாத்திமா



# அரச கலாபூஷண விருதுக்கு விண்ணப்பம் கோரல்

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

2017ஆம் ஆண்டிற்கான கலாபூஷண அரச விருது வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2017ஆம் ஆண்டிற்கான கலாபூஷண அரச விருது வழங்குவதற்கான முஸ்லிம் கலைஞர்களின் விண்ணப்பங்களை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கோருகின்றது.

இவ்விருதினைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பிப்பவர்கள் 2017.12.15 ம் திகதி 60 வயதினை பூர்த்தி செய்த முஸ்லிம் கலைஞர்களாக இருக்க வேண்டும். இதற்கான விண்ணப்பப் படிவங்களை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திலோ அல்லது தங்கள் பகுதி பிரதேச செயலகங்களிலிருந்தோ பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 2017.07.15ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ பணிப்பாளர், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், இல: 180, ரி.பி.ஜாயா மாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.



## உணர்ந்து - பேசுகிறது உள்ளம்

உணர்ந்து - பேசுகிறது உள்ளம்
என் - கள்ளம் கபடமில்லா
வார்த்தைகளால்.
உதறலின் - வலியும்
தனிமையின் - வலியும்
பல - கோடி....

இன்பங்களின் - வெளிச்சமே!
பகைமையான - கிளியின்
வெண்மையின் உள்ளிருக்கும்
கருகருப்பான
எண்ணம் - நல்லதென்றே
நினைப்பர் - நம் 'மடை'யோர்!
காகமது கறுப்பென்றாலும்
அது - கொண்ட
நல்லெண்ணம் - புரியா
பெரியோர்கள் இங்கு - பலபேர்!
உன்னைப்போன்ற
வாசகத்தில் - என்றென்றும்
இருந்திடுவாய் - உண்மையாகவென்று
முன்பின் அறியாமல் -
உரைத்த உண்மைகளுக்கு...

நல்லது அறியா
சமூகமதில்
நான் மட்டும்
நல்லவனாக - இருந்து
என்ன பயன்!

ச - கி

# இளங்கவிஞர் அறிமுகம்

## நிழல்

உனக்குள் நானும்
ஓர் ஆலமரமாய்
என்றாவது ஒருநாள்
வளர வேண்டும்

பெருமைக்காகவல்ல
பேராசைக்காகவுமல்ல
என் நிழல் - அடுத்தவருக்கும்
பயனாக அமைதல்வேண்டும்

ஒரு காலம்
நானும் - ஏனையோரின்
நிழலின் கீழ்
வாழ்ந்தவன்தான்

பயானா பாஷில்
கஹட்டோவிட

உங்களது தரமான ஆக்கங்கள் சுருக்கமாகவும் இறுக்கமாகவும் அமைதல் வேண்டும்.
எமது ஈ-மெயில் முகவரிக்கு அனுப்புங்கள்.
kalaiwathykaleel@gmail.com

# அரசியல், இன வேறுபாடுகளுக்கப்பால் மக்கள் நலனுக்காக நடமாடும் சேவை

## முல்லைத்தீவில் அமைச்சர் றிஷாத்



இன, மத அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் மனித நேயத்தையும் மக்கள் நலனையும் இலக்காகக் கொண்டு சுய தொழில் முயற்சியாளர்களுக்கான நடமாடும் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கைத்தொழில் வர்த்தக அமைச்சர் றிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

மக்களின் காலடிக்கு வந்து தமது அமைச்சின் கீழான நிறுவனங்கள் மேற்கொள்ளும் இந்த திட்டத்தின் உச்ச பயனைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர் வேண்டுகோள்விடுத்தார்.

கைத்தொழில் வர்த்தக அமைச்சின் கீழான கைத்தொழில் அபிவிருத்திச் சபை, நெடா, புடவைக்கைத்தொழில் நிறுவனம், தேசிய வடிவமைப்பு நிறுவனம் மற்றும் இன்னோரன்ன நிறுவனங்கள் கூட்டாக இணைந்து வவுனியா முல்லைத்தீவு மாவட்டங்களில் 28ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்த சுய தொழில் முயற்சியாளர்களுக்கு உதவும் நடமாடும் சேவையில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு அமைச்சர் உரையாற்றினார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது,

வன்னி மாவட்டம் யுத்தப் பாதிப்புக்களால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டம். இங்குள்ள மக்கள் சுதந்திரமாக, சுயதொழில் செய்து வாழவேண்டும் என்ற நோக்கிலேயே இந்த சேவை நடாத்தப்படுகின்றது. சுயதொழில் முயற்சியாளர்கள் தமக்கு ஏற்ற, தாம் விரும்பிய தொழிலை மேற்கொள்வதற்கு எனது அமைச்சு உதவும். அமைச்சின் கீழான நிறுவனங்கள் தொழில் முயற்சியாளர்களுக்கு பொருத்தமான உதவிகளை நல்கத் திட்டமிட்டுள்ளது. எனவேதான் அனைத்துத் திணைக்களங்களையும் ஒரு முகப்படுத்தி, ஒரே குடையின் கீழ் கொண்டுவந்து இந்த இடம்பெயர் சேவையை நடாத்துகின்றோம். இதன் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் குடும்பச்சுமையைக் குறைக்கவும் முடியுமென நம்புகின்றோம்.

அரச அதிபர், பிரதேச செயலாளர்களுடன் இணைந்து முதன் முதலாக வன்னி மாவட்டத்திலே இந்தச் சேவையை ஆரம்பித்து வரலாறு ஒன்றை தடம்பதித்துள்ளோம்.

உங்களிடம் வழங்கப்பட்டுள்ள கோவையிலிருக்கும் விவரங்களை வாசித்து, உங்களுக்கு ஏற்புடைய ஏதாவது ஒரு தொழிலை அடையாளப்படுத்தி அதிகாரிகளிடம் கொடுத்தால் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்போம். பயிற்சிகளோ குறித்த தொழிலுக்கு தேவையான உபகரணங்களோ அல்லது கடன் உதவியோ வழங்கப்படும். அதுமட்டுமன்றி உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தவதற்குக் கூட வசதிகள் செய்து தரப்படும்.

இந்த மாவட்டத்திலே தென்னை, பனை வளம் உட்பட நிரம்ப வளங்கள் தாராளமாக உண்டு அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பில் உங்கள் மனதில் பட்டதை கூறினால் அதற்கும் உதவக் காத்திருக்கின்றோம்.

தனிநபர்கள் மாத்திரமின்றி கூட்டாகவும் சுயதொழிலை மேற்கொள்ள முடியும் கூட்டு முயற்சியின் மூலம் கூட்டுறவின் அடிப்படையில் அதனை உருவாக்கி பங்குதாரர்களாக மாறுங்கள. அது நீண்ட காலம் நிலைக்கக்கூடிய முயற்சியாகும்.

இங்குள்ள பலருக்கு ஆற்றலும் திறமையும் இருந்தும் ஆதரவு கொடுக்க யாருமில்லாத நிலையிலேதான் நாங்கள் கை கொடுக்க முன்வந்துள்ளோம்.

இந்த நடமாடும் சேவையில் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவதற்காக திணைக்களங்களின் தலைவர்களும் உயர் அதிகாரிகளும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இங்கு வந்துள்ளனர். எனவே உரிய முறையில் நடமாடும் சேவையை பயன்படுத்திக்கொள்ளுங்கள் என்று அமைச்சர் கூறினார்.

இந்த நிகழ்வில் மாகாணசபை உறுப்பினர்களான றிப்கான் பதியுதீன், ஜனூபர், ஜயதிலக்க, அமைச்சின் மேலதிக செயலாளர் தாஜுடீன் அமைச்சரின் பொதுசன தொடர்பு அதிகாரி மொஹைடீன் உட்பட அமைச்சின் உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.



களுத்துறை மாவட்டத்தில் ஏற்பட்ட மண் சரிவு வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட, காயமடைந்தவர்களை ஹொரன ஆதார வைத்தியசாலையில் மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய பார்வையிடுவதைப் படங்களில் காணலாம்.
*(படம்- எம்.எஸ். எம்.முன்தஸிர்)*

# கிழக்கு முதலமைச்சரினால் வசதி குறைந்த மக்களுக்கு உதவி



கிழக்குமாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் வேண்டுகோளின் பேரில் இலங்கையின் தொண்டு நிறுவனங்களில் ஒன்றான அல்-இஹ்சான் அமைப்பினால் மட்டக்களப்பு மாவட்டத்தினைச் சேர்ந்த வசதிகுறைந்த மக்களுக்கான குடிநீர் இணைப்புக்கள் மற்றும் குழாய்க்கிணறுகள் அமைத்துக்கொடுக்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

ஏறாவூரின் எல்லைப்புறத்தில் இயங்கிவரும் அபூபக்கர் சித்தீக் பள்ளிவாயல் / அரபுக் கல்லூரி, ஜாமியா ஆயிஷா சித்தீக்கியா அரபுக் கல்லூரி ஆகிய இஸ்லாமிய நிறுவனங்கள் தங்களது அத்தியாவசிய தேவையான குழாய்க்கிணறு மற்றும் தண்ணீர்த் தாங்கிகளைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்ததற்கு அமைவாக இன்று தண்ணீர்த் தாங்கிகளும் குழாய் நீர் இணைப்பிற்கான வசதிகளும் அல்-இஹ்சான் அமைப்பினரால் வழங்கிவைக்கப்பட்டன.

# நிவாரணப் பணிகளில் ஸ்ரீலங்கா ஹிரா பௌண்டேஷன்



வெள்ளம் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள மாத்தறை மாவட்டத்தின் போர்வை, அக்குரஸ்ஸ, கொடபிட்டிய பகுதிகளில் நிவாரணம், சுத்திகரிப்பு மற்றும் மீட்புப் பணிகளில் ஸ்ரீலங்கா ஹிரா பௌண்டேஷன் களமிறங்கியுள்ளது.

மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவின் கோரிக்கைக்கு அமைய, ஸ்ரீலங்கா ஹிரா பௌண்டேஷன் தலைவரும் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சருமான எம்.எல். ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் இப்பணிகளுக்கான ஏற்பாடுகளை செய்துள்ளார்.

இதற்கமைய, வெள்ளத்தால் பாதிப்படைந்துள்ள பகுதிகளில் உள்ள குடிநீர் கிணறுகளை சுத்திகரிப்பதற்கு அதற்குத் தேவையான பொருட்களுடன் குழுவொன்றினை ஸ்ரீலங்கா ஹிரா பௌண்டேஷன் நேற்று மாத்தறைக்கு அனுப்பி வைத்துள்ளது. இக்குழுவினை வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வழியனுப்பி வைத்தார்.

அத்துடன், முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உலர் உணவினை தயாரிப்பதற்கான ஏற்பாடுகளையும் அது செய்துள்ளது.

இதேவேளை, நாளை மறுதாள் புதன்கிழமை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ள இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ், அங்கு அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் விசேட கலந்துரையாடலில் ஈடுபடவும் உள்ளார்.

# கருத்து வேறுபாடுகள் இருந்தபோதும் இடர்படும் மக்களுக்கு உதவும் பண்பு இலங்கையர்களிடம் காணப்படுகின்றது

## முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க



*(வத்துகாமம் நிருபர்)*

எம்மிடையே எத்தகைய கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் ஏதும் இடர்கள் ஏற்படுகின்ற போது அவை அனைத்தையும் மறந்து உதவும் பண்பு இலங்கையர்களிடம் காணப்படுகிறது என்று மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

யடிநுவர தேர்தல் தொகுதியில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யடிநுவர தொகுதியில் இழுக்தென்ன என்ற இடத்தில் இருந்து தெகிகஸ்தென்ன என்ற இடம் வரையான பாதையை அபிவிருத்தி செய்து அதற்கு எம்.பி.தியங்கொடை மாவத்தை எனப் பெயரிடும் வைபவத்திலே முதலமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது-

ஒருபாதையை அரச செலவில் அமைத்து அதில் அரசியல்வாதிகளான எமது பெயரையே அப்பாதையின் பெயராக பொறித்துக்கொள்வது இன்று பொதுவாக எல்லா அரசியல் வாதிகளாலும் செய்யப்பட்டு வரக்கூடிய ஒருகாரியமாக உள்ளது.

ஆனால் இப்பிரதேசத்திற்கு உண்மையாகவே சேவை புரிந்த ஒருவரது குடும்பத்தினர் அவர்களது செலவில் பாதை அமைத்து அவரது பெயர் சூடப்பட்டமை சற்று வித்தியாசமான ஒன்றாகும். இது வரவேற்கத்தக்கது. இலங்கையர்கள் நன்றியுடையவர்கள்.

இன்று நாடு எதிர்பாராத ஒரு இக்கட்டான நிலையில் உள்ளது. நாம் சகல பேதங்களையும் மறந்து மக்களுக்கு உதவி வருகிறோம். இது இலங்கை மக்களிடத்தில் காணப்படும் ஒரு சிறந்த குணாதிசயமாகும். மறைந்த அரசியல்வாதி ஹெக்டர் கொப்பேகடுவ பெருமளவு குடியேற்றங்களை யடிநுவர தொகுதியில் ஏற்படுத்தி இருந்தார். ஆனால் அவற்றுக்கான அடிப்படை வசதிகள் பாரிய அளவில் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. போக்குவரத்து, சுகாதார வசதிகள் போன்றே முக்கிய ஒன்றாக குடிநீர் பிரச்சினை இங்கு உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே, அடுத்த வாரமே எனது அதிகாரிகளை அங்கு அனுப்பி அதற்கான மூலாதாரங்களை கண்டு பிடிக்க நடவடிக்கை எடுக்க உள்ளேன் என்றார்.

இவ்வைபவத்தில் கண்டி மாவட்ட பாராளு மன்ற அங்கத்தவர் திலும் அமுனுகம உற்பட இன்னும் பலர் கலந்துகொண்டனர்.

# நிலைமாறுகால நீதி பொறிமுறை தொடர்பில் செயலமர்வு

*(புத்தளம் நிருபர் )*

நிலைமாறுகால நீதி பொறிமுறை மற்றும் இலங்கையில் அதன் பயன்பாடு, பரிந்துரைக்கப்பட்டுள்ள புதிய அரசியலமைப்பு அதன் தன்மை மற்றும் அதற்கான வாக்கெடுப்பு தொடர்பான இருநாள் வதிவிட செயலமர்வொன்று தேசிய சமாதான பேரவையினால் கொழும்பிலுள்ள கல்வி மற்றும் கலந்துரையாடல்களுக்கான நிலையத்தில் நடாத்தப்பட்டது.

இந்த செயலமர்வில் 16 மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சர்வமத பேரவையினால் தெரிவு செய்யப்பட்ட தொழில்சார் நிபுணர்கள் பங்கு பற்றினர்.

முன் மொழியப்பட்ட புதிய அரசியல் அமைப்பு மற்றும் சர்வஜன வாக்கெடுப்பு என்ற தலைப்பில் புரவெசி பலய ஒருங்கிணைப்பாளர் ஊடகவியலாளர் காமினி வியங்கொட, தேசிய நல்லிணக்கத்திற்கான அரசியல் அமைப்பு சீர்திருத்தங்கள் என்ற தலைப்பில் சட்டத்தரணி சுதர்ஷன குணவர்த்தன, இலங்கை தொடர்பில் ஜெனீவா தீர்மானம் என்ற தலைப்பில் கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் எம்.எஸ். மூக்கையா, நிலைமாறுகால நீதி என்ற தலைப்பில் சட்டத்தரணி ஜகத் லியான ஆராச்சி ஆகியோர் இந்த செயலமர்வில் தமது கலந்துரையாடல்களை வளவாளர்களாக கலந்து கொண்டு நடாத்தி வைத்தனர். தேசிய சாமாதானப் பேரவை நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா இந்த செலமர்வில் , விசேட உரையொன்றினை ஆற்றினார்.



அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் தரம்-10 இல் கல்வி பயிலும் மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட விஞ்ஞானக் கண்காட்சி பாடசாலையின் தொழில்நுட்ப ஆய்வுகூடத்தில் இடம்பெற்றது. இதன்போது கல்லூரியின் அதிபர் ஏ.எல்.கமறுதீன் மற்றும் பிரதி அதிபர் எஸ்.எல்.எம்.நசீர் ஆகியோர் இணைந்து கண்காட்சிக் கூடத்தினை நாடாவை வெட்டித் திறந்து வைப்பதையும் விஞ்ஞான ஆசிரியர் ஏ.எல்.எம்.நவாஸ் உள்விட்ட அதிதிகளும் மாணவர்களும் கண்காட்சியினைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# யாழில் பல்வேறு விபத்துக்கள்

*(யாழ். பாறுக் ஷிஹான்)*

யாழ். பொலிஸ் எல்லைக்குட்பட்ட பகுதியில் நேற்றிரவு(28) இடம்பெற்ற பல்வேறு விபத்துக்களில் ஒருவர் படுகாயமடைந்ததுடன் வாகனங்கள் பல சேதமடைந்தன.யாழ் நகரில் கச்சேரி அருகில் பழைய பூங்கா முன்பாக கன்டர் வாகனத்துடன் மோதுண்ட ஒரு மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் வீதியில் வீழ்ந்த சமயம் எதிரே வந்த காரின் சில்லுக்குள் அகப்பட்டு படுகாயமடைந்தார். இதனால் படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளார். இதேபோன்று இரவு 8 மணியளவில்
சிவன் புதுவீதியில் இருந்து பாரதியார் சிலைச் சந்தியை இணைக்கும் குறுக்கு வீதியில் ஒரு கார் தொலைபேசிக் கம்பத்துடன் மோதியதில் தொலைபேசிக் கம்பம் முறிந்து வீழ்ந்ததோடு கார் பலத்த சேதமடைந்தது.

இதேபோல் இரவு 9.15 அளவில் பலாலி வீதியில் மிக வேகமாக இரு கார்கள் துரத்திச் சென்ற சமயம் ஒரு கார் வேகக் கட்டுப்பாட்டினை இழந்து வீதியோரம் இருந்த மின் கம்பம் மற்றும் பாதுகாப்பு சுவர் என்பனவற்றுடன் மோதி நின்றது.

இதனால் கார் பலத்த சேதமடைந்தோடு மதில் மின் கம்பங்களும் பாரிய சேதமடைந்தன. குறித்த விபத்துக்கள் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புனித ரமழான் மாதம்: சில அவதானங்கள்



எம்.எம்.எம்.நூறுல்ஹக்
சாய்ந்தமருது

இஸ்லாத்தின் கட்டாய கடமைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு கோணங்கவில் முக்கியத்துவமும் ஈருலக பாக்கியங்களும் நிறைந்ததாக அமைந்திருப்பது அவற்றின் சிறப்புக்களில் ஒரு பகுதியாகும். அத்தகைய கடமைகளுள் ஒன்றான புண்ணியங்கள் நிறைந்த கண்ணிய ரமழானில் இருக்கின்றோம். ஆயினும் அது வழங்குகின்ற வளமான வாழ்வில் எம்மை உட்படுத்திக்கொள்வதன் மூலம் எம்மை நாம் வளப்படுத்திக்கொள்ளலாம்.

விசுவாசம் கொண்டவர்களே உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது கடமையாக்கப்பட்டது போல் உங்கள் மீதும் நோன்பு விதியாக்கப்பட்டுள்ளது. (அதனை நோற்பதன் மூலம்) நீங்கள் பயபக்தி உடையவர்களாக ஆகலாம். (குர்ஆன் 02:183)

இவ்வசனத்தின் மூலம் உபவாசம் புரிகின்ற வழக்கம் நபி ஆதம் (அலை) அவர்கள் காலந்தொட்டு இருந்துவருகின்ற ஒன்றென்பது புலனாகின்றது. ஆனால் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் காலத்தில் அனுஷ்டிக்கின்ற முறைமைகளுக்கு அது வேறுபட்ட போக்கினைக் கொண்டிருந்தது.

குறுகிய நாட்களையும் சில விஷேட நாட்களையும் குறிப்பாக்கி விரதம் பேணப்பட்டதும் உணவுகளை உட்கொள்ளாத வகையிலும் மற்றவர்களிடம் பேசாது மௌனித்து இருத்தல் போன்ற வகைகளிலும் முஹம்மது (ஸல்) அவர்களின் காலத்திற்கு முந்தியவர்களின் வழிமுறையாக இருந்தன என்பதை இஸ்லாமிய மூலாதாரங்களிலிருந்து விளங்கக்கூடியதாய் இருக்கின்றது.

அஸ்ஸவ்மு என்ற அரபிச் சொல்லிற்கு தடுத்தல் என்ற ஒரு பொருளும் உண்டு. பொதுவாக நோன்பு என்று இதை அழைப்பதை பெரும்பாலான மக்கள் நீண்டகாலமாக கைக்கொள்கின்ற ஒன்றாகவும் காணப்படுகின்றது. இது மூல அரபிச்சொல்லிற்குரிய பொருள்களில் ஒன்றுமாகும். அதிகாலை தொடக்கம் மாலை வரை உண்ணல், குடித்தல், புகைத்தல், புணருதல், பொய் பேசுதல், கோள் மூட்டுதல், புறம்பேசுதல் போன்ற காரியங்களைத் தவிர்த்து இருப்பதை அஸ்ஸவ்மு - தடுத்தல் எனும் சொல் சுட்டிக்காட்டுவதாக அமைந்துள்ளது.

நீங்கள் (நோன்பின் மூலம் அடைந்திடும் பயனை) அறிவீர்களாயின், நீங்கள் நோன்பு நோற்பதே உங்களுக்கு சிறந்ததாகும். (குர்ஆன் 02:184)

ரமழான் மாதத்தில் ஒவ்வொரு தினமும் நமக்கு வெகுமதிகளையும், படிப்பினைகளையும் உணர்த்தி நம்மை உயர்த்திவிடுகின்றது. பொறுமையின் அவசியத்தையும் அதனைப் பேண வேண்டிய பக்குவத்தையும் போதிக்கின்றது. நோன்பொரு கேடயமாக நமக்கு பயன்படுகின்றது. தீய காரியங்களிலிருந்து எம்மைப் பாதுகாக்க உதவுகின்றது. இதனால் நரக விடுதலை பெற்றுக்கொள்ளவும் வழியாகின்றது.

உபவாசம் பூணுவதால் அல்லாஹ்வின் மீது பற்றும் அச்சமும் பிறக்கின்றன. உணவைச் சிறிது காலம் குறைத்துக் கொள்வதால் மனதில் உருவாகும் ஆணவம், அகந்தை போன்ற தவறான எண்ணங்கள் அகன்று அகம் தூய்மை பெறுகின்றது.

இறையச்சவுணர்வு எவ்வளவு தூரம் நம்மை ஒட்டி உறவாடுகின்றதோ அவ்வளவு தூரம் நமது வாழ்வில் தூய்மையும், நேர்மையும், உண்மையும் இணைந்திருக்கும். இதனால், நேர்வழி வாழ்வு முறைமைகளும், நல்லவர்கள் என்ற சான்றுரைகளும் உறுதியாக சூழ்ந்து கொண்டிருக்கும்.

ஆகவே, மனிதனின் அகம், புறம் என்ற இரு பக்கங்களும் ஆத்மிக வெளிச்சத்தைக்கொண்டு இலங்கும். உளப்பரிசுத்தம், உடல் ஆரோக்கியம், பொருள் சுத்தம் என இதன் பயன்கள் பரந்தளவில் நம்மை வந்தடைகின்றன.

இறையடக்கம், நாவடக்கம், இச்சையடக்கம் போன்ற பண்பில் ஒரு நோன்பாளி தன்னை உட்படுத்திக்கொள்கின்றார். பொறுமை எனும் பொக்கிஷத்தை உறுதியாக கடைப்பிடித்துக்கொள்கின்றார். பசி, தாகம் போன்ற தேவைகளைச் சிறிது நேரம் புறக்கணித்து, இறை திருப்தியை மட்டுமே ஆதரவு வைக்கின்றார். அதுமட்டுமன்றி அடுத்தவர்களின் பசி, தாகம், இச்சை போன்றவற்றின் தாற்பரியங்களையும், அதன் மூலம் எதிர்கொள்கின்ற உணர்வலைகளையும் அனுபவரீதியாகவே புரிந்தும், தெரிந்தும் கொள்ளவும் நோன்பு வாய்ப்பளிக்கின்றது.



இதனால் அடுத்தவர் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள நம்மால் இயன்ற உதவிகளை நல்குவதற்கு நம்மை தயார் செய்துகொள்கின்ற பக்குவத்தையும், சினத்தை ஓரங்கட்டும் தன்மையையும் நம்மில் குடிகொள்கின்றோம். இதனால் நம்மை மட்டுமன்றி, நமது சகோதரத்துவத்திற்குரிய அணைப்பையும், இணைப்பையும், ஈகையையும், தியாகத்தையும் வேரூன்றி நம்மில் வளர்த்துக் கொள்கின்றோம்.

உடல் ஆரோக்கியங்கள் பலவற்றிற்குரிய ஒன்றாக நோன்பு தொழிற்படுகின்றது. நம்மை வந்தடைந்திருக்கின்ற சில நோய்களை தீர்ப்பதற்கான ஓர் அருமருந்தாகவும், இன்னும் சில நோய்கள் நம்மை அண்டிக்கொள்ளாது தடுத்துவிடுகின்ற ஒரு கேடயமாகவும் உபவாசம் இருக்கின்றது.

இன்றைய இளைஞர்களில் அநேகர் நோன்புக் கடமை வயோதிப ஆண், பெண்களுக்குத்தான் கடமை என்ற போக்கில் வாழ்வதைக் காண முடிகின்றது. மனோ இச்சையின் போக்கில் வாழத் துணியும் இளமைப் பருவத்தில் மார்க்கத்துக்கு இணக்கமான கைங்கரியங்களில் செயல்பட முன்வர வேண்டும். அப்போதுதான் அல்லாஹ் ஆசிக்கின்ற அடியானாக மாற முடியும். மாறாக இளமைப் பருவத்தை வீணாக கழித்து விட்டு வயோதிபக் காலத்தில் வணக்கம் புரிந்து வாழ்வோம் என்று வாழ்வது எவ்வளவு மடத்தனமான போக்கு என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்று இருக்கும் நாம் நாளை இருப்போமா? என்பது கேள்விக்குறி. இத்தகைய நிச்சயமற்ற வாழ்வுக்குரிய நாம் எப்படி இவ்வாறு ஆதரவு வைத்து வாழத் துணிவது?

இளமைப்பருவத்தில் செய்கின்ற நல்லமல்களே அல்லாஹ்விடம் ஏற்றமுள்ளதாகும். (வயோதிபர்களின் அமல்களும் ஏற்றமுள்ளது தான்.ஆயினும், கூலி பெறுவதில் கூடியது இளமைப்பருவத்தில் செய்கின்றவைக்குத்தான்.) ஏனெனில், இளமைப்பருவம் என்பது பொல்லாததும், ஷைத்தானின் வழிகேட்டில் சிக்கிக்கொள்வதற்கும் இலகுவானதாகும். இதிலிருந்து பாதுகாத்து இறைவனுக்குப் பொருத்தமான பாதையில் வழிநடப்பது வயோதிபத்தை விடச் சிறந்ததாகும்.எனவே, எமது இளைஞர்கள் இதனைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

எனவே, இஸ்லாத்தின் கடமைகள் இலகுவானவையாகும். இதனை நாமுணர்ந்து கொள்ளாது பெரிதாக எண்ணிக் கொண்டுள்ளோம்.

இளைஞர்கள் தங்களின் சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வது அவசியமானதும், அவசரமானதுமாகும். அருட்களை அளவின்றி அள்ளி அருளும் மாண்புமிகு ரமழானின் தத்துவங்களை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். இளைஞர்களாகிய நாம் மகத்துவமிக்க ரமழானின் பயன்களை பெறுவோமாக. என்ற உணர்வில் நிலை கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு வஸ்துவிற்கும் (சுத்தப்படுத்தக்கூடிய) ஸகாத் உண்டு. உடலின் ஸகாத் (சுத்தப்படுத்துவது) நோன்பாகும். நோன்பு பொறுமையின் பாதியாகும்.

(அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரழி) ஆதாரம்: இப்னுமாஜா)

சுவர்க்கத்தில் 'ரய்யான்' என்ற ஒரு வாசல் உண்டு. நோன்பு நோற்றவர்களே மறுமையில் அவ்வாசல் வழியாக நுழைவார்கள். அவர்களோடு வேறு எவரும் நுழைய மாட்டார்கள்.

(அறிவிப்பாளர்: ஸஹ்ல் (ரழி) ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

ஆதமின் குமாரனுடைய ஒவ்வொரு நற்செயலுக்கும் பத்து முதல் எழுநூறு மடங்கு வரை நற்கூலி வழங்கப்படுகிறது. நோன்பைத் தவிர்த்து (ஏனெனில்) அது எனக்குரியது. எனக்காக மனிதன் தனது இச்சைகளையும் உணவுகளையும் விட்டுவிடுகின்றான்.

(அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரழி) ஆதாரம்: புகாரீ, முஸ்லிம்)

ஏராளமான புண்ணியங்களை நமக்கு ஈட்டித்தரவல்ல நோன்பினை நோற்று அளவிட முடியாத அருட்கொடைகளை தமதாக்கி இம்மை, மறுமை ஆகிய ஈருலகிலும் ஈடேற்றங்களைப் பெற்றுக்கொள்வதற்கு திடசங்கற்பம் பூண்டு அருள் ரமழானில் எம்மையும் இணைத்து இன்புறுவோர்களாக நாம் மாற வேண்டும்.

நோன்பு நோற்பதற்காக ஸஹர் செய்ய வேண்டி இருப்பது நாம் அறிந்ததே. இச்செயற்பாட்டிற்குக் கூட பல்வேறு அர்த்தங்களையும், பல்வேறு நன்மைகளையும் இஸ்லாம் கோடிட்டுக்காட்டுகிறது.

(நோன்பு நாட்களில் நோன்பு பிடிப்பதற்காக) வைகறைப் பொழுதில் சாப்பிடுங்கள். (அவ்வாறு ஸஹர் செய்வதற்காக) வைகறைப் பின் ஜமாத்தில் உண்பதிலே (பறக்கத்) அபிவிருத்தி உண்டாகின்றது. என நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

(அறிவிப்பவர்: அனஸ் (ரழி) ஆதாரம்: புகாரீ. முஸ்லிம்)

முஸ்லிம்களாகிய (எங்களின்) நோன்புக்கும் வேதக்காரர்களின் நோன்புக்குமுள்ள வித்தியாசம் வைகறைக்கு முன் உண்பதாகும். என அம்ரிப்னுல் ஆஸ் (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். (ஆதாரம்: முஸ்லிம், அபூதாவூத்)

நோன்புக்காக ஸஹர் நேரம் உண்பது முழுவதும் பறக்கத்தை உண்டாக்கும். ஒரு மிடறு நீரை உட்கொள்வதாக இருந்த போதிலும் அதை விட்டு விட வேண்டாம். ஏனெனில், நிச்சயமாக அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் ஸஹர் செய்பவர்கள் மீது ஸலவாத்துச் சொல்கிறார்கள். (அல்லாஹ் ஸஹர் செய்வோரை மன்னித்து அருள் புரிகின்றான். மலக்குகள் அவர்களுக்காக பிரார்த்தனை செய்து அல்லாஹ்விடம் கெஞ்சிக்கேட்பார்கள்.) என நபி (ஸல்) அவர்கள் தெரிவித்தார்கள்.

(அறிவிப்பாளர்: அபூ ஸயீதுனில் குத்ரி (ரழி) ஆதாரம்: முஸ்னத் அஹ்மது)

முஸ்லிம் அல்லாதவர்கள் முஸ்லிம்களை அழைத்து நோன்பு திறக்கும் நிகழ்ச்சியை ஹோட்டல்களிலிருந்து விகாரை வரை செய்கின்றனர். இவர்களின் நோன்பு திறக்கச் செய்தலில் பங்குபற்றுவதை நாம் தவிர்க்க வேண்டும்.

ஏனெனில், முஸ்லிம் அல்லாதவர்களின் பணம் ஹலாலான முறையில் சம்பாதிக்கப்பட்டதா? உணவில் ஹறாம் கலக்காதவையா? என்ற நியாயபூர்வமான சந்தேகங்கள் இருப்பதனால் இது தவிர்க்கப்படல் வேண்டும். மற்றும் நோன்பு திறக்கச் செய்பவர்கள் நன்மை அடைய வேண்டுமென இஸ்லாம் விரும்புகின்றது. இதற்கு இங்கு வழி இல்லை. ஆகையால், இதனைத் தவிர்ப்பதுதான் ஏற்றமானது என்ற முடிவுக்கு நாம் வரலாம்.

நோன்பு திறக்கச் செய்வதினால் பின்வரும் நன்மைகளை அவர்கள் எய்துகின்றனர். இது முஸ்லிம் அல்லாதவர்கள் ஈட்டிக்கொள்ள முடியாது. ஆனால், இதனை நமது முஸ்லிம் சகோதரர்கள் கடைப்பிடிகின்ற போது பாரிய விளைவுகளை சொந்தம் கொள்கின்றனர்.

யாராவது ஒரு நோன்பாளிக்கு நோன்பு திறக்கும் உணவை அளித்தால் நோன்பாளியின் நன்மையைப் போன்று இவனுக்கும் நன்மை கிடைக்கும். ஆனால் நோன்பாளியின் நன்மை கொஞ்ச அளவேனும் குறைக்கப்பட மாட்டாது. என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பவர்: ஸல்மான் (ரழி) ஆதாரம் : தபறானி, தர்கீப்)

ரமழானில் ஒரு நோன்பாளிக்கு நோன்பு நோற்பதற்குரிய உணவை யாராவது கொடுத்தால் அது அவனது பாவங்களுக்கு மன்னிப்பாகவும் அவனை நரகை விட்டு உரிமை விட்டதாகவும் ஆ(க்)கி விடும். மேலும் நோன்பாளியின் நன்மையின் அளவுக்கு அவருக்குக் கிடைக்கும். (இதனால்) நோன்பாளியின் நன்மையில் சற்றும் குறைக்கப்படமாட்டாது. (இதைக் கேட்ட மாத்திரத்தில் ஸஹாபாக்கள் நபி (ஸல்) அவர்களை நோக்கி) நோன்பாளியை நோன்பு திறக்கச் செய்யக்கூடிய உணவை எங்களில் ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ள மாட்டார்களே என்று (பரிவோடு) கேட்டார்கள். அதற்கும் நபி (ஸல்) அவர்கள் பேரீச்சம் பழத்தைக் கொடுத்து அல்லது ஒரு மிடறு பாலைக் கொடுத்து நோன்பு திறக்கும் படி செய்தவர்களும் இந்தப் பலாபலனை அல்லாஹ் கொடுப்பான். என்று கூறினார்கள்.

(அறிவிப்பாளர்: ஸல்மானுல் பாரிஸி (ரழி) ஆதாரம் : இப்னு குஸைமா, தர்கீப்)

நோன்பு பிடிக்க இயலாத நோய் ஏற்படின் நோன்பை விட்டுவிடலாம். அவ்வியாதியுடன் நோன்பு நோற்றால் உயிருக்கு அபாயம் ஏற்படலாமென்ற அச்சப்படுகின்ற போது நோன்பை விடலாம். இவை திறமையான வைத்தியரால் முடிவு செய்யப்படுவது முக்கியம்.

பிரயாணத்தில் நோன்பு பிடிக்கக் கூடிய வசதிகள் இல்லாத போதும் நீண்ட பயணத்தால் களைப்பு, பலவீனம் ஏற்படலாம் எனும் நிலை காணுமிடத்து வாகனங்களால் சிரமங்கள் ஏற்படக்கூடிய போதும் நோன்பை விடலாம்.பிரயாணம் நாற்பத்தெட்டு மைல்களுக்கு மேலென்றால்தான் இந்தச்சலுகைக்கு இடமுண்டு.

சொந்த இடம் போன்ற வசதி உள்ள பிரயாணமானால் உபவாசம் பூணுவது உத்தமமாகும். பயணத்தை மேற்கொள்வது அதிகாலை பஜ்ருக்கு முன்பென்றால்தான் இச்சலுகையைப் பெற முடியும்.

இல்லையேல் நோன்பு நோற்பது கடமையாகும். நோன்பு நோற்றிருக்கும் போது கடும் வியாதி தோன்றி உயிருக்கு அபாயம் ஏற்பட்டாலும் இடையில் பிரயாணம் செய்ய வேண்டிய அவசிய(ச் சந்தர்ப்பம்)ம் ஏற்பட்டு அப்பயணத்தின் மூலம் நோன்பினால் கடும் சிரமத்தை பெற்றாலும் உடன் நோன்பை விட்டுவிடலாம்.

(ஆதார நூல்கள் : பத்ஹுல்கதீர், மஹல்லி, வகையறா)

இவ்வாறான போதிய காரணங்களின்றி நோன்பை பேணிக்கொள்ளாதவர்கள் எண்ணற்ற நன்மைகளைப் பெறத்தவறிய துரதிஷ்டசாலிகள் என்றே கூற வேண்டும். இதில் வேறு கருத்திற்கு இடமில்லை. உடல் வலிமை உள்ளவர்கள் ரமழான் மாதம் கிடைக்கப்பெற்றால் நோன்பு நோற்பது கட்டாயக் கடமையாகும்.

நோன்பு நோற்பதன் மூலம் சில நோய்கள் தீர்ந்துவிடுவதற்கும் வழியாகிறது.

உபவாசம் மேற்கொள்வதினால் தேகம் புத்துணர்வு பெறுகின்றது. இப்படி பல்வேறு கோணங்களிலும் நோன்பு நோற்பது நன்மைகளை ஈட்டித்தருகின்றன.




# இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் முதல் பணிப்பாளர் வீ. ஏ. கபூர்



கிழக்கு மாகாணத்தில் திருகோணமலைப் பிரதேச தோப்பூரில் வரிசைத்தம்பி ஹாஜியார், மரியம் பீபீ தம்பதியினரின் புதல்வராக வீ. ஏ. கபூர் 1930 டிசம்பர் 15இல் பிறந்தார்.

தோப்பூர் அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் ஆரம்பக்கல்விகற்று, கல்லடி உப்போடை சிவானந்தா வித்தியாலத்தில் இடைநிலைக்கல்வி பெற்று, கொழும்பு மருதானை ஸாஹிராக் கல்லூரியின் உயர்தரக் கல்வி கற்றார்.

1950 காலப்பகுதியில் இலங்கை வானொலி கல்விச் சேவையில் இலங்கையில் உள்ள ஊர்களை அறிமுகம் செய்யும் நிகழ்ச்சி ஒன்று ஒலிபரப்பாகி வந்தது. 1950இல் கொழும்பு ஸாஹிராவில் அதிபராக இருந்த அறிஞர் ஏ.எம். ஏ. அஸீஸ் இலங்கை வானொலி தமிழ்ச்சேவைப் பொறுப்பாளரை அணுகி "எங்கள் கல்லூரியில் வானொலியில் ஆர்வமுள்ள ஒருவர் இருக்கிறார். அவர் தனது ஊரான தோப்பூர் பற்றி கட்டுரை எழுதி, வாசிக்க ஆசைப்படுகிறார். சேர்த்துக் கொள்வீர்களா? என வினவியதற்கிணங்க, அந்த இளைஞனுக்கு வானொலி நிலையம் வந்து கட்டுரை வாசிக்க அனுமதி கிடைத்தது. மிகவும் அருமையான, அற்புதமான குரலில் அக்கட்டுரையை வாசித்த அன்றே அவர் பிற்காலத்தில் புகழ்பெற்ற ஒலிபரப்பாளராக வருவார் என்பதை எடுத்துக் காட்டுவதாக அவரது குரல்வளம் இருந்தது என குறிப்பிடப் பட்டுள்ளது.

அன்று பொரளை கொட்டாவீதியில் அமைந்திருந்த வானொலி நிலையத்தில் ஸாஹிராவின் மாணவர்கள் தயாரித்து வழங்கிய கதாப்பிரசங்கம் நிகழ்ச்சியில் தொடர்ந்து பங்குபற்றினார். இந்நிகழ்ச்சிக்கு மாணவர்களைத் தயார்படுத்தும் பொறுப்பினை ஸாஹிராவில் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்த எஸ்.எம். கமால்தீன் வழிநடத்தினார்.

என்றோ ஒருநாள் வானொலி அறிவிப்பாளராக வருவேன் எனக் கனவு கண்ட வீ. ஏ. கபூருக்கு 1953இல் வானொலி அறிவிப்பாளர் பதவி கிடைத்தது. சிறந்த செய்தி வாசிப்பாளராகவும், நேர்முக வர்ணனையாளராகவும் தன்னைப் படம்போட்டுக் கொண்ட இவர், 1984இல் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று ஆய்வுகளில் ஈடுபட்டார். 1972 இல் ஜேர்மனி 'டொய்ச்வெல் வானொலி' நிலையத்துக்குப் புலமைப்பரிசில் பெற்றுச் சென்ற இவர், மூனிச் நகரில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியின் போது வானொலி, தொலைக்காட்சிகுழு உறுப்பினராக இருந்து அரும்பணியாற்றி புகழ்பெற்றார்.

வீ. ஏ. கபூர் சிறந்த ஒலிபரப்பாளர் மட்டுமல்ல, சிறந்த ஒலிபரப்பாளர்களை உருவாக்கியவர். சிறந்த ஒலிபரப்புத் துறை பயிற்றுவிப்பாளர். இதனை நிரூபிக்கும் வண்ணம் பிரபல ஒலிபரப்பாளர் ஜோர்ஜ் சந்திரசேகரன் எழுதிய 'வானொலியும் நானும்' என்ற நூலை வீ. ஏ. கபூருக்கு அவர் சமர்ப்பணம் செய்துள்ளார். திறமையான வானொலிக் கலைஞர்களைப் பாராட்டிய அதேநேரத்தில், வானொலிக் கலைஞர்களின் குறைகளைச் சுட்டிக் காட்டி அவர்களைத் திருத்தும் பழக்கம் வீ. ஏ. கபூரிடம் காணப்பட்டது. வானொலியில் வீ. ஏ. கபூர் நடத்திய

'சிறுவர் மலர்' நிகழ்ச்சியில் பங்குபற்ற வந்த ஒரு சிறுவன் 'ல' என்ற எழுத்தை 'ழ' என்று உச்சரித்தான். அந்த மாணவனுக்கு ஆறு மாதங்களுக்கு நிகழ்ச்சியில் பங்குபற்ற முடியாது என கபூர் தடைவிதித்தார். அந்தச் சிறுவனும் சும்மாவிடவில்லை. அதனை ஒரு சவாலாக ஏற்றான். பயிற்சியின் மூலம் தனது தமிழ் உச்சரிப்பை முயற்சித்துத் திருத்திக் கொண்டதன் பயனாக இன்று தலைசிறந்த உலக தமிழ் அறிவிப்பாளராகவும், ஒலிபரப்பாளராகவும், வர்ணனையாளராகவும், நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் பெரும் புகழும் பெற்றுத் திகழ்கின்றார். அவர்தான் சிம்மக்குரலோன் பீ. எச். அப்துல் ஹமீத் என தம்பிஐயா தேவதாஸ் தனது இலங்கை வானொலி ஒலிபரப்பாளர்கள் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் காலஞ்சென்ற செல்வி. சற்சொருபவதி நாதன், ''செய்தி வாசிப்பதில் தன்னை படம் போட்டவர். வீ. ஏ. கபூர்'' எனப் பெருமையோடு குறிப்பிட்டுள்ளார்.

அறிஞர்கள், கலைஞர்கள், நடிகர்கள் எனப் பல்வேறு பிரபலங்களை கபூர் பேட்டி கண்டுள்ளார்.இன்றைய சிரேஷ்ட ஒலிபரப்பாளர்களுள் ஒருவரான சஹுஸ் முஹம்மது பெரோஸ் வீ. ஏ. கபூரிடம் பயிற்சி பெற்றுள்ளார் என தம்பி ஐயா தேவதாஸின் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. சஹுல் முஹம்மது பெறோஸ் தனது ஆசான் கபூரிடம் அறிவிப்பு என்றால் என்ன? என்று ஒரு கேள்வி கேட்டுள்ளார். அதற்கு கபூர், ''வாக்கியங்களிடையே போடப்படும் முற்றுப் புள்ளி, கமா போன்ற குறியீடுகளை குரல் மூலம் தெரிவிப்பதே அறிவிப்பு'' என்று அவர் கூறிய பதில் எவ்வளவு ஆழமானது என்பது சிந்திக்கத்தக்கதாகும்.

வீ. ஏ. கபூரின் ஆக்கங்கள் லண்டன், கெய்ரோ, சிங்கப்பூர், ஜகார்த்தா போன்ற நகரங்களின் வானொலி நிலையங்களிலிருந்து ஒலிபரப்பாகி பாராட்டுக்களைப் பெற்றுள்ளன.

கலாநிதி பதியுதீன் மஹ்மூத் தகவல் ஒலிபரப்பு அமைச்சராக இருந்தபோது முஸ்லிம் நிகழ்ச்சிகளுக்குத் தனியாக ஒரு மணி நேரம் ஒதுக்கித்தரப்பட்டது. அந்தக் குறுகிய நேரத்தை முழுமையாகப் பயன்படுத்துவதில் வீ. ஏ. கபூர் தனது ஆற்றலை இயலுமான வரை பயன்படுத்தினார். பல்வேறு கிராமங்களில் நடக்கும் தரமான குத்பாக்களை முஸ்லிம்கள் அனைவரும் முஸ்லிம் நிகழ்ச்சி மூலம் கேட்டு, பயனடையும் வகையில் அவற்றை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சி மூலம் அஞ்சல் செய்ய ஆவனசெய்தார். ஸஹர் ஒலிபரப்பு, லைலத்துல் கத்ர் இரவு ஒலிபரப்பு, நோன்புகால இரவு நேரமாற்றம் போன்றவற்றை அறிமுகம் செய்தார்.

1992இல் வீ. ஏ. கபூருக்கு ஒலிபரப்புக்கான 'உண்டா' விருது கிடைத்தது. சிறந்த அறிவிப்பாளராக, செய்தி வாசிப்பாளராக, வர்ணனையாளராக, வானொலி மஞ்சரி ஏட்டின் ஆசிரியராக, இணைப்பு அதிகாரியாக, வானொலிக் கலைஞராக பயிற்றுவிப்பாளராக என்றெல்லாம் அவர் ஆற்றிய பணிகள் முஸ்லிம் சேவையின் முதல் பணிப்பாளர் என்ற பெருமையை இவருக்கு ஈட்டிக் கொடுத்தது. இலங்கை வானொலியில் 32 வருடங்கள் சேவை புரிந்த வீ. ஏ. கபூர், 1985 இல் ஓய்வு பெற்றார். இவரின் இரு புதல்வர்களும் இரு புதல்விகளும் பொறியியலாளர்களாகவும் ஆசிரியைகளாகவும் பணியாற்றுகின்றனர்.

76 வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்து 01.04.2006இல் இவ்வுலகைப் பிரிந்த இனிய ஒலிபரப்பாளர் வீ. ஏ. கபூர் அவர்களுக்குக்கு ஜென்னத்துல் பிர்தௌஸின் பாக்கியம் கிடைப்பதாக!

இவ்வாக்கத்திற்கான தகவல்களைத் தந்துதவிய எனது அன்பு மாணவி மர்ஹூம் வீ. ஏ. கபூரின் இளைய மகள் ஜுமானா கபூருக்கு சகல பாக்கியங்களும் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்!

# வெள்ளப்பாதிப்பு படங்கள்


மாத்தறையில்









மல்வானையில்








ஹட்டனில்




களுத்துறையில்




வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வெயங்கல்ல பிரதேசத்தில் நேற்றையதினம் மஸ்ஜித்கள் சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இலவச மருத்துவ முகாம் மற்றும் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களான சுலைம், ஹிஷாம் சுஹைல் ஆகியோர் நிவாரண பணிகளில் ஈடுபட்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

## 02

2017 மே 30
ஹிஜ்ரி 1438 ரமழான் 04

**நவமணி மற்றும் ஜம்மியத்துஷ் ஷபாப் நிறுவனம் ஐந்தாவது தடவையாக இணைந்து நடாத்தும் மாபெரும் பரிசுப்போட்டி**

ரமழான் முபாறக்
பரிசு மழை
நவமணி

### போட்டி - 01
(திங்கள் – வியாழன்)

1ஆம் பரிசு : உம்ரா பொதி
2ஆம் பரிசு : மடிக்கணனி
3ஆம் பரிசு : கணனி
22 ஆறுதல் பரிசுகள்

### போட்டி - 02
(வெள்ளிக்கிழமை)

கட்டுரைப் போட்டியில் முதல் 3 இடங்களுக்கு பெறுமதியான பரிசில், நினைவுச் சின்னம், சான்றிதழ் வழங்கப்படும்

### போட்டி நிபந்தனைகள்

- **தினமும் 5 கேள்விகள்**
  - 2 பல்தேர்வு வினாக்கள் (விடையை தெரிவுசெய்தல்)
  - 3 கேள்விகளுக்கு விடைகளை எழுதவேண்டும்
- **30 நாள் கேள்விகளில் 25 நாட்களுக்கு மாத்திரம் விடையளித்தல் போதுமானது. (5 நாட்களுக்கு விடையளிக்காது விடலாம்)**
- **வெள்ளிக்கிழமைகளில் வழங்கப்படும் தலைப்புக்கு (போட்டி 02) 200 சொற்களில் கட்டுரை எழுதி அனுப்பவேண்டும்.**
- **போட்டி 02 இல் பங்குபற்றுவது விருப்பத்துக்குரியது**
- **போட்டி 01 மற்றும் 02 இற்கான விடைகளை ஒட்டுமொத்தமாக ஜூலை 15ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவையுங்கள். தனியான அனுப்பப்படுபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**
- **போட்டிகளின் முடிவுத்திகதி - ஜூலை 15, 2017**

1. ஸகாதுல் பித்ர் கொடுக்கப்பட வேண்டிய கால எல்லையைக் குறிப்பிடுக?
2. அல்லாஹ்வின் 27 பண்புகளைக் குறிப்பிடும் சூறா எது?
3. நாடுகான் பயணி இப்னுபதூதா அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
4. கண்டி இராசதானியில் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்ட இரு பிரதான பதவிகளைத் தருக?
5. நோன்பின் சட்டங்கள் குறித்து பேசும் சூறா பகறாவின் வசனங்களைக் குறிப்பிடுக?

நவமணி
**போட்டி - 02**
**30.05.2017 - செவ்வாய்க்கிழமை**

பெயர் : ..............................
முகவரி : ..............................
தொலைபேசி : ..............................
தே.அ.அ. இல.: ..............................
கையொப்பம் : ..............................

நவமணி

**Freelanka Media Ltd, 156, Hospital Road, Kalubowila, Dehiwala**

**மேலதிக விபரங்களுக்கு 077 6751032, 077 2604964, 077 2415415**

# இலங்கையில் நாணயத்தாள்களில் கையெழுத்திட்ட முதல் முஸ்லிம் – நெய்னா மரிக்கார்



(புத்தளம் எம். சி. இடுனு மஷூத்)

இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் நிதி அமைச்சராக இரு முஸ்லிம்கள் பதவி வகித்துள்ளனர். முதலாவது முஸ்லிம் நிதி அமைச்சராக நிந்தவூர் எம்.எம். முஸ்தபா பதவி வகித்தார். 1960களில் இடைக் காலம் பிரதமர் டபிள்யூ தஹநாயக்க அரசில் முஸ்தபா சிறிது காலம் நிதி அமைச்சராக பதவி வகித்தார். 1988 பெப்ரவரி 19ஆம் திகதி நிதித்திட்டமிடல் அமைச்சராகப் பதவியேற்ற எம்.எச்.எம். நெய்னா மரிக்கார் அக்காலத்தில் வெளியான 10,20,100,500 ரூபா நாணயத் தாள்களில் கையொப்பமிட்டார். நாணயத்தாள்களில் கையொப்பமிட்ட முதலாவது முஸ்லிம் இவராவார். இவர் பிறந்து இம்மாதம் 09ஆம் திகதி 100 வருடங்கள் நிறைவு பெற்றன.

ஆண்டவன் படைப்பிலே ஆயிரம்
ஆயிரம் கோடியில் அழகுற நின்று
ஆண்டவர் மாண்டவர் அத்தனை பேரிலும்
புகழ் கண்டவர் கோடி - இன்றிச்
சென்றவர் கோடி

இந்தக் கோடானு கோடியில் உலகம் திருத்த வந்த உத்தமர்கள், கலகம் செய்த கயவர்கள், மனிதனைப் புனிதனாக்கப் பாடு பட்டவர்கள், அவன் அழிய வேண்டுமென ஆர்ப்பரித்தவர்கள், சேவை செய்து செம்மலாய் நின்றோர், உண்மையை உரைத்து உயர்வு கொண்டோர் என மனிதர்கள் எத்தனை வகை.

**குடும்பம்**

இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன் புத்தளம் நகரில் பணம் படைத்தவர்களாக மட்டுமல்ல, பண்பு படைத்தவர்களாகவும் சீனா ஆனா கானா, சீனா ஆனா மூனா சகோதரர்கள் சிறந்து விளங்கினார்கள்.

அது 1917 ஆம் ஆண்டு மே மாதம் 09ஆம் நாள். புத்தளம் நோர்த் வீதியில் ஸாஹிராக் கல்லூரி தொடங்கப்பட்ட அந்தக் கட்டடத்தில், சீனா ஆனா மூனா முஹம்மத் ஹனிபா தம்பதிக்கு மஹ்மூது நெய்னா மரிக்கார் பிறந்தார். தனது 1 1/2 வயதில் தனது அருமைத் தாயை இழந்தார். முஹம்மத் ஹனிபாவின் சகோதரியின் அரவணைப்பில் பாலகன் நெய்னா வளர்ந்தார்.

**கல்வி**

1922 இல் புத்தளம் புனித அன்றூஸ் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைப் பெற்று கொழும்பு ஸாஹிராவில் நுழைந்தார். 1932இல் சிரேஷ்ட கேம்பிரிஜ் தேர்வில் சிறப்புத் தேர்ச்சியடைந்தார். 1934இல் பல்கலைக்கழக நுழைவைப் பெற்று 1938 இல் கௌரவ கலைமாணி பட்டத்தைப் பெற்றார். உயர் கல்விக்காக இங்கிலாந்தின் லண்டன் மாநகரில் அமைந்துள்ள கிங்ஸ் கல்லூரியில் இணைந்து நவீன வரலாறு, ஐரோப்பிய வரலாறு ஆகியவற்றில் பட்டத்தையும் சிவில் சேவைப் பரீட்சையிலும் தேறினார். 1939இல் புனித கத்தரின் கல்லூரியில் சேர்ந்து 1942இல் பட்டத்தைப் பெற்றார். இக்காலப் பகுதியில் இரண்டாம் உலகப் போர் மூண்டதனால் லண்டன் நகர பல்கலைக்கழக மாணவர்கள் பட்டாளத்தில் சேர்க்கப்பட்டார். ஹோம் கார்ட் படைப்பிரிவில் சேர்க்கப்பட்டு மூன்று வருடங்கள் அதில் பணியாற்றினார். ஒரு போர் வீரனுக்குரிய பயிற்சிகளையும் இவர் அங்கு பெற்றுக் கொண்டார்.

1947 இல் நாயகத்தில் கால் பதித்து இளம் சட்டத்தரணி நெய்னா மரிக்கார் சிறிது காலம் சட்டத்தரணியாகப் பணியாற்றினார். பிறகு சட்டக் கல்லூரியில் விரிவுரையாளராகவும் பணி செய்தார். இதே நேரம் முஸ்லிம் சகாய நிதியத்தின் முக்கிய அங்கத்தவராகவும் நன்கொடையாளராகவும் விளங்கினார்.

**அரசியல் பிரவேசம்**

1960ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டு புத்தளம் தொகுதியின் மக்கள் பிரதிநிதியாகத் தெரிவானார். 1965 பொதுத் தேர்தலில் 8000 மேலதிக வாக்குகளினால் வெற்றியீட்டினார். எனினும் 1970 பொதுத் தேர்தலில் 103 வாக்குகளினால் தோல்வியுற்று, அதேவருடம் நடைபெற்ற இடைத்தேர்தலில் மீண்டும் மக்கள் பிரதிநிதியாகத் தெரிவானார்.

அன்று தொடக்கம் 1988 வரை புத்தளம் தொகுதியின் பாராளுமன்ற பிரதிநிதியாகவும் பல்வேறு அமைச்சுப் பதவிகளையும் பொறுப்பேற்றார். அன்னார் நிதித்திட்டமிடல் அமைச்சராக விளங்கிய காலத்தில் 1988.11.21 ஆம் திகதி வெளியிடப்பட்ட ரூபா 10, 50, 100 நாயணத் தாள்களில் இவரது கையொப்பம் இடப்பட்டு சரித்திர புருஷரானார்.

**பல்துறை திறமைகள்**

நெய்னா மரிக்கார் இந்துஸ்தானி சங்கீதம் கற்றார். அரசியல் மேடைகளில் பாடினார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இசைப் பிரிவில் பாடகர் தெரிவுக் குழுவில் சேவையாற்றினார். தனது ஒலிப்படக் கருவியினால் பிடித்த அரியவகை படத் தொகுப்பும் பெறுமதி வாய்ந்த புத்தகங்கள் அடங்கிய, தனிப்பட்ட நூலகமும் இவருக்குச் சொந்தமாக இருந்தன. இஸ்லாமியர்கள் நிறைவேற்றும் ஐ வேளைத் தொழுகையை உரிய நேரத்திற்குத் தவறாமல் நிறைவேற்றுதல் இன்னாரது நேர்மைக்கும் பண்பாட்டுக்கும் வழிகாட்டியது எனலாம்.

**மக்கள் சேவைகள்**

அரசியல் தலைவராக 28 வருடங்கள் புத்தளம் தொகுதியில் ஆற்றிய சேவைகள், அடிப்படை வசதிகள் பட்டியலில் இருந்து தனது சொந்தப் பணத்தில் நிருமாணித்துக் கொடுத்தவைகளையும் அன்பளிப்புச் செய்த காணிகளையும் குறிப்பிட வேண்டும்.

புத்தளம் மஸ்ஜித் வீதியில் பழைய தண்ணீர்த் தாங்கி அமைந்துள்ள காணியும் மன்னார் வீதியில் நீர்த்தேக்கக் களஞ்சியம் அமைந்துள்ள காணியும் இவருக்குச் சொந்தமானவை.

முள்ளிபுரம், சவீவபுரம், பெரிய்டர்புர, சமீரகம வீடமைப்புத் திட்டங்கள் அமைந்துள்ள காணிகள்

புத்தளம் உட்பட சூழலிலுள்ள கிராமங்களில் பாடசாலை, வைத்தியசாலைக் கட்டடங்கள். பாராளுமன்ற உறுப்பினராக மக்களின் உள்ளத்தை வென்ற நெய்னா மரிக்கார் சொல்லின் பொருளுக்கேற்ப மக்களின் அன்பாளரானார். 1995.02.03 ஆம் திகதி இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.

**அரசியல் வரலாற்று காலக்கோடு**

1960 - (மார்ச், ஜூலை) புத்தளம் தேர்தல் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார்.

1965 - (மார்ச்) இரண்டாவது முறையாகவும் பா.உ. ராகத் தெரிவாகின்னர். நீதித்துறை அமைச்சரவையில் பாராளுமன்ற செயலாளராக (1965 - 1970) வரை பதவி வகித்தார்.

1966 - லண்டன் பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற மாநாடு - இலங்கைப் பிரதிநிதி

1967 - ஐ. நா. மாநாட்டுக் குழுவின் பிரதித்தலைவர்.

1968 - ஐ. நா. மாநாட்டுக் குழுவின் பிரதித்தலைவர்.

1972 - (ஒக்டோபர் இடைத்தேர்தல்) புத்தளம் தேர்தல் தொகுதி மக்கள் பிரதிநிதியாகத் தெரிவாகினார்.

1977 -(ஜூலை பொதுத்தேர்தல்) தொடர்ந்தும் பாராளுமன்ற பிரதிநிதியாகத் தெரிவாகினார். திட்டமிடல் பொருளாதார பிரதி அமைச்சர் பதவி.

1977 - (நவம்பர்) நிதி திட்டமிடல் பிரதி அமைச்சர்

1977 - (நவம்பர், டிசம்பர்) நேபால், கத்மண்டு 26ஆவது கொழும்புத் திட்ட ஆலோசனைக் குழுத் தலைவர்.

1980 - (நவம்பர்) இந்தோனேஷியா, ஜகார்த்தா - 28ஆவது கொ. தி. ஆ. குழுத் தலைவர்.

1980-81 - பாங்கொக் - ஆசிய பசுபிக் சமூக பொருளாதார ஆணைக்குழுவின் அமைச்சரவைக் குழுத் தலைவர்.

1982 - ஜப்பான், டோக்கியோ - 29 ஆவது கொ.தி. ஆ. குழு அமைச்சரவைக் குழுத்தலைவர்.

1982, 83, 84 - பாங்கொக் - ஆசிய பசுபிக் கொ.தி. ஆ. குழு அமைச்சரவைக் குழுத்தலைவர்.

1984 - மலேசிய - 30 ஆவது கொ. தி. ஆ குழுவின் அமைச்சரவைக் குழுத்தலைவர்.

1985 - பாங்கொக் ஆசிய பசுபிக் ச. பொ. ஆ. குழுத் தலைவர்.

1986 - அவுஸ்திரேலியா, சிட்னி - 31 ஆவது கொ. தி. ஆ. குழு அமைச்சரவைக் குழுத்தலைவர்.

1987 - பாங்கொக் - ஆசிய பசுபிக் ச.பொ. ஆ. குழு அமைச்சரவைக் குழுத்தலைவர்.

## புத்தகங்கள்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பாதிக்கப்பட்டுள்ள 8 மாவட்டங்களில் இயங்கும் அனைத்து பாடசாலைகளும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை மூடப்படும் என்றும் அவர் கூறினார்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் கூறினார். இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர்,

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள பாடசாலைகள் குறித்த தரவுகளை நாம் சேகரித்து வருகிறோம். அதற்கமைய வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிப்புக்குள்ளான கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, மாத்தறை, காலி, ஹம்பாந்தோட்டை ஆகிய 8 மாவட்டங்களில் இயங்கிவரும் சகல பாடசாலைகளையும் எதிர்வரும் நாளை (இன்று) செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமைவரை மூடுவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இப்பிரதேசங்களின் சில பாடசாலைகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதோடு, ஏனைய சில பாடசாலைகளில் நலன்புரி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாலேயே நாம் இந்நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளோம்.

அதேநேரம், சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் குறித்த அறிக்கையொன்றையும் நாம் தற்போது கோரியுள்ளோம். அவ்வாறான மாணவர்களுக்கு நாம் மூன்று சீருடைகள், ஒரு ஜோடி சப்பாத்துக்கள், அப்பியாசக் கொப்பிகள், பாடப்புத்தகங்கள் என்பவற்றை உடனடியாக வழங்கிவைக்கவும் ஏற்பாடு செய்துள்ளோம்.

மேலும், மாணவர்களுக்கான நிவாரணப்பொருட்களை குறித்த மாவட்டங்களில் இயங்கும் தேசிய பாடசாலைகள் மூலமாக நாம் சேகரித்து வருகிறோம். எனவே, பணம் மற்றும் பழைய உடைகள் அன்றி பாதிப்புக்குள்ளாகியுள்ள மாணவர்களுக்குத் தேவையான பொருட்களை பொது மக்கள் வழங்கினால் ஏற்றுக் கொள்வோம் என்றும் நாம் தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

## சந்தேக...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பிரதேசவாசிகளும் இணைந்து குறிப்பிட்ட நபரைப் பிடித்து புளுமென்டல் பொலிஸாரிடம் கையளித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகின்றது.

முஸ்லிம்களால் இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக காட்டப்படுவதற்கு இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனப் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதே நேரம் பொலிஸாரின் ஏற்பாட்டில் இந்த புத்தர் சிலை உடனடியாக திருத்தப்பட்டுள்ளது.

## சௌபாக்கிய...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

2 பில்லியன் ரூபா கடன்தொகையை திறைசேரியில் இருந்து பெற்றுக்கொடுக்கவும் மத்திய வங்கியின் ஆளுநர் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, சௌபாக்கிய மற்றும் சுவசக்தி கடன்களுக்கே மேற்படி நிவாரணம் வழங்கப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தபோதே கல்வி அமைச்சரான அகில விராஜ்காரியவசம் மேற்கண்டத் தகவலை வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஹெலியில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கலவானையிலிருந்து இரத்தினபுரிக்கு கொண்டு வந்த நிலையில் குறித்த கர்ப்பிணி தாய் குழந்தையொன்றை பிரசவித்துள்ளார்;. தாயும், குழந்தையும் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவேளை குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

ஹெலிகெப்டரில் பிரசவம் ஆரம்பமான போதும், வைத்தியசாலையில் வைத்தே பிரசவம் நிறைவடைந்துள்ளது.

25 வாரத்திற்கும் குறைவான வயதுடைய குழந்தையென்பதால், குழந்தையை காப்பாற்றுவதில் சிக்கல் ஏற்பட்டதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும்,அனர்த்தத்திற்குள்ளான நிலையில் இருதய நோயாளர் ஒருவரும் குறித்த ஹெலிகெப்டரில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பலியானோர்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கொண்டிருக்கும் காலநிலை மாற்றத்தினால் இதுவரை ஒரு இலட்சத்து 153,303 குடும்பங்கள் மொத்தமாக பாதிக்கப்பட்டுள்ளதோடு 640 வீடுகளும் முழுமையாக சேதமடைந்துள்ளன.

குறிப்பாக இரத்தனபுரி, மாத்தறை, காலி, களுத்துறை, கொழும்பு, கேகாலை, கம்பஹா, ஹம்பாந்தோட்டை ஆகிய 8 மாவட்டங்களிலேயே அவல நிலைமை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இவற்றில் சில இடங்களில் வெள்ளநீர் வடிந்தோடினாலும் தொடர்ந்தும் மழை பெய்யக் கூடிய நிலைமை காணப்படுவதால் மக்கள் அச்சநிலையிலேயே இருந்து வருகின்றனர்.

இம்மாவட்டங்களைப் பொறுத்தவரை இரத்தனபுரியில் 77 மரணங்களும், களுத்துறையில் 54 மரணங்களும், மாத்தறையில் 24 மரணங்களும், காலியில் 12 மரணங்களும் சம்பவித்துள்ளன. மேலும், இதனால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தற்போது 366 நலன்புரி முகாம்களிலும் பாதுகாப்பான முறையில் தங்கவைக்கப் பட்டுள்ளனர்.

இந்நிலையில், நேற்று இடர்முகாமைத்துவ மத்திய அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் வஜிர அபேகுணவர்தன, பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடியாக உயிர் பாதுகாப்பு அங்கிகளை (லைப் ஜெகட்) பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

அத்தோடு, வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதும்; முற்றாக தேதமடைந்துள்ள வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதும் அரசின் பிரதான பொறுப்பாகவே காணப்படுகின்றது.

எனினும், பேஸ்புக் போன்ற சில சமூக வலைத்தளங்களில் அரசு மந்த கதியில் செயற்படுவதாக குற்றம் சுமத்தப் பட்டுள்ளது. இதனை நாம் முற்றாக நிராகரிக்கிறோம். நாட்டில் வெள்ளம் மற்றும் மண்சரிவு ஏற்பட்ட நாள் முதல் அமைச்சர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள், முப்படையினர், பொலிஸார் என அனைத்துத் தரப்பினரும் இரவு பகல் பாராது கடுமையாக உழைத்து வருகிறார்கள். மக்களுக்கு நிவாரணங்கள் வழங்குவது மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது என சகல செயற்பாடுகளும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு தான் வருகின்றன. இன்று (நேற்று) நிவாரணப் பொருட்களை ஏற்றிச் சென்ற ஹெலிகெப்டர் விபத்துக்குள்ளான போதிலும், அதிலுள்ள பொருட்கள் பாதுகாப்பாக இறக்கப்பட்டு படகுகள் மூலம் மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிலைமைகள் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமரும் மிகுந்த அவதானத்துடன் தான் இருக்கிறார்கள். அத்தோடு, பாதிக்கப்பட்ட மக்களை உடனடியாக மீட்க முடியாத நிலைமைகளின்போது உயிர் பாதுகாப்பு அங்கிகளை அவர்களுக்கு துரிதகதியில் வழங்குவதற்கும் அரசினால் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

## முஸ்லிம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பணிப்பாளர் அஷ்-ஷெய்க் எம்.ஆர். எம். மலிக் நவமணிக்குத் தெரிவித்தார்.

இந்நிகழ்வு மருதானை பூக்கர் மண்டபத்தில் தபால் மற்றும் தபால் சேவைகள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் பங்களிப்புடன் நடைபெற இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அனர்த்தத்தில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

மேலும் நிதி உதவிகள் அவசியமாயின் உடனடியாக தெரிவிக்குமாறு மாவட்ட செயலாளருக்கு ஆலோசனை வழங்கிய ஜனாதிபதி, விசேடமாக படகுகளினால் அண்மிக்க முடியாத உயிர் அச்சுறுத்தல் உடைய பிரதேசங்களில் சிக்கியிருக்கும் மக்களை மீட்பதற்கு விசேட திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவும் ஆலோசனை வழங்கினார்.

தற்காலிக முகாம்களில் வசிக்கும் மக்களுக்கு தேவையான உணவு, மருந்து பொருட்கள் மற்றும் ஆடையணிகள் தொடர்பாக தொடர்ச்சியாக கண்காணித்து அவற்றைப் பெற்றுக்கொடுக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

உயிரிழந்தவர்களின் இறுதிக்கிரியைகள் தொடர்பாக விசாரித்து அறிந்த ஜனாதிபதி, நீர் வழிந்தோடியதன் பின்னர் மக்களின் வசிப்பிடங்களையும், கிணறுகளையும் சுத்தம் செய்வதற்காக பின்பற்றவுள்ள முறை தொடர்பாகவும் விசாரித்தார்.

அதேபோல் பாதிக்கப்பட்ட வீடுகளை நிர்மாணிப்பதில் முப்படையினர் மற்றும் சிவில் பாதுகாப்பு பிரிவினரின் உதவியையும் பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனை வழங்கினார். மக்களின் வாழ்வாதார மார்க்கங்களை மீண்டும் உறுதி செய்வதற்கும் சலுகை ரீதியான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் ஆலோசனை வழங்கினார்.

அனர்த்தத்திற்குள்ளான மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு பல உலக நாடுகள் முன் வந்துள்ளதுடன், இந்தியாவிலிருந்து இரு நிவாரணக் கப்பல்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். சர்வதேசத்தில் அனைவரது ஒத்துழைப்புடன் அனர்த்தத்திற்குள்ளான மக்களின் வாழ்வாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான தமது பொறுப்புக்களை அரசாங்கம் நிறைவேற்றுமெனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அமைச்சர்களான டப்ளியு.டி.ஜே. செனெவிரத்ன, தலதா அத்துகோரல, பிரதி அமைச்சர் கருணாரத்ன பரணவிதான, மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், இரத்தினபுரி மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகள், முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பாதுகாப்பு பிரிவின் பிரதானிகளும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## வெள்ளம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

விடுமுறை கூட இல்லாது தொடர்ச்சியாக பணியாற்றிவரும் இவர்களினால் மட்டும் இதுவரை 123 உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.

அதேநேரம், இக்காலத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எவ்விதமான கொள்ளைச் சம்பவங்களும் பதிவாகவில்லை என்பதையும் நாம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்

வெள்ளத்தினால் 23 பொலிஸ் நிலையங்கள் முற்றாக பாதிக்கப்பட்டாலும் ஆவணங்கள் உள்ளிட்ட அனைத்து முக்கியமான தரவுகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன என்பதையும் நாம் இங்கு கூறிக்கொள்ள வேண்டும்.

அதேநேரம், வெள்ளம் மற்றும் மண்சரிவினை வேடிக்கையாக பார்வையிடுவதை பொதுமக்கள் முற்றாக தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் நாம் கேட்டுக்கொள்கிறோம். இதனால் மட்டும் இதுவரை 18 பேர் பலியாகியுள்ளனர். எனவே, எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு மக்கள் செல்லாதிருப்பதே சிறப்பானதாகும் என்று பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பெரும்பாலான பகுதிகளுக்கு 100 மில்லிமீற்றருக்கும் அதிகமாக மழை பெய்யும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## அகவை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஐக்கிய இலங்கையைக் கட்டி எழுப்புவதற்காக சிறப்பான பங்களிப்பினை வழங்கும் மகாநாயக்க தேருக்கு நவமணியும் அதன் வாழ்த்தினைத் தெரிவிக்கின்றது.

## வெள்ள...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மேற்கொள்வதற்கு கொழும்பு பள்ளிவாயல்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக அவ்வமைப்பின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எம்.அஹ்மத் முபாறக் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் தலைமைக் காரியாலயத்தில் கொழும்பு மஸ்ஜித் சம்மேளனங்களுடன் நடைபெற்ற கூட்டத்தை தொடர்ந்தே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உதவி நடவடிக்கைகளை மேற்கொள்ள கொழும்பில் உள்ள ஒவ்வொரு மஸ்ஜித் நியமிக்கப்பட்டுள்ளது.

கிருளப்பனை, வெள்ளவத்தை பள்ளிகள் களுத்துறை மாவட்டத்தையும், தெஹிவளை பள்ளி மாத்தறை மாவட்டத்தையும், கிரேன்பாஸ், தெமடகொடை பள்ளிகள் கேகாலை மாவட்டத்தையும், கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி பள்ளிகளுக்கு இரத்தினபுரி மாவட்டமும், மாளிகாவத்தை, கொம்பனி வீதி, வத்தளை பள்ளிகளுக்கு கம்பஹா மாவட்டமும் புதுக்கடை, புறக்கோட்டை, மருதானை, மட்டக்குளிய பள்ளிகளுக்கு கொழும்பு மாவட்டமும் பொறுப்புக்கொடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த சில நாட்களாக நிலவி வரும் கால நிலை மாற்றத்தின் காரணமாக பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்டிருப்பதை நாம் எல்லோரும் அறிவோம். எதிர்பாராத தொடர் மழையும் அதன் காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கும், மலைச் சரிவுகளும் என்றுமில்லாதவாறு மக்களை பாதித்துள்ளன. உயிரிழப்புக்களும் பொருட்சேதங்களும் ஏற்பட்டுள்ள நிலையில் தொடர்ந்தும் அவ்வனர்த்தத்தின் பீதி இருந்துவருவதோடு முன்னெச்சரிக்கைகளும் செய்யப்பட்ட வண்ணம் இருக்கின்றன.

காலநிலை மாற்றத்தின் ஆரம்பம் முதல் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா மக்களுக்கு தேவையான வழிகாட்டல்களை அறிவித்து வந்ததுடன், வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜம்இய்யாவின் கிளைகள் ஊடாக ஆரம்பக் கட்ட உதவி நடவடிக்கைகள் செய்யப்பட்டன. இருப்பினும் பாதிக்கப்பட்டோர் தொகை கூடி அனர்த்தத்தின் பாதிப்பு அதிகரித்துக் கொண்டு இருக்கும் நிலையில் ஜம்இய்யா அனைத்து பள்ளிவாயல்களையும், பரோபகாரிகளையும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உதவி செய்ய முன்வருமாறு வேண்டுகோள் விடுக்கின்றது.

# Sports
விளையாட்டுச் செய்திகள்



## சம்பியன் கிண்ண பயிற்சி போட்டி
# நியூசிலாந்தை வென்றது இந்தியா!

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கிடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சம்பியன் கிண்ண கிரிக்கெட் பயிற்சிப் போட்டியில் இந்திய அணி டக்வர்த் லூவிஸ் முறைப்படி45 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.நியூசிலாந்து அணி சார்பில் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய மார்ட்டின் கப்டில் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, நிதானமாக துடுப்பெடுத்தாடிய லூக் ரோன்கி 66 ஓட்டங்களைக் குவித்தார்.எனினும், அடுத்துவந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க சற்றுநிலைத்தாடிய ஜேம்ஸ் நீஷம் ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களை பெற, நியூசிலாந்து அணி கடும் சவாலுக்கு மத்தியில் துடுப்பெடுத்தாடி 189 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுகளையும் இழந்தது. பந்துவீச்சில் சிறப்பாக செயற்பட்ட மொஹமட் சமி மற்றும் புவனேஷ்வர் குமார் தலா 3 விக்கட்டுகளைக் கைப்பற்றினர்.

இந்நிலையில், 190 என்ற இலகுவான வெற்றியிலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 3 விக்கட்டுகளை இழந்து 129 ஓட்டங்களை பெற்ற வேளை போட்டி மழையால் பாதிக்கப்பட்டது. இதனால் போட்டியின் வெற்றி டக்வர்த் லூவிஸ் முறைப்படி இந்திய அணிக்கு வழங்கப்பட்டது.

இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் சிக்கர் தவான் 40 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்க, அஜின்கே ரஹானே 7 ஓட்டங்களை மாத்திரம் பெற்று ஏமாற்றமளித்தார். எனினும், அடுத்து களம் நுளைந்த அணித் தலைவர் விராட் கோஹ்லி நிதானமாக துடுப்பெடுத்தாடி அரைச்சதம் பெற்று 52 ஓட்டங்களையும், மகேந்திர சிங் டோனி 17 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொடுத்தனர்.

இதேவேளை, சம்பியன் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி பங்குபற்றும் 2ஆவது பயிற்சி போட்டி பங்களாதேஷ் அணியுடன் இன்று நடைபெறவுள்ளது.

## ஒருநாள் புதிய தரவரிசை:
# வங்கதேசம் முன்னிலை இலங்கை பின்னடைவு

சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள ஒருநாள் அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் பங்களாதேஷ் அணி 6ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.உலகக்கிண்ணத்தை வென்றுள்ள மூன்று அணிகளை பின்தள்ளி 6ஆவது இடத்துக்கு பங்களாதேஷ் அணி முன்னேறியுள்ளமை இதுவே வரலாற்றின் முதல் தடவையாகும்.



நியூசிலாந்து மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற முக்கோண ஒருநாள் தொடரின் இறுதிப் போட்டியில் பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இலங்கை அணி இவ்வாறு 7ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, பங்களாதேஷ் அணி 93 புள்ளிகளுடன் 6ஆவது இடத்தை பிடித்துள்ளதுடன், தசமப் புள்ளிகள் வித்தியாசத்தில் இலங்கை 93 புள்ளிகளுடன் 7ஆவது இடத்தையும், 88 புள்ளிகளுடன் பாகிஸ்தான் 8ஆவது இடத்தையும் பிடித்துள்ள அதேவேளை, மேற்கிந்திய தீவுகள் அணி 79 புள்ளிகளுடன் 9ஆவது இடத்தை பிடித்துள்ளது.பங்களாதேஷ் அணி ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தரவரிசையில் முதன் முறையாக 6ஆவது இடத்துடன் சம்பின் கிண்ணத்தில் விளையாடவுள்ளதுடன், 2019 உலகக்கிண்ணத்தில் பங்கேற்கும் வாய்ப்பையும் அவ்வணி உறுதிப்படுத்திக் கொண்டது.

எனினும், 2019ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டியிற்கு நேரடியாக தகுதிபெற வேண்டுமாயின் இலங்கை அணி குறித்த இந்த 7ஆவது இடத்தைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

இதன்படி, செப்டம்பர் மாதம் 30ஆம் திகதி வரை ஐசிசி தரப்படுத்தலில் முதல் 7 இடங்களை பிடித்துள்ள அணிகள் மாத்திரமே நேரடியாக உலகக்கிண்ண போட்டிக்கு தகுதி பெறும் வாய்ப்பை பெறுகின்றன.

இந்நிலையில், ஒருநாள் தரவரிசை பட்டியலில் தென்னாபிரிக்க அணி முதலிடத்தில் உள்ளதுடன், அவுஸ்திரேலியா மற்றும் இந்திய அணிகள் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களை பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



சாய்ந்தமருது டஸ்கர்ஸ் விளையாட்டுக்கழகத்தின் புதிய சீருடை அறிமுக விழாவும், மென்பந்து கிரிக்கெட் போட்டியும் அண்மையில் சாய்ந்தமருது பௌசி மைதானத்தில் இடம்பெற்றது. இதன் போது அனுசரணையாளர் சீருடையை கழக மற்றும் அணித் தலைவர்களிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

(எம்.என்.எம். ஸாஹிர்)

## உம்ராவை நிறைவேற்றிய கால்பந்து வீரர் பொக்பா



உலகின் மிகவும் விலை உயர்ந்த கால்பந்து நட்சத்திரமாகக் கருதப்படுகின்ற பிரான்ஸ் நாட்டவரும், மென்செஸ்டர் யுனைடெட் கால்பந்து கழகத்தின் நட்சத்திர வீரருமான போல் பொக்பா ரமழான் மாதத்தை சிறப்பிக்கு முகமாக புனித உம்ரா கடமையை நிறைவேற்றுவதற்கு நேற்றுமுன்தினம் புனித மக்காவிற்குச் சென்றுள்ளார்.

தனது உம்ரா கடமை குறித்து டுவிட்டர் தளத்தில் கருத்து வெளியிட்டுள்ள பொக்பா, இதுபோன்ற புனிதத்தை என்னுடைய வாழ்க்கையில் கண்டதில்லை என பதிவு செய்துள்ளதுடன், உலக முஸ்லிம்களுக்கு ரமழான் வசந்தம் உண்டாகட்டும் எனவும் வாழ்த்தியுள்ளார். எனினும் முஸ்லிம் அல்லாதவராக அவர் இப்புனித கடமையை நிறைவேற்றியுள்ளமை அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.



24 வயதான பொக்பா, சுமார் 4 வருடங்களாக பிரபல ஜுவான்டஸ் அணிக்காக விளையாடியிருந்த நிலையில், இப்பருவத்தில் 114 மில்லியன்களுக்கு மென்செஸ்டர் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டார். இந்நிலையில், கடந்த வாரம் நடைபெற்ற ஐரோப்பிய கிண்ண லீக் கால்பந்து தொடரின் இறுதிப் போட்டியில் எஜெக்ஸ் கழகத்தை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்ற மென்செஸ்டர் யுனைடெட் கழகத்தின் வெற்றிக்கு முக்கிய காரணமாகவும் அவர் விளங்கினார்.



# வடகொரியாவில் மீண்டும் அணுஆயுத சோதனை

ஐ.நா.சபை மற்றும் உலக நாடுகளின் கண்டனங்களை பொருட்படுத்தாமல் வடகொரியா அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் வகையிலான ஏவுகணையை மீண்டும் பரிசோதனை செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்நாட்டு நேரப்படி காலை 7.30 மணியளவில் தெற்கு கடற்பகுதியில் சிறிய ரக அணு ஆயுதங்களை சுமந்து 450 கிலோ மீட்டர் வரை செல்லும் ஏவுகணையை பரிசோதித்துள்ளதாக தகவல் வெளியானது. குறுகிய கால இடைவெளியில் மூன்று ஏவுகணைகளை அந்நாடு பரிசோதித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

வடகொரியா ஏவுகணை பரிசோதனை செய்த சற்று நேரத்திலேயே தென்கொரிய அதிபர் மூன் ஜெ-இன் தலைமையிலான அந்நாட்டின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் கூட்டம் கூட்டப்பட்டு சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

வடகொரியாவின் இந்த செயல் ஐ.நா. விதிமுறைகளை மீறுவதை காட்டுகிறது என ஜப்பான் காட்டமான கருத்துக்களை தெரிவித்துள்ளது. அமெரிக்காவும் வடகொரியாவின் ஏவுகணை சோதனைக்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

# துப்பாக்கி முனையில் கற்பழிக்கப்பட்ட பெண்ணுக்கு மரண தண்டனை விதித்த கட்டப்பஞ்சாயத்து



பாகிஸ்தான் நாட்டில் துப்பாக்கி முனையில் கற்பழிக்கப்பட்ட பெண்ணை, முறைகேடான உறவில் ஈடுபட்டதாக கூறி கல்லால் அடித்து கொலை செய்ய கிராம பஞ்சாயத்து உத்தரவிட்டுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் நாட்டின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ளது ராஜன்புர் என்ற கிராமம். மத அடிப்படைவாதம் நிறைந்த இந்த கிராமத்தில் பெண்களுக்கான பல உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், அண்மையில் 19 வயது இளம்பெண் ஒருவர் தனது உறவினருடன் முறைகேடான உறவில் ஈடுபட்டதாக கூறி அவருக்கு மரண தண்டனை (கல்லால் அடித்து கொல்லுதல்) விதித்து அக்கிராம பஞ்சாயத்து உத்தரவிட்டது.

ஆனால், உண்மையில் நடந்தது என்னவென்றால், அந்த பெண் தூங்கும் சமயத்தில் வீட்டிற்குள் நுழைந்த உறவுக்கார இளைஞன் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி அந்த பெண்ணை கற்பழித்துள்ளான். மேலும், இதை வெளியே சொன்னால் கொன்றுவிடுவதாகவும் மிரட்டியுள்ளான்.

நடந்த உண்மையை அந்த பெண் பஞ்சாயத்தில் கூறியும், அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இதையடுத்து, அந்த கிராமத்தை விட்டு தப்பி ஓடிய அந்த பெண் பொலிஸில் சென்று புகாரளித்தார். புகாரின் பேரில் கிராம பஞ்சாயத்துகாரர்கள் மீது வழக்குப்பதிவு செய்துள்ள பொலிசார், பாதுகாப்பான அரசு விடுதியில் அந்த பெண்ணை தங்க வைத்துள்ளனர்.

# உலகச் செய்திகள்

# நேபாளத்தில் சரக்கு விமான விபத்து:
## இருவர் பலி

நேபாளத்தில் நிகழ்ந்த சரக்கு விமான விபத்தில் விமானிகள் இருவர் உயிரிழந்தனர்.

இதுகுறித்து அதிகாரிகள் தெரிவித்ததாவது:

நேபாளத்தில் சரக்குகளை ஏற்றிச் சென்ற விமானம் டென்ஸிங் - ஹிலாரி விமான நிலையத்தில் சனிக்கிழமை இரவு தரையிறங்கும் போது திடீரென விபத்துக்குள்ளானது. அதிக பனிமூட்டம் காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டது.



அந்த விமானத்தில் விமானி, துணை விமானி மற்றும் கோமா ஏர் விமான நிறுவனத்தைச் சேர்ந்த பிரகயா மகர்ஜான் என்ற பெண் ஊழியர் ஒருவரும் பயணித்துள்ளனர்.

இந்த விபத்தில் மூத்த விமானி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். துணை விமானியும் அந்தப் பெண் ஊழியரும் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். பல மணி நேர போராட்டத்துக்குப் பிறகு சிகிச்சை பலனின்றி துணை விமானி உயிரிழந்தார். பிரகயா மகர்ஜான் அபாய கட்டத்தை தாண்டிவிட்டதாக அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

# குல்பூஷண் ஜாதவ் தூக்குத் தண்டனையை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்

இந்திய கடற்படை முன்னாள் அதிகாரி குல்பூஷண் ஜாதவுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை உடனடியாக நிறைவேற்றக்கோரி பாகிஸ்தான் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் உச்ச நீதிமன்றத்தில் முஸாமில் அலி என்பவர், பாகிஸ்தான் மக்கள் கட்சியின் மூத்த தலைவரும் செனட் அவை முன்னாள் தலைவரும் வழக்குரைஞருமான ஃபரூக் நாயக் மூலம் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில், 'பாகிஸ்தான் ராணுவ நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை எதிர்த்து, குல்பூஷண் ஜாதவ் தரப்பில் மேல்முறையீடு மனு ஏதேனும் கொடுக்கப்பட்டிருந்தால், அதன்மீது விரைந்து முடிவு எடுக்கப்படுவதை உறுதி செய்யும்படி அரசுக்கு உத்தரவிட வேண்டும்; அப்போது மேல்முறையீட்டு மனு நிராகரிக்கப்படும்பட்சத்தில், குல்பூஷண் ஜாதவுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்றும் அரசுக்கு உத்தரவிட வேண்டும்' என கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பலூசிஸ்தான் மாகாணத்தில் குல்பூஷண் ஜாதவ் பாதுகாப்புப் படையினரால் கடந்த ஆண்டு மார்ச் மாதம் 3-ஆம் தேதி கைது செய்யப்பட்டதாக அந்நாட்டு அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈரான் வழியாக பலூசிஸ்தான் மாகாணத்தில் நுழைந்து பாகிஸ்தானுக்கு எதிரான சதிச் செயலில் ஈடுபட்டதாகவும் குற்றச்சாட்டு தெரிவித்தது.

குல்பூஷண் ஜாதவுக்கு எதிரான வழக்கை விசாரித்த பாகிஸ்தான் ராணுவ நீதிமன்றம், அவருக்கு தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இதை எதிர்த்து, நெதர்லாந்து நாட்டின் ஹேக் நகரில் உள்ள ஐ.நா.வின் சர்வதேச நீதிமன்றத்தில் இந்தியா வழக்குத் தொடுத்தது.

இதில் இரு நாடுகளின் வாதத்தையும் கேட்ட சர்வதேச நீதிமன்றம், இவ்வழக்கில் இறுதித் தீர்ப்பு அளிக்கப்படும் வரையிலும் குல்பூஷண் ஜாதவுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை நிறுத்தி வைக்கும்படி பாகிஸ்தானுக்கு உத்தரவிட்டது.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 30th MAY 2017